செம்மொழிக் களம்



முனைவர் மு. பழனியப்பன்

செம்மொழிக் களம்

முனைவர் மு. பழனியப்பன்
பி.லிட்., எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., பி.எட்., பிஜிடிசிஏ.,
இணைப் பேராசிரியர்,
மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (த)
புதுக்கோட்டை

மீனாட்சி நூலகம்
முத்து விலாசம்,
96. லட்சுமி நகர், அரிமழம் சாலை,
புதுக்கோட்டை - 622 003.
தொலைபேசி : 04322 - 26616

நூல் விபரப் பட்டியல்

நூலின் பெயர்	:	**செம்மொழிக் களம்**
ஆசிரியர்	:	முனைவர் மு. பழனியப்பன்
மொழி	:	தமிழ்
நூல் வகை	:	ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
நூல் உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பு ஆண்டு	:	2010
பக்கங்கள்	:	10+102=112
நூல் அளவு	:	டெம்மி
எழுத்து	:	12 புள்ளிகள்
தாள்	:	18.6 கி.கி. மேப்லித்தோ
வெளியீடு	:	மீனாட்சி நூலகம், புதுக்கோட்டை
அச்சு	:	சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி) லிட் 15/2 பி.எஸ்.ஆர். ரோடு, சிவகாசி. தொலைபேசி : 04562 - 223315.
விலை	:	100.00

நூலாசிரியரின் தொடர்பிற்கு

வலைப் பூ முகவரி : manidalblogspot.com

கைபேசி எண் : 9442913985

மின்னஞ்சல் முகவரி : Muppalam2006@gmail.com

அணிந்துரை

தொல்காப்பிய உரைச் செம்மல்,
பேராசிரியர்,
மயிலம் **ஆ. சிவலிங்கனார்**
மயிலம் பொம்மபுர ஆதீனப் புலவர்,
முன்னாள் முதல்வர்,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி,
மயிலம்- 604304

அன்பிற்கினிய நண்பர் பேராசிரியர் முனைவர் **பழ . முத்தப்பனாரின்** மகன் என்ற முழு அடையாளத்தையும் நிரம்பப் பெற்றவரான **முனைவர் மு. பழனியப்பனை** இளமைக் காலந்தொட்டே நன்கறிவேன். கூர்த்த அறிவும் நுண்மாண் நுழைபுலமும் நூலாக்க ஊக்கமும் ஒருங்கே கொண்ட இவரின் இச் **செம்மொழிக்கள** நூல் நல்ல தமிழாராய்ச்சியின் விளைச்சலைக் கொண்டது.

அறுவடை செய்த நெல்லைக் களத்துமேட்டில் அடித்து நெற்களஞ்சியத்தில் சேர்ப்பதுபோல் பழனியப்பன் செம்மொழி வரையறையான தமிழிலக்கிய வயலில் பாடுபட்டதன் அறிவு விளைச்சலைச் செம்மொழிக் களத்தில் பரப்பித் தமிழறிஞர்தம் நெஞ்சக்களத்தில் சேர்த்துள்ள முயற்சியை முதலில் பாராட்டு கின்றேன்.

ஒரு பாடலை அளந்தறிய அது கூறும் அகம் அல்லது புறமாகிய பொருளே காரணமானது என்பதை **அகப்பாடல்களில் புறச் செய்திகள்** என்ற முதல் கட்டுரை விளக்குவது பொதுவானதாக உள்ளது.

கைக்கிளையும் இலக்கணமரபும் என்ற அடுத்த கட்டுரையில் கைக்கிளை யாவது காமம் சாலாத இளம் பெண்ணிடமாகத் தோன்றுவது எனத் தொல் காப்பியர் கூற , பின்னர் வந்த நம்பி அகப்பொருள் காமம் சான்ற இளம் பெண்ணிடமாகத் தோன்றுவது எனக்கூறுவதை வேறாகக் கருதாமல் அதை ஒரு வளர்ச்சி மாற்றமாகக் கருதி விளக்கியிருப்பது சிறப்பாக உள்ளது.

பொதுவாக கைக்கிளைப் பாங்கான பாடல்கள் அகத்திலும், புறத்திலும் காணப்படும் நிலைகளை விளக்கி அத்தகு பாடல்கள் தமிழிலக்கியப் பரப்பில் கலித்தொகையில் மூன்றும், புறநானூற்றில் மூன்றும் ஆக ஆறு பாடல்களில் மட்டுமே காணப்படுகின்றன என கண்டறிந்துள்ள சிறப்பால் பழநியப்பனின் கருத்துத் தேடல் திறனை அறிதற்குச் சான்றாக அமைவது **கைக்கிளையும் சங்க இலக்கியப்பாடல்களும்** என்ற மூன்றாவது கட்டுரையாகும்.

இங்ஙனம் முதல் மூன்று கட்டுரைகளில் அகமும் புறமுமாகிய கருத்து நிரவல்களைக் காட்டி வந்த பின் **இனியவை நாற்பதும் பண்பாட்டுப் போர்க்களமும்** –என்ற கட்டுரை புறத்திற்குரியதாக அமைந்துள்ளது. இதில், இனியவை நாற்பதில் பயிலப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்டு சங்க காலத்தை நோக்கினால் சங்க கால வாழ்வு பொற்கால வாழ்வாகுமா? எனச் சிந்திக்கத் தூண்டுவது போல் எழுதியுள்ள பழனியப்பனின் கருத்தைப் புறந்தள்ள முடியாது. இருப்பினும் தாழ்வுற்ற நிலைகளை நீக்கி மக்களைச் செழுமைப் படுத்த இனியவை நாற்பது முயற்சித்துள்ளது என்பதாக எழுதிக் காட்டும் சமாதானமும் ஏற்புடையதாம் எனலாம்.

பன்முகப் பாங்காக எழுதப்பட்ட, **"சிலப்பதிகாரத்தில் சங்கக் கூறுகள்"** என்ற கட்டுரையில், 'களவின் வழி வாரா மணத்தில் தொடங்கும் சிலப்பதிகாரம், பின் கற்பின் பிரிவான பரத்தையர் பிரிவின் அவலத்திலிருந்து அடுக்கடுக்கான பல நிலைகளை அடைவது பற்றிக் கூறும் பழனியப்பனின் கருத்து வரவேற்புக்கு உரியதாகும். மாதவியைப் பொறுத்த மட்டில் அவள் பரத்தை வாழ்வு வாழா விட்டாலும் அவளின் பிறப்புச் சார்பு அவளை அங்ஙனம் காட்டிக் கொடுப்பதையே பழனியப்பன் "கற்பின் பிரிவான பரத்தையர் பிரிவு" என்பதாகச் சுட்டியுள்ளார் எனக் கற்போர் உணரவேண்டும்.

அடுத்துள்ள **சிலம்பில் உரைநடை** என்ற கட்டுரை ஆராய்ச்சி வன்மை மிகுந்த அருமையான கட்டுரை, உரை என்ற சொல் உரைக்கப்படும் திறனைப் பலவாறாகப் பகுத்துச் சான்றுடன் பகிர்கிறார் பழனியப்பன், மூலநூலாசியர், உரையாசிரியர்களின் கருத்துகளோடு கதாபாத்திரங்கள் உரைத்தல் என்ற வாறெல்லாம் பிரித்துக் கொண்டு ஆயும் முறையால் இக்கட்டுரை, செம்மொழிக் களத்தில் ஊன்றி நிற்பதற்கான சான்றாகப் பழனியப்பன் அவர்களால் தரப்பட்டுள்ளது. இங்ஙனம் உரைபற்றி விளக்கபடுத்துவதால் சிலப்பதிகாரத்தை தமிழின் மூத்த உரை நடைக்காப்பியம் எனலாம் எனக் கட்டுரையாளர் கருதி உரைப்பது தகும்.

கணவன் மனைவியாக வாழும் மனித வாழ்வில் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அமைப்பில் பழைய இலக்கியங்களில் தனிக்குடும்ப வாழ்வியலைக் விலகாத உணர்வைக் கொண்ட அன்பு வாழ்வைப் பற்றி **"தமிழகக் குடும்ப வாழ்க்கை"** என்ற கட்டுரை விவரிக்கின்றது. கால வரிசையில் இன்றைய நிலையில் வரதட்சணை என்ற கடிவாளத்தால் திருமணமே அமையா அவலத்தையும் காணமுடிகிறது என்பதற்கு எனக்கு இராமன் வேண்டாம் தூக்கிக் கொண்டு போகும் இராவணன் கிடைத்தால்போதும் –என்று ஏங்குகிற பெண்ணின் கருத்தைப் படிக்கும்போது நெஞ்சம் நெகிழ்கிறது.

சங்ககாலந்தொட்டுக் காப்பிய காலம் –புராணகாலம் –வரை தமிழர்கள் பயன்படுத்திய போர்ககருவிகளைப் பட்டியலிடும் கட்டுரையாகத் **தமிழர்தம் மரபுசார் போர்கருவிகள்** என்ற கட்டுரை அமைந்துள்ளது.

ஓரதிகாரமாக இருந்தாலும் அது ஒப்பற்ற அதிகாரம் என்று புகழாரம் சூட்டிக் கொள்ளும் திருக்குறளின் ஊழியலை ஒரு பொதுப்பார்வையோடு பரிமாறும் கட்டுரையாக அமைவது **திருக்குறள் ஊழியல் ஒரு பொதுப்பார்வை** என்பது. இதில் கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் , அறிவு முதல் வாதம் என்ற நவீன கருத்து உத்திகளைப் பொருத்தி வள்ளுவரது குறள் முழுவதும் அறிவுசார்ந்த வகையில் வாழவே கூறுவதால் மனிதன் சோம்பி விடக்கூடாது என்ற எச்சரிக்கைக்கான அதிகாரமாக ஊழைக் கொள்ள வேண்டும் என அலசி ஆய்ந்து எழுதி இருப்பது நல்ல சிந்தனையாக உள்ளது.

இந்த ஊழின் தொடர்ச்சியாகவே **இலர், பலரானதற்கான காரணம்** நோலார், என்பதாக வள்ளுவர் கூறுதற்குப் பழனிப்பன், தவம் செய்வார் தம் கருமம் செய்வார் என்ற கருத்தை அமைவாகப் பொருத்திக் காட்டி வெற்றி தோல்விகளை ஒருவர் தாமே தேடிக் கொள்வதாக முடிவு கூறும் கட்டுரையாக அமைந்துள்ளது **'இலர் பலராகிய காரணம்'** என்ற கட்டுரையாகும்.

மனித அறிவு இயற்கையானாலும் அது சுற்றப்புறச் சூழலால் வளர்வது என்ற குறிப்பைச் **சுற்றம் சூழ வாழும் வள்ளுவ நெறிக்** கட்டுரை கூறுகிறது.

நிறைவாக நுகர்வோர் கலாச்சாரப் பண்பை வள்ளுவத்தில் பொருத்திக் காண்பது சிறப்பாகவும் புதுமையானதாகவும் உள்ளது.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கன்வரும் நேர் (813)

என்ற குறட்பொருளை, எதையும் எதிர்பார்த்து வாழக் கூடாது என்பதற்காகக் கூறப்பட்டதாகக் கருதவேண்டும் எனப் பழனியப்பன் நுகர் வோர் கலாச்சாரக் கருத்துக்குப் பொருத்துவது அருமையாக உள்ளது. வாழ்க்கை வியாபார ரீதியானது அன்று என்பதால் நுகர்வின் ஆதிக்கம் குறைய வேண்டும் என்ற உண்மையைச் சமூக அக்கறையோடு விளக்குகிறது **நுகர்வு கலாச்சாரமும் வள்ளுவர் அதற்குத் தரும் மாற்றும்** என்ற இறுதிக்கட்டுரை யாகும்.

இப்படிப் பழமையும் புதுமையும் கலந்த இக்கட்டுரைத் தொகுப்பில் உள்ள ஆய்வுக் கருத்துக்களால் இந்நூல் செம்மொழித் தமிழாய்வுக் களத்தில் முந்தி நிற்கும் தரம் வாய்ந்தது எனப் பாராட்டுகிறேன். புதுவரவுகளைத் தமிழ் மொழிக்குச் சேர்க்கும் பேராசிரியர் முனைவர் **மு.பழனியப்பன்** மேலும் நூல்கள் எழுதிச் சிறக்க வேண்டும். அவரின் அறிவாராய்ச்சிக்கான உரைகல் இந்நூல் என்பதை இதனைப்படிப்போர் உணர்வர் என்பது திண்ணம்.

நூலாக்கம்

தமிழ்மொழியின் வளர்ச்சியில் செம்மொழித்தகுதி என்பது குறிக்கத்தக்க ஒரு திருப்புமுனையாகும். **பரிதிமால் கலைஞர், பாவாணர், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கால்டுவெல்** போன்ற பல அறிஞர்களாலும் முன் மொழியப் பெற்ற செம்மொழித் தகுதி இன்றைக்குத் தமிழ்மொழிக்குக் கைவசமாகியுள்ளது. தமிழுக்குத் துறைதோறும், துறைதோறும் வளமைசேர்த்துத் தொண்டாற்றும் இனிய பணிக்கு இந்தியப் பேரரசு கைகொடுத்திருப்பது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மிக்க ஊக்கத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பண்டைய தமிழ் மக்களின் வாழ்வையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் உலக அளவில் கொண்டுபோய்ச் சேர்க்க பல அரிய பணிகள் இதன்மூலம் தொடங்கப் பெற்றுள்ளன. செம்மொழித் தமிழுக்கு மேலும் வளமையையும், செழுமையையும் கூட்ட ஒவ்வொரு இந்தியரும் தன்னாலான நற்பணிகளைச் செய்வதற்கான காலம் இதுவே ஆகும்.

இவ்வகையில் பண்டை இலக்கியத்தை, அதன் மரபுகளை ஆய்ந்து நோக்க வேண்டிய தேவை அனைவருக்கும் இருக்கின்றது. இந்த அரிய நோக்கத்தில் இந்நூல் உருவாகியுள்ளது.

செம்மொழி மத்திய நிறுவனம் சார்பாக நடைபெற்ற சங்க இலக்கியப் பயிலரங்குகளில் வாசிக்கப்பெற்ற பல கட்டுரைகள் இந்த நூலில் அணி செய்கின்றன. பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியில் நடைபெற்ற பயிலரங்கில் மொழியப் பெற்ற அகப்பாடல்களில் புறச்செய்திகள் என்ற கட்டுரை அப்பயிலரங்கிலேயே பல ஆய்வு மாணவர்களுக்கு ஆய்வுத் தலைப்பாக அமையும் தகுதியைப்பெற்று நின்றது.

விருத்தாசலம், அருள்மிகு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் நடந்த பயிலரங்கில் மொழியப் பெற்ற கைக்கிளை பற்றிய கட்டுரை மிக விரிவானது. அது இரண்டு பகுதிகளாக இந்த நூலில் அணி செய்கின்றது.

குற்றாலம், பராசக்தி கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப் பெற்ற கட்டுரை இனியவை நாற்பதும் பண்பாட்டுப் போர்க்களமும் என்பதாகும். இது சங்கம் மருவிய காலத் தமிழ்ச்சமுகச் சூழலை விளக்கும்படியாக வரையப் பெற்றுள்ளது.

பாண்டிச்சேரி ஆரோவில் தமிழ் மரபு மையம் ஏற்பாடு செய்திருந்த பயிலரங்கில் வாசிக்கப் பெற்ற சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியக் கூறுகள் என்ற கட்டுரை பயிலரங்க பங்கேற்பாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுச் சிறந்தது.

மேலும் தமிழூர் தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியனார் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப் பெற்ற சிலம்பில் உரைநடை என்ற கட்டுரை எழுத்தாளர் சுஜாதா அவர்களால் பாராட்டப் பெற்ற பெருமை உடையதாகும். இக்கட்டுரை குறித்து சுஜாதா அவர்கள் ஆனந்த விகடன் இதழில் குறிப்பிட்டு எழுதியமை இனிப்பான செய்தியாகும்.

அமெரிக்க நகரமான நியு ஜெர்சியில் உள்ள தமிழ்ச்சங்கம் நடத்திய போட்டியில் தேர்வு பெற்ற கட்டுரையாக விளங்குவது தமிழகக் குடும்ப வாழ்க்கை என்ற கட்டுடரை. உலக அளவில் தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வுகளைத் தூக்கிப் பிடிப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் வாசிக்கப் பெற்ற தமிழர் தம் மரபு சார் போர்க்கருவிகள் என்ற கட்டுரை அந்நிறுவனத்தின் தொகுப்பு நூலுள் இடம் பெற்றுச் சிறந்தது. விக்கிப்பீடியா புற இணைப்பாக அது அமைந்து சிறக்கிறது.

திருக்குறள் பற்றிய சிந்தனைகளை என்னுள் உறுதிப்பட்டு எழுவதற்குக் காரணமாக இருக்கும் அமைப்பு **தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின்** உலகத்திருக்குறள் பேரவை என்பதாகும். இப்பேரவையின் மதுரை மாநாட்டு மலரில் வெளிவந்த கட்டுரை இலர் பலராகிய காரணம் என்பதாகும். வேலூர் மலரில் வெளிவந்தகட்டுரை ஊழ் பற்றிச் சிந்திக்க வைத்தது.

இப்பேரவையின் புதுக்கோட்டை கிளை ஆண்டுதோறும் வெளியிடும் சிறப்பு மலரில் திருக்குறள் பற்றிய கட்டுரைகள் இடம் பெறுவது மரபு. அவ்வகையில் நுகர்வுக் கலாச்சாரமும் வள்ளுவர் தரும் தீர்வும் என்ற கட்டுரை எழுதப்பெற்றது.

காஞ்சிபுர மாவட்ட உலகத் திருக்குறள் பேரவையினர் அவர்தம் மலரில் வெளியிட்ட கட்டுரை சுற்றம் சூழ வாழும் நெறி என்பதாகும்.

இவ்வாறு பலப் பல நேரங்களில் செம்மொழிக்களத்தை எனக்கு நுகரும் வாய்ப்பினைத் தமிழுலகம் ஏற்படுத்தித்தந்துள்ளது. தேவை கருதி எழுதப் பெற்றுள்ள இக்கட்டுரைகளில் ஆழ, அகலம் குறையாமல் ஆராய்ச்சியை நடத்திச் சென்றதாக எனக்குள் ஒரு மனநிறைவு உள்ளது. இதே மனநிறைவை நுகரும் வாசகர்களாகிய நீங்களும் பெறவேண்டும்.

இத்தொகுப்பினைப் படித்துச் சுவைத்து பரிசோதித்து அணிந்துரை வழங்கியுள்ள இலக்கணப் புலவர் **ஆ.சிவலிங்கனார்** அவர்களுக்கு மிக்க நன்றி. மயிலம் திருத்தலத்தில் இருந்த காலம் முதல் அவரின் ஆழந்த புலமையை நான் அறிவேன். அவரிடம் அணிந்துரை பெற்று ஒரு நூல் வெளியிட வேண்டும் என்பது என் வாழ்வின் இலக்குகளில் ஒன்று. அதனை இத் தொகுப்பு பெற்றுள்ளது. அதனால் நூலும் பெருமைபெறுகின்றது. நானும் மகிழ்வடைகிறேன்.

இந்த அணிந்துரையைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முன்னை முதல்வர் தமிழாகரர் **தெ. முருகசாமி** அவர்கள். அன்னார் என் நூலினை முழுவதும் வாசித்து அதில் உள்ள பிழைகளையும் திருத்தி உதவினார். மென்மைத் தமிழுக்குச் சொந்தக்காரரான அவருக்கும் என் நன்றி.

மெய்ப்புத் திருத்தத்தில் உடன் இருந்துப் பணிபுரிந்தவர் நண்பர் திரு. **ஞா. சிங்கமுத்து** (தமிழாசிரியர். வேங்கடகுளம்)அவர்கள். என் கல்லூரிக் காலத்து நண்பர்.தற்போது புதுக்கோட்டையில் அவர் இருப்பது எனக்குப் பலவகைகளில் உதவி கரமாக உள்ளது. அவருக்கும் இனிய நன்றி.

இக்கட்டுரைகளின் பலவற்றினை ஏற்று இணையப் பரப்பில் கொண்டு சென்ற இணைய இதழான **திண்ணை.காம்** நிறுவனத் தாருக்கு என் நன்றிகள். இந்நூல் உருவாகக் காரணமான என்தந்தையார் **முனைவர் பழ. முத்தப்பன்,** தாயார் **திருமதி மு. அழகம்மை,** என் மனைவி **திருமதி பழ. விஜயலட்சுமி,** மக்கள் செல்விகள் **பழ. அழகம்மை, பழ. வள்ளியம்மை** ஆகியோருக்கு என் நன்றிகள்

தமிழின் பெருமையை, அதன் தொன்மையை, அதன் மேன்மையை எழுத வரும் வாசிக்க வரும் அனைத்து உள்ளங்களுக்கும் இந்த நூலை காணிக்கை யாக்குகின்றேன்.

அன்புடன்
மு. பழனியப்பன்

பொருளடக்கம்

1

அகப்பாடல்களில் புறச் செய்திகள்

சங்க இலக்கியம் அகம், புறம் என்ற இரு பாடுபொருள்களை உடையது ஆகும். அகம் என்பது மனதின் அக நிகழ்வாகிய காதலை மையப்படுத்துவதாகும். புறம் என்பது புறத்தில் வெளிப்படுவதாகிய பெருமைக்கு உரிய செயல்களை மையமிட்டதாகும்.

அகம் என்பதற்கு போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன்தானே அறிதலின் அகம் (தொல்காப்பியம் இளம்பூரணர் உரை ப.3) என உரைகாணு கின்றார் இளம்பூரணர். அகப் பொருள் என்பது அனுபவிப்பனுக்கே பயன் தரத்தக்கது என்ற நிலையில் இவ்விளக்கம் ஏற்படையது. இருப்பினும் அகப்பாடல் களில் அனுபவிப்பவன் தம்மை அல்லது அனுபவிப்பை அளிப்பவரை அடையாளம் காட்டிவிடக் கூடாது. அதனையே தொல்காப்பிய நூற்பா 'சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்பெறாஅர்' என்று வரையறை செய்கின்றது. சுட்டி ஒருவர் பெயரோ அவரின் மரபுப் பெயரோ வெளிப்பட்டுவிட்டால் அகப் பாடலாக அது இருந்தாலும் புறப்பாடலாகவே கொள்ளப்படும் என்பது அறிஞர் முடிபு. நெடுநல்வாடை நல்ல அகப்பாடல் எனினும் அதனுள் இருக்கும் பாண்டிய மரபை உணர்த்தும் வேப்பிலை இடம்பெற்று விட்டபோது அது அகத்தைக் கடந்துவிட்ட புற நூலாகக் கருதப்படுகின்றது. அதுபோலப் புறநானூற்றில் ஒரு சில பாடல்கள் தன்மையால் அகமாக இருந்தாலும் அதன் தன் வெளிப்பாட்டுத் திறத்தால் புறமாகக் கொண்டுத் தொகுக்கப் பெற்றுள்ளன.

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்
என்னைக்கு நாடு இஃது அன்மையானும

ஆடு ஆடு என்ப ஒருசா ரோரே
ஆடு அன்று என்ப ஒருசா ரோரே
நல்ல பல்லோர் இரு நன் மொழியே
அம் சிலம்ப ஒலிப்ப ஓடி எம் இல்
முழாஅரைப் போந்தைப் பொருந்தி
நின்றுயான் கண்டனன் அவன் ஆடு ஆகுதலே (புறம் 85)

என்பது புறநானூற்றில் தொகுக்கப் பெற்றுள்ள ஒரு பாடல் ஆகும். இப்பாடல் பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாடிய பாடலாகும். இப்பாடலைப் பாடியவர் பெயரோ அல்லது அதன் புறத்தன்மையோ தெரியாமல் மறைத்து வைத்துவிட்டால் இது நல்ல அகப்பாடலாவே இருக்கும். இப்பாடலில் தலைவன் பெயர் சுட்டப் படவில்லை. அவன் தலைவன் எனவே விளிக்கப்படுகிறான். இது அகமரபு. ஆனால் அந்த அகமரபிற்குள் இருக்கும் தன்னை வெளிப்படுத்தும் தன்மை அகத்தின் பொதுமையை ஒழித்துவிடுகிறது.

காதல் என்ற உணர்வினை வெளியிடும் பாடல்கள் அக்காதலுக்கு உரியவர்களின் பெயர்களை வெளிப்படுத்தாமல் நிற்கும் போது அவை உலகப் பொதுமையைப் பெற்றுவிடுகின்றன. மேற் சொன்ன பாடல் உலகப் பொதுமைக்கு இடம் தராமல் தன் அனுபவ வெளிப்பாடாக மட்டும் அமைந்து விடுகின்றது. எனவே இதனை அகப்பாடலாக ஆக்காமல் புறத்திணைப் பாடலாக்கிக் கைக்கிளை என்ற துறையைத் தொகுப்பித்தவர்கள் தந்து தொகுத்துள்ளனர்.

இவ்வாறு அகத்தில் புறமும், புறத்தில் அகமும் மாறி மாறிப் புகும் போக்குகள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. அகத்தின் எல்லை கடக்கும் போது ஒரு பாடல் புறமாகிவிடும். புறத்தின் பக்கம் சென்றுவிடாமல் புறச் செய்திகளை உவமைகள் வாயிலாக நிகழ்வு களாக அகப்பாடல்களில் காட்டப் பெறும் பொழுது இவ்வெல்லை கடக்கப்படுவதில்லை. அகப்பாடலுக்குக் கூடுதல் வளமும் ஏற்பட்டுவிடு கின்றது.

இக்கட்டுரை அகப்பாடல்களில் காணப்பெறும் சில புறச் செய்திகளை முழுமைத் தன்மையுடன் ஆராய்கின்றது. ஒட்டுமொத்த அகப்பாடல்களையும் அணுகும்போது ஒரு சில புறச் செய்திகள் முழுமைபெறுகின்றன. இவ்வாறு முழுமைபெறும் செய்திகளில் இரண்டு குறிக்கத்தக்கனவாக இக்கட்டுரைக்குள் காட்டமுடிகின்றது. ஒரு செய்தி நாலூர்க் கோசர் பற்றியது. மற்றது ஆட்டனத்தி பற்றியது. இதனுடன் இக்கட்டுரைக்கு வலிமைசேர்க்க முல்லைப்பாட்டில் காணப்படும் புறச் செய்திகளும் கையாளப்படுகின்றன.

<u>நாலூர்க்கோசர்</u>

நாலூர்க்கோசர்களைப் பற்றிய செய்தி குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் முழுமைபட கிடைக்கின்றன. நாலூர்க் கோசர் என்பவர்கள் வீரக்குடியினர் ஆவர். இவர்கள் நான்கு ஊர்களில் வாழ்ந்து வந்துள்ளனர். மோகூர் பழையனின் அவையத்தில் இவர்கள் இடம் பெற்றிருந்ததாகக் கருதுவர். இவர்கள் தன் குலப் பெண்ணைக் கொன்ற நன்னனை வஞ்சம் தீர்த்தவர்கள் ஆவர்.

<u>நன்னன்</u>

…… … வென்வேல்
இசை நல் ஈகைக் களிறு வீசு
வண்மகிழ்பாரத்துத் தலைவன் ஆரநன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச்சிலம்பில்
களிமயிற் கலாவத்தன்ன தோளே (அகம் 152)

என்ற நிலையில் நன்னனின் கொடைவளமும், அவன் நாட்டில் உள்ள மயிலின் சிறப்பும் இவ்வகப்பாடலில் எடுத்துரைக்கப்படுகிறது. மயில்தோகை போன்று வளைந்த சுருண்ட கூந்தலை உடையவள் தலைவி என்பதைப் பாராட்ட வந்த பரணர் நன்னன் பற்றிய செய்தியையும் உடன் இயைத்துச் சொல்கிறார்.

இதே பரணர் குறுந்தொகைப் பாடலில் நன்னனின் செயல் ஒன்றில் குறை காணுகின்றார்.

மண்ணிய சென்ற ஔநுதல் அரிவை
பனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடுஅவள் நிறை
பொன்செய்பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை பரிந்த நன்னன் போல
வரையா நிலத்துச் செலீஇயரோ அன்னை!
ஒருநாள் நகை முக விருந்தினன் வந்தென
பகைமுக ஊரின் துஞ்சலோ இவள்

(குறுந்292,குறிஞ்சி,பரணர்)

என்ற இப்பாடலில் நன்னனின் தீமை விவரிக்கப்படுகிறது. அவன் பெண்ணுக்குத் தீமைசெய்ததுபோலத் தலைவியின் தாய் தலைவனைச் சந்திக்கவிடாது இரவும் பகலும் விழிப்புடன் இருப்பதாக இப்பாடல் தாயைக் குறைகூறுகின்றது. தாயைக் குறை கூறினாலும் அவளின் நல்லுள்ளம் அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

அதே போல உலகம் நன்னனைப் பழி சொன்னாலும் நன்னன் தாயுள்ளம் கொண்டவன் என்பதால் இங்குத் தாய்க்கு அவன் உவமையாக்கப் பெற்றுள்ளான்.

இப்பெண் செய்த தவறு பின்வருமாறு. இவள் கோசர் குடியினள். இப்பெண் ஒருமுறை ஆற்றில் குளிக்கச் செல்லும்போது நன்னன் வளர்த்து வைத்திருந்த நெடுநாள் வாழவைக்கும் மாமரத்தின் பிஞ்சொன்று ஆற்றில் எதிர்படுகிறது. அதனை அவள் எடுத்து உண்டுவிடுகிறாள். அதன் உண்மை வலிமை தெரியாது அவள் செய்துவிட்டாள் என்ற போதிலும் இவளின் இச்செய்கை நன்னனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாத்திரம் அவளைக் கொலை செய்யும் அளவிற்குச் செல்லுகின்றது.

இதனைக் கேள்விப்பட்ட கோசர்கள் அப்பெண்ணைக் காக்க எண்ணு கின்றனர். எண்பத்தோரு களிறுகளுடன் பொன்னால் செய்யப் பெற்ற பாவை ஒன்றையும் அவர்கள் அளிக்கின்றனர். இருப்பினும் அவற்றை மறுத்து அந்நன்னன் அப்பெண்ணைக் கொன்றுவிடுகிறான். இதுவே நன்னன் செய்த கொடுமையகின்றது. இக்கொடுமைக்குத் தக்க பதிலடியைக் கோசர்கள் தருகின்றனர். இவர்கள் பற்றிப் பல பாடல்களில் செய்திகள் காணப்படுகின்றன.

கோசர்கள் நியமம் என்னும் ஊரில் வாழ்ந்தவர்கள். அவ்வூர் கடல் போன்ற ஆராவாரத்தினை உடையது. புது வருவாயினையும் உடையது. இரும்பால் செய்யப்பட்ட படைக்கலன்கள் உண்டாக்கிய வடுக்களை உடைய முகத் தினைக் கொண்ட அஞ்சாமையையுடைய கோசர்கள் வாழ்வது. இத்தகைய ஊரினைத் தந்தாலும், அவளின் பெற்றோர் தன்மகளைத் தாரார் என்ற பொருள்பட ஒரு பாடல் அகநானூற்றில் உள்ளது.

பெருங்கடல் முழக்கிற்று ஆகி யாணர்
இரும்பு இடம் படுத்த வடுவடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம் ஆயினும்
உறும் எனக்கொள்குநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே

(அகம்90.,மதுரைமருதன் இளநாகன்,நெய்தல்)

இக்கோசர்கள் அஃதை என்ற மன்னனுக்குப் போரின்போது உதவி புரிந்துள்ளனர் என்பது கல்லாடனார் பாடிய மற்றொரு அகநானூற்றுப்பாடல் வழி தெரியவருகிறது.

மாவீசு வண்மகிழ் அஃதைப் போற்றிகாப்பகை நிறுத்த பல் வேல் கோசர்
(பாலை, கல்லாடனார், அகம் 113)

இவ்வகையில் கோசர் என்ற இனத்தார் வீரமிக்கவர்கள் என்பது அகப்பாடல்கள் வழி தெரியவருகிறது.

பரணர் பாடிய குறுந்தொகைப்பாடல் இதன் அடுத்த நிகழ்வு வளர்ச்சியை எடுத்துரைப்பதாக உள்ளது.

மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய
ஒன்று மொழிக் கோசர்போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே.
(குறுந்தொகை 73, பரணர், குறிஞ்சி)

பெண் கொலை புரிந்த நன்னனைப் பழிவாங்க சூழ்ச்சி செய்தனர் கோசர்கள். இந்நிழ்ச்சி வெற்றி பெற்றதன் விளைவு நன்னன் இறந்து பட்டான். அவனின் இறப்பு பரணருக்கு வருத்தத்தைத் தந்துள்ளது. அதனால் இச்சூழ்ச்சித் திறத்தைக் கேலி செய்யும் வண்ணம் தலைவி பாடுவதாக இப்பாடலை அவர் பாடியுள்ளார்.

கோசர்கள் தன் இனப் பெண்ணைக் கொலை புரிந்ததற்காக நன்னனைப் பழிவாங்க ஒரு சூழ்ச்சியைச் செய்தனர். அந்தச் சூழ்ச்சியால் சில ஆடல் மகளிரை அஃதை என்ற மன்னனிடம் அனுப்புகின்றனர். அவர்களுக்கு அம்மன்னன் நிறைய யானைகளையும் பரிசுப் பொருள்களையும் தருகின்றான். அவ்வாறு பெறப்பட்ட யானைகளைக் கோசர்கள் நன்னனின் காவல் மரமான மாமரத்தில் கட்டி வைக்க ஏற்பாடு செய்கின்றனர். இவ்யானைகள் கட்டி வைத்த கட்டுகளை முறிக்கும் பொருட்டு அந்த மாமரத்தை வேரொடு சாய்த்து விடு கின்றன. இதனால் கோபமுற்ற நன்னன் உடனே இவர்கள் மீது போர் தொடுக்க அப்போரில் அவன் உயிர் விடுகின்றான்.

மாம்பிஞ்சு ஒன்றைத் தின்ற பெண்ணுக்குக் கொலை தண்டனை என்றால் மாமரத்தை அழித்த எங்களுக்கு என்ன தண்டனை என்பதே கோசர்கள் ஏற்படுத்திய சூழ்ச்சியாகும்.

இக்கோசர்களைப் பற்றிய குறிப்பு புறநானூற்றில்
.........வென்வேல்

இளம் பல் கோசர் விளங்கு படை கன்மார்
இகலினர் எறிந்த அகல் இலை முருக்கின்
பெரு மரக்கம்பம் போல
(புறம்169,பாடாண்,காவிரிப்பூம்பட்டிணத்துக் காரிக்கண்ணனார்)

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. இப்பாடல் வழி கோசர்கள் வேல் வீசி படைக்கலம் கற்பர் என்பது மட்டுமேதெரியவருகிறது. ஆனால் அகப்பாடல்கள் வழி அவர்களின் முழு நிலையையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இக்கோசர்களும் ஒரு பெண்ணால் அழிந்தனர். அது பற்றிய செய்தி அகநானூற்றில் கிடைக்கின்றது.

அன்னி மிஞிலி என்ற பெண் கோசர்களை வென்ற நிகழ்வு உவமையாக அகப்பாடலில் இடம் பெறுகின்றது. அன்னி மிஞிலிக்கு கோசர் மறைந்தது மகிழ்வைத் தந்ததைப் போலத் தலைவிக்குத் தலைவன் இன்பம் அளித்தான் எனப் பரணர் பாடுகிறார்.

பரணர் நன்னனின் அன்பை அறிந்தவர். அவன் அழிவின் போது அழுதவர். அவனை அழித்தவர்கள் சூதால் இறந்து பட்டபோது அவர் பெரிதும் மகிழ்ந்துள்ளார். இதன் காரணமாக அவ்வழிவை அவர் அகப்பாடலில் உவமையாக்கி மகிழ்ந்துள்ளார்.

பாசிலை அமனற் பயறு ஆ புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது
ஊர்முதுகோசர் நவைத்த சிறுமையின்
கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள்
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்
மறம் கெழு தானைக் கொள்ள குறும்பியன்
செரு இயல் நல்மான் திதியற்கு உரைத்து அவர்
இன் உயிர் செகுப்பக் கண்டு சினம்
மாறியஅன்னி மி லி போல மெய்ம்மலிந்து
ஆனா உவகையேம் ஆயினெம்
(அகநானூறு.262, குறிஞ்சி ,பரணர்)

இப்பாடலில் பசு ஒன்று கோசர்தம் தட்டைப்பயிறு விளைந்த நிலத்தில் மேய்ந்துவிட அப்பசுவின் சொந்தக்காரியான அன்னிமிஞிலி என்ற பெண்ணின் தந்தையைக் கண்களைக் குத்திக் கோசர்கள் குருடாக்கிவிடுகின்றனர். இக்கொடு-மையைக் கண்ட அன்னி மிஞிலி திதியன் குறும்பியன் ஆகியோருக்குக் கூறி பகையை ஏற்படுத்தி கோசரை வெல்கிறாள். அதுவரை அவள் கலத்தில் உண்ணா

நோன்பும் தூய ஆடை உடுக்கா நோன்பும் நோற்றுவந்தாள். அவளின் மகிழ்வு தலைவியின் மகிழ்விற்கு ஒப்பாக்கப்படுகிறது.

இவ்வாறு கோசர் நன்னன் அன்னிமிஞிலி திதியன் குறும்பியன் போன்ற மன்னர்களின் புறச் செயல்கள் இப்பாடல்களின் பின்னணியில் அகப்பாடல்களில் நின்று வரலாற்றுச் செய்திகளை அறிவிக்கின்றன என்பது எண்ணத்தக்கது.

<u>**ஆட்டனத்தி, ஆதிமந்தி**</u>

ஆதி மந்தி கரிகாலனின்மகள். ஆட்டனத்தி என்பவனைக் காதலித் தாள் ஆட்டனத்தி என்பவன் ஆடுதல் தொழில் தெரிந்தவன். இவனை ஆற்றுவெள்ளம் கொண்டு செல்லும் போது மருதி என்பவள் அதனைக் காட்டி ஆதிமந்திக்கு உண்மையை அறிவிக்கிறாள். அந்த உதவி செய்ததாலே பெருமைபெற்ற அவளைப் போல மழை பொழிந்தது என்று பரணர் ஓர் உவமைவாயிலாக அகப்பாடலில் ஆட்டனத்தியை நினைவு படுத்துகின்றார்.

முழவு முகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டு எழில் பொலிந்த ஏந்து குவவ மொய்ம்பின்
ஆட்டனத்தி நலன் நயந்து உரைஇ
தாழ் இருங் கதுபின் காவிரி வவ்வலின்
மாதிரம் துழைஇ மதி மருண்டு அலந்த
ஆதி மந்தி காதலற் காட்டி
படுகடல்பக்க பாடல் சால் சிறப்பின்
மருதி அன்ன மாண்பகழ் பெறீஇயர்
சென்மோ வாழி தோழி பல்நாள்
உரவு உரும் ஏறொடு மயங்கி
இரவுப் பெயல் பொழிந்த ஈர்ந்தண் ஆறே.

(அகநானூறு 222 குறிஞ்சி, பரணர்)

இப்பாடலில் மருதியின் புகழ் எடுத்துக்காட்டப்படுகிறது. அகம் 76, 135, 236 ஆம் பாடல்களிலும் இதே செய்தியைப் பரணர் பதிய வைக்கின்றார். குறுந்தொகையில் ஆதிமந்தியே தன் அனுபவமகப் பாடியப் பாடல் ஒன்றும் உள்ளது.

மள்ளர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கையானும்
யாண்டும் காணேன் மாண் தக்கோனை

யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்ந்த
பீடு கெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே
(குறுந்தொகை31, மருதம்,ஆதிமந்தி)

இவ்வகையில் அகப்பாடல்களில் தொட்ட தொட்ட இடமெல்லாம் புறச் செய்திகள் நின்று வளமைசேர்க்கின்றன.

<u>முல்லைப்பாட்டு</u>

பத்துப்பாட்டில் உள்ள அகமரபு சார்ந்த முல்லைப்பாட்டும் பல புறச் செய்திகளை உள்ளடக்கி உள்ளது. முல்லைக்குப் புறனான வஞ்சிப் போரை அதன் காட்சிகளை அப்போர்களத்து உள்ளோரை எனப் பலரை அது காட்டு கின்றது. விரிச்சி கேட்டல் என்ற புறத்துறையும் அதனுள் கிடக்கின்றது.

சேண் நாறு பிடவமொடு பைம் பதல் எருக்கி
வேட்டும் பழை அருப்பம் மாட்டி
இடு முட் பரிசை ஏமுற வளைஇப்
படு நீர்ப் புணரியின் பரந்த பாடி
உவலைக் வுரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம் படு கவள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாதுநுதல்துடைத்து
(முல்லைப்பாட்டு, அடி 2534, நப்பூதனார்)

என்று போர்ப்பாசறைக் காட்சி காட்டப்படுகிறது.

எழினி வாங்கிய ஈர் அறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம் பகு மிலேச்சர் உழையர் ஆக
மாண்ட அமர் நசையொடு கண்படை புறாஅது
எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண் கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்ப பதைப்பன்ன பருஉக் கை துமியத்
தேம் பாய் கண்ணி நம் வலம் திருத்திச்
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்தோல்துமிபு
வைந்நுனைப் பகழி முழ்கலின் செவிசாய்த்து

உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்
ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்
(முல்லைப்பாட்டு, அடி 64-73, நப்பூதனார்)

என்று அரசனின் நிலையும் அரச சுற்றத்தின் நிலையும் முல்லைப் பாட்டுள் எடுத்துக்காட்டப்படுகிறது. இத்தகைய காட்சி நயம் புறம் பாடும் நூல்களுள் கூட இல்லை என்பது தெளிவு.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் புறச் செய்திகள் அகப்பாடல்களில் அமைந்துச் சிறப்பினை மிகுவிக்கின்றன . இவற்றைத் தொகுத்துக் காணுகையில் புறச்செய்திகளின் முழுமைதெரியவருகிறது.

இவ்வடிப்படையில் அகப்பாடல்களாகக் காட்டப் பெற்றுள்ள அனைத்துப் பனுவல்களிலும் புறச்செய்திகளைக் காணும் வகையில் எதிர்கால ஆய்வுகள் நிகழ்த்தப்பெறலாம்.

2

கைக்கிளை இலக்கண மரபும், வளர்ச்சியும்

தொல்காப்பிய நெறிப்பட்ட தமிழ் இலக்கண வரலாற்றில் பல மாற்றங்களும், வளர்ச்சிகளும் அவ்வப்போது ஏற்பட்டுள்ளன. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று இலக்கண மரபு ஐந்திலக்கண மரபாகத் தொல்காப்பிய காலத்திலேயே வளர்ச்சி நிலைக்கு எழுந்துவந்தது. இது போன்ற மற்ற இலக்கண மரபுகளும் வளரத் தொடங்கின.

குறிப்பாகச் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை வளர்ச்சி, எட்டு வேற்றுமை உருபுகளின் வளர்ச்சி, முப்பத்திரண்டு அணிகளின் வளர்ச்சி என்பன எழுத்து, சொல், அணி போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சிகளில் குறிக்கத்தக்கன.

இதுபோன்று பொருள் இலக்கணத்திலும் புறப்பொருள் தொல்காப்பியர் காட்டிய ஏழில் இருந்து பன்னிரண்டாக வளர்ச்சி பெற வைக்கப் பெற்றது. ஆனால் அக இலக்கண மரபு வளர்ந்த நிலை என்பது சற்று ஆராயத்தக்கதாகவே இருக்கிறது.

நடுவணது திணை எனப்பட்டதைப் பாலைத்திணையாக்கி ஐந்திணைகளின் பெயரை நிலைப்படுத்திக் கொண்டு வளர்ச்சி காண முடிந்தது. மற்ற நிலைகளில் அக இலக்கண மரபில் சற்றும் மாற்ற இடம் கொடுக்காத நிலை அகப்பொருள் இலக்கணத்தில் காணப்படுகின்றது. அன்பின் ஐந்திணையில் வளர்ச்சிகளைப் புறப் பொருளில் கொண்டு வந்ததைப் போல பின் வந்த பொருள் இலக்கண ஆசிரியர்களால் கொண்டு வர இயலவில்லை.

இருப்பினும் கைக்கிளையில் பல வளர்ச்சிப் படிநிலைகளைப் பொருள் இலக்கண ஆசிரியர்கள் கொண்டு வந்துள்ளனர். பெருந்திணையிலும் இது

போன்ற வளர்ச்சி நிலை உள்ளது என்றபோதும் கைக்கிளைக்கு ஏற்பட்ட வளர்ச்சி குறிக்கத்தக்கதாகும்.

கைக்கிளையை ஒரு திணையாக்கினார் தொல்காப்பியர். இதன்பின் பல வளர்ச்சிகளைக் கண்ட கைக்கிளைத் திணை தனித்த இலக்கிய வகையாக வளரு கின்ற அளவிற்குப் பல்கிப் பெருகியது.

ஒருதலைக்காமம் உரைப்பவை ஐஐந்தாய்
வருவிருத்தம் கைக்கிளையா மன். (வெண்பாப்பாட்டியல் 38)

என்று கைக்கிளையை ஒரு சிற்றிலக்கிய வகையாக தனித்த வளர்ச்சிக்கு வெண்பாப்பாட்டியல் நூல் இட்டுச் சென்றுள்ளது.

இத்தகைய வளர்ச்சி பெற்ற கைக்கிளையின் இலக்கணம் பற்றியும் அதன் நெறிகள் குறித்தும், சால்புகள், மாண்புகள் குறித்தும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

<u>கைக்கிளை குறித்துத் தொல்காப்பியரின் தொடக்கக் கருத்துக்கள்</u>

அன்பின் ஐந்திணைகளுக்குப் பூப் பெயர்களைச் சூட்டிக் குறியீட்டுப் பெயர்களாக வழங்க வைத்த தொல்காப்பியர் கைக்கிளை என்ற தனித்த பெயரையே இதற்கு வழங்கியிருப்பது கருதத்தக்கது. அந்த அளவிற்குத் தனித்துவம் வாய்ந்ததாக கைக்கிளைத் திணை விளங்கியுள்ளது என்பது எண்ணத்தக்கது.

காமம் சாலா இளமையோள் வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும், தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிப் புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே (தொல்காப்பியம் 996)

என்பது தொல்காப்பியர் தரும் கைக்கிளைக்கான இலக்கணம் ஆகும். காமம் சாலாத இளமை உள்ள பெண்ணிடம் சில சொற்களைச் சொல்லி அந்தப் பெண்ணிடம் இருந்து எவ்வித பதில் மொழியையும் பெறாத ஒருதலைக் காமத்தினைக் கைக்கிளை என்கிறார் தொல்காப்பியர்.

இந்த நூற்பாவின் அடுத்த கட்ட வளர்ச்சி என்பது நம்பி அகப் பொருளில் தொடர்கிறது.

காமம் சாலா என்பதை, காமம் சான்ற என்றும் இவ்விலக்கணம் விரித்துக்கொள்கிறது. இப்போது இரு பிரிவுகள் கைக்கிளையில் தோற்றம் கொண்டுவிடுகின்றன.

1. காமம் சாலாத பெண்ணிடம் பேசுதல்
2. காமம் சான்ற பெண்ணிடம் பேசுதல்

என்ற இரண்டு பகுப்பு வளர்ச்சியைக் கைக்கிளை இவ்விடத்தில் பெறுகின்றது.

<u>பகுப்பு -1- அகப்பொருள் கைக்கிளை</u>

காமம் சான்ற இளமையோள் வயின்
குறிப்பு அறிகாறும் குறுகாது நின்று
குறிப்பொடு நெஞ்சொடு கூறல் ஆகும் (நம்பி அகப் பொருள் 29)

என்ற நூற்பாவின்படி காமம் சான்ற இளையவளிடம் தலைவன் அவளின் குறிப்பு அறியக் கிடைக்காமல் அது கிடைக்கும் வரை நெஞ்சுடன் கொள்ளும் தன் ஒருபக்க அன்புநிலை அகப்பொருள் கைக்கிளை என்னும் பகுப்பாகி விடுகின்றது.

குறிப்பு அறியும் வரை நிகழும் தலைவன் பக்கத்துச் செயல்கள் கைக் கிளையானால் அதற்கு முன்னால் உள்ள தெளிதல், ஐயம், காட்சி என்பனவும் கைக்கிளைப் பகுதியாகிவிடுகின்றன.

இதன் காரணமாக களவு தோன்றுவதற்கு முன் அனைத்து உயிர்களிடத் திலும் கைக்கிளை சார்பான ஒழுக்கம் இடம் பெறும் என்ற நிலைக்குக் கைக்கிளை உயர்த்தப்படுகிறது. அன்பின் ஐந்திணைப் பகுப்பில் இருந்து நீக்கப்பட்டிருந்த தொல்காப்பியர் கால கைக்கிளை தற்போது அன்பின் ஐந்திணையின் சார்பு பட இயங்குவதாக வளர்ந்துவிட்டது.

காட்சி, ஐயம், துணிவு குறிப்பு அறிவு என
மாட்சியின் நான்கு வகைத்தே (இலக்கண விளக்கம் 405)

என்று இந்நான்கு நிலைகளும் காதல் தோன்றுவதற்கு முன் ஏற்படும் முன்னேற் பாட்டு நிலைகளாகும். இந்நிலைகளைக் கைக்கிளை என பொருள் இலக்கண நூல்கள் ஏற்கின்றன.

கருத்துணர் வழிநிலைக் காட்சி இறுவாய்
திருத்தரும் கைகிளை எனச் செப்புவர் (மாறன் அலங்காரம்,308)

என்று மாறனலங்காரமும் இதனை ஏற்கிறது.

பகுப்பு -2- அகப்புறக் கைக்கிளை

அகம் சார்ந்த புறம் கூடிய கைக்கிளை என்று மற்றொன்றை வகைப் படுத்திக் கொள்ள முடிகின்றது.

காமம் சாலா இளமையோள் வயின்
குறிப்பு அறிவுறாது குறுகி ஆங்கு அவளொடு
இறப்பக் கூறுவது அகப்புறக் கைக்கிளை (நம்பியகப்பொருள்)

தொல்காப்பியர் சொன்ன கைக்கிளை மரபு பின்வந்த இலக்கண ஆசிரியர்களால் அகப்புறக் கைக்கிளை மரபாக ஏற்கப்பட்டுவிட்டது.

காமன் இறைஎதிர்க் கன்னியைக் காண்டலும்
ஏமுற்றுள் குறிப்பென்னு முன்பு அணுகி
நெறிபயில்நிறை அழிந்தவர் நிகழ்த்துதல்
அறிவழிவுடை அகப்புறக் கைக்கிளை (மாறன் அலங்காரம் , 309)

என மாறனலங்காரம் நம்பியகப் பொருள் வழியைப் பின்பற்றி நிற்கிறது. எனவே தொல்காப்பியர் காட்டிய கைக்கிளை மரபு என்பது புறச்சார்புடைய மரபு என்பது உறுதியாகின்றது. மனதிற்குள் வைத்துக் கொள்ளாமல் பெண்ணிடம் உரைத்து விடுகின்ற காமம் மிக்க நிலையை அகபுறக் கைக்கிளை என்பதாகக் கொள்ளலாம்.

இந்நிலையில் கைக்கிளை இரண்டாகப் பாகுபட்டு நிற்கின்றது. இது தவிர புறத்திற்கே உரிய கைக்கிளை என்ற ஒன்றும் புறப்பொருள் வெண்பா மாலையில் காட்டப் பெற்றுள்ளது.

பகுப்பு -3- புறக்கைக்கிளை

புறத்திணைகளில் கைக்கிளையும் ஒரு திணையாக ஏற்கும் மரபை புறப் பொருள் வெண்பாமாலை ஆக்கிவிடுகின்றது. இதனுள் காட்டப்படும் கைக்கிளை கூற்றுநிலை சார்ந்ததாகக் காட்டப் பெற்றுள்ளது.

ஆண்பால் கூற்றுக் கைக்கிளை, பெண்பால் கூற்றுக் கைக்கிளை என இதனை இரண்டாக அந்நூல் பிரித்து வழங்குகிறது. இதன்மூலம் பலரறிய உரைக்கும் கூற்று முறை உடைய கைக்கிளை புறக் கைக்கிளை என்பது உணரத்தக்கது.

பெண்ணிடம் பேசாது தன் நெஞ்சிடமே பேசும் முறைமைஅகப்பொருள் கைக்கிளை ஆகும். பெண்ணிடம் தலைவன் பேசிப் பதில் பெறாதது அகப் புறக்

கைக்கிளை ஆகும். பெண்ணோ, ஆணோ பலர் அறிய பேசி, தன் காதலை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் ஈடுபட்டால் அது புறக் கைக்கிளை எனப்படுகிறது.

ஆண்பாற் கூற்று - புறக் கைக்கிளை

காட்சி ஐயம் துணிவே உட்கோள்
பயந்தோர் பழிச்சுதல் ஐயம் பாராட்டல்
நயப்புற்று இரங்கல் புணரா இரக்கம்
வெளிப்பட இரத்தல் என இவ்வொன்பதும்
ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை ஆகும்

(புறப்பொருள் வெண்பா மாலை 14)

காட்சி தொடங்கி ஒன்பது வகைக் கூற்றுக்களை உடையதாக ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை புறப்பொருள் வெண்பா மாலைக்குள் அமைக்கப் பெற்றுள்ளது.

பெண்பாற் கூற்று - புறக்கைக்கிளை

காண்டல் நயத்தல் உட்கோள் மெலிதல்
மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்
பகல் முனிவுரைத்தல் இரவு நீடு பருவரல்
கனவின் அரற்றல் நெஞ்சோடுமெலிதல்
பெண்பாற்கூற்றுக் கைக்கிளை ஆகும் (மேலது 15)

இது பெண்பாற்கூற்று கைக்கிளை என்ற பிரிவில் அடங்குகின்றது.

இவ்வாறு மூவகைப்பட்டதாக கைக்கிளை பொருள் இலக்கண ஆசிரியர் களால் வளர்த்தெடுக்கப் பெற்றுள்ளது.

எண்வகை மணத்தில் யாழோர் கூட்டத்தியல்பு எனப்பட்ட காந்தருவம் களவு மணத்திற்கு ஈடானது. அதன்பின் இடம் பெறும் அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய முன்றும் கைக்கிளை கருதிய மணங்கள் என மாறன் அகப்பொருள் மற்றொரு விளக்கத்தைத் தருகின்றது.

அவற்றுள் முறைபெறப் பின்னிகழ் மூன்றும் கைக்கிளை (மாறனகப் பொருள், 13) என்ற இந்நூற்பாவின்படி மேற்சுட்டிய மணங்கள் கைக்கிளைச் சார்புடையன என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு கைக்கிளை பெருவளர்ச்சியை இலக்கண ஆசிரியர்களிடத்தில் பெற்று வளர்ந்து வந்துள்ளது.

<u>மக்கள் நிலையில் வளர்ச்சி</u>

கைக்கிளைக்கு நிலம், பொழுது ஆகிய முதற்பொருள் இல்லை என்ற போதிலும் மக்கள் என்ற கருப்பொருள் தொல்காப்பியத்தில் உணர்த்தப்படுகிறது.

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இல்புறத்து என்மனார் புலவர் (தொல்காப்பியம் - 969)

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமைஅவரும் அன்னார் (தொல்காப்பியம் - 970)

ஆகிய நூற்பாக்கள் கைக்கிளைக்கு உரிய மக்களைத் தொல்காப்பிய நிலையில் எடுத்துரைப்பனவாகும். இந்நூற்பாக்களின் வழி கைக்கிளை ஒழுக்கம் தலைமக்களுக்கு, உயர்ந்தோர்க்கு இல்லை என்பது தெளிவு. ஏவல் மரபினோர், வினைசெய்வோர், அடிமைத்தொழில் புரிவோர் இவர்களுக்கே உரிய திணையாக கைக்கிளை தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளது.

இதன் காரணமாகவே இது சிறுமைபற்றி வந்த ஒழுக்கம் என்பதாகக் கொள்ளப் பெற்றது. காலப் போக்கில் இது உயர்ந்தோர்க்கு உரியதாக ஏற்கப்பட்டுவிட்டது.

மறையோர் மன்னர் வணிகர் சூத்திரர் எனும்
இறையோர் தத்தமக்கு எய்தும் மற்று அதுவே
(நம்பி அகப்பொருள், 30)

என்ற நூற்பா அகப்பொருள் கைக்கிளைக்கு உரிய மாந்தர்களை எடுத்துரைக்கின்றது. இதனுள் நால்வகை வருணத்தார் எனப்படும் உயர்ந்தோர் இடம் பெறுகின்றனர். இதன் காரணமாகச் சிறுமைபற்றி வந்த ஒழுக்கம் பெருமைக்கு உரியோர்க்கும் உரியது என ஏற்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

அதுவே
மொழிந்தோர் நால்வரும் மொழிந்த ஐந்நிலத்துறை
இழிந்தோர் தம்முள் உயர்ந்தோரும் எய்துப (நம்பி அகப்பொருள், 31)

என்ற நூற்பா இழிந்தோருள் உயர்ந்தோருக்குக் கைக்கிளைத் திணை உரியது எனத் தொல்காப்பியத்தை வழிமொழிந்தும் இலக்கணம் வரைந்துள்ளது. இதனை அகப்புறக் கைக்கிளைக்கு உரித்தாக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு கைக்கிளை பெரு வளர்ச்சி நிலை பெற்றுத் தனித்த இலக்கிய வகையாகவும் எண்ணத்தக்க நிலையில் உயர்ந்துள்ளது.

3

கைக்கிளையும் சங்க இலக்கியப் பாடல்களும்

கைக்கிளைத் திணையில் அமைவனவாக மொத்தம் ஆறு பாடல்கள் சங்க இலக்கிய எல்லையில் கிடைக்கின்றன. கலித்தொகையில் மூன்று பாடல் களும், புறநானூற்றில் மூன்றுபாடல்களும் என இவ்வகையில் ஆறு பாடல்கள் கிடைக்கின்றன. இவ்வாறு பாடல்களையும் கைக்கிளைத் திணையுடன் ஒட்டிப் பார்ப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

<u>**கலித்தொகைப் பாடல்கள்**</u>

கலித்தொகையில் உள்ள கைக்கிளைத் திணைப்பாடல்கள் கைக்கிளைத் திணையின் இலக்கணத்தோடு மிகப் பொருத்தம் உடையனவாக உள்ளன.

நீயும் தவறிலை நின்னைப் புறங்கடை
போதர விட்ட நுமரும் தவறு இலர்
நிறை அழிகொல் யானை நீர்க்கு விட்டாங்கு
பறை அறைந்தல்லது செல்லற்க என்னா
இறையே தவறு உடையான் (கலித்தொகை, பாடல்எண். 56)

என்ற பாடலில் தலைவியின் அழகில் மயங்கிய தலைவன் அவள் வருகையில் அவளின் வரவு அறிவிக்க பறை அறிவிக்காத மன்னனே தவற்றினை உடையவன் என முடிகின்றான்.தலைவியின் அழகு அவனை வருத்த அவன் தன் நெஞ்சிற்குக் கூறிய சொற்கள் இவையாகும்.

இனையன கூற இறைஞ்சுபு நிலம் நோக்கி
நினைபுபு நெடிது ஒன்று நினைப்பாள் போல் மற்று ஆங்கே

துணை அமைதோழியர்க்கு அமர்த்த கண்கள்
மனை ஆங்குப் பெயர்ந்தாள் என் அறிவு அகப்படுத்தே
(கலித்தொகை. பாடல்எண். 60)

என்ற இப்பாடலில் தலைவன் பேசுகின்றான். தலைவி எதிர் மொழி கூறாது சென்றுவிடுகிறாள்.

ஒறுப்பின் யான் ஒறுப்பது நுமரை யான் மற்று இந்நோய்
பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பெரிதாயின் பொலங்குழாய்
மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி
நிறுக்குவென் போல்வல்யான் நீ படு பழியே
(கலித்தொகை. பாடல்எண்58)

இப்பாடலில் பயந்தோர் பழிச்சுதல் என்ற ஆண்பாற் கூற்று கைக்கிளை இடம் பெற்றுள்ளது. பெண்ணைப் பெற்ற சுற்றத்தாரை வாழ்த்தும் முறைமை இப்பாடலில் இடம் பெறுகிறது. நிறைவாக வெளிப்பட இரத்தல் என்ற நிலைப்பட்ட மடல் ஏறும் நிலைக்குத் தலைவன் தள்ளப்படுகிறான்.

கைக்கிளை என்று முன்னர் கூறப்பட்ட மூன்று வகைமைக்கும் இம் மூன்று பாடல்கள் இலக்கியமாகின்றன. அதாவது முதலாவதாக நெஞ்சோடு பேசும் அகப்பொருள் கைக்கிளைக்கு முதல் பாடலும், சொல்லி இன்புறும் அகப்புறக் கைக்கிளைக்கு இரண்டாம் பாடலும், வெளிப்பட இரக்கும் புறக் கைக்கிளைக்கு மூன்றாம் பாடலும் இலக்கியமாகின்றன. இருப்பினும் தலைவியை எவ்வகையிலும் துன்பப்படுத்தாத தலைவனின் மாண்பு இங்குக் கவனிக்கத்தக்கது.

மேற்சுட்டிய பாடல்கள் அனைத்தும் குறிஞ்சிக் கலியில் இடம் பெற்றுள்ள பாடல்கள் ஆகும். கபிலரால் பாடப் பெற்ற இப்பாடல்கள் கைக்கிளை நிலையி லேயே துறை வகுத்தவர்களால் அமைக்கப் பெற்றுள்ளது குறிக்கத்தக்கது.

காமம் சாலா இளமையோள் வயின் ஏமம் சாலா இடும்பை எய்தி நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால் தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து, சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே என்பதனால் தருக்கிச் சொல்லி சொல் எதிர் பெறான் இன்புற்றது (கலித்தொகை ப. 235) என இப்பாடல்களுக்குத் துறைவிளக்கம் செய்யப் பெற்றுள்ளது.

தொல்காப்பிய அடிப்படையில் இத்துறை விளக்கம் அமைந்திருந்தாலும் பின் வந்த அகப் பொருள் நூல்களின் இலக்கணச் சார்பில் மூன்று நிலைப்பட்ட கைக்கிளை வகையை இதனுள் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

புறக்கைக்கிளை - பெண்பாற்கூற்றுப் பாடல்கள்

புறநானூற்றில் மூன்று பாடல்கள் கைக்கிளை என்ற பகுப்பில் அமை கின்றன. அவை பின்வருமாறு.

அடிபுனைதொடுகழல் மைஅணல் காளைக்கு என்
தொடி கழித்திடுதல் யான் யாய் அஞ்சுவலே
அடுதோள் முயங்கல் அவை நாணுவலே
என் போல் பெரு வெதுப்புறுக என்றும்
ஒருபாற் படாஅதாகி
இருபாற் பட்ட இம்மையல் ஊரே (புறநானூறு. பா.83)

இப்பாடல் சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமுர் மல்லனைப் பொருது அட்டு நின்றானை பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது ஆகும். (முதல் கட்டுரையின் விரிவாக இந்தப் பகுதியினைக் கொள்ளலாம்.)

இப்பாடலில் காளை போன்ற தலைவனை (கிள்ளியை) எண்ணி தன் கைவளையல்கள் கழன்று போகின்றன. இந்நிகழ்விற்காகத் தாய் தன்னை பழிப்பாளே என கவன்று இவர் உரைக்கிறார். மேலும் தலைவனின் தோளில் முயங்க நான் ஆசை கொள்ளுகின்றேன். ஆனால் பலர் இருக்கும் அவையிடத்து அவன் இருப்பதால் அதைச் செய்ய இயலாது நாணம் தடுக்கிறது. என் இரட்டை நிலை போல இவ்வூரும் இரட்டை நிலை உடையதாக உள்ளது. இதுவும் துன்புறட்டும் என்பதே இப்பாடலின் பொருள் ஆகும்.

என்னை புற்கை உண்டும் பெருந்தோளன்னே
யாமேபுறஞ்சிறை இருந்தும் பொன் அன்னம்மே
போர் எதிர்ந்து என்னைப் போர்க் களம் புகினே
கல்லென் பேர் ஊர் விழவுடை ஆங்கண்
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு
உமணர் வெருஉம் துறையன்னன்னே (புறநானூறு, பாடல்எண். 84)

இப்பாடலில் கிள்ளியின் வீரம் எடுத்துரைக்கப்படுகிறது. அவன் கூழ் உண்டிருக்கிற நிலையைப் பெற்றாலும் அவனின் வீரம் பெருஞ்சிறப்புடையது. அவனைக் கண்ட என் நிறம் பொன் போல் பொலிவு பெற்றுள்ளது. என் தலைவன் போர்க்களம் புகுந்தால் உமணர்கள் வண்டியோட்டிச் செல்லும் வழியில் மேடும் பள்ளமும் இருப்பதால் கொண்டு செல்லும் பொருளுக்கு ஊறு நேருமே என அஞ்சுவதைப்போல எதிரிகள் அஞ்சுவார்கள் என்பதே இப்பாடலின் பொருள் ஆகும்.

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
ஆடு ஆடு என்ப ஒரு சாரோரே
ஆடு அன்று என்ப ஒரு சாரோரே
நல்ல பல்லோர் இரு நன் மொழியே
அம் சிலம்பு ஒலிப்ப ஓடி எம்இல்
முழா அரைப் போந்தை பொருந்தி நின்று
யான் கண்டனன் அவன் ஆடு ஆகுதலே (புறநானூறு, பாடல் எண் 85)

என்ற இப்பாடலில் மல்லனுக்கும் கிள்ளிக்கும் விளைந்த பொருதலில் கிள்ளி வெற்றி பெற்றது குறிக்கப் பெறுகிறது. இதில் கிள்ளியின் ஊர், நாடு இதுவல்ல. அவன் வேறொரு நாட்டில் இருந்து இந்த ஊருக்குச் சூழலால் வந்தவன். இருப்பினும் இவ்வூரில் நடைபெற்ற பொருதுதலில் வென்றான் எனத் தெள்ளிதின் உணர்த்துகிறது. சிலர் இதனை வெற்றியில்லை எனக் கூறினாலும் நான் பனைமரங்களுக்கு இடையில் நின்று அவன் வென்றதைக் கண்டேன் என வெளிப்படுத்துகிறார் நக்கண்ணையார்.

இம்மூன்று பாடல்களில் முதல்பாடலில் மட்டும் அகக்குறிப்பு காணப்படு கிறது. இப்பாடலை பாடினவர், பாடப்பட்டவர் தொடர்பு இன்றிப் பார்த்தால் அருமையான அகப்பாடலாகத் தெரியும். இருப்பினும் இது கைக்கிளைக்குள் அடக்கப் பெற்றுள்ளது.

அடுத்த இருபாடல்கள் கிள்ளியின் வீரத்தைப் பேசுகின்றன. இவை புறம் சார்ந்த பாடல்கள் என்பதில் ஐயமில்லை. "ஊர் கொள்ள வந்த பொருநனொடு ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே" (புறநானூறு பாடல் 82) என்ற சாத்தந்தையார் பாடலும் கிள்ளியின் வீரத்தை உணர்த்துவதே ஆகும்.

இருப்பினும் சங்க இலக்கியப் புலவன் தான் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டாலும், அந்நிகழ்வு குறித்துப் பாடினாலும் அதன் புறத்தே நின்று அணுகும் மேன்மையைப் பெற்றிருந்தான். இதன் காரணமாக சங்கப் பாடல்களில் தற்சார்பு இன்றி புறச் சார்பு இருந்தது. ஆனால் மேற்சுட்டிய மூன்று பாடல்களிலும் தற்சார்பு உள்ளது.

என்தொடி, என் போல் போன்ற தன்மைச் சொற்கள் முதல் பாடலில் இடம் பெற்றுள்ளன. என்னை என்ற சொல் பின்னிரண்டு பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. இதன் தன்சார்பு கருதி இப்பாடல் எழுதியவரின் இருப்பை உணர்த்தி விடுகின்றன.

எழுதியவர் புறத்தே நின்றுப் பாடியிருந்தார் என்றால் இப்பாடல்கள் அகம், புறம் சார்ந்த பாடல்கள் என்ற நிலைக்குச் சென்றிருக்கும்.

வெள்ளிவீதியார், ஆதிமந்தி ஆகியோர்தம் அகப்பாடல்களிலும் தன்மைக்குறிப்பு உண்டு. இவ்விருவருக்கும் கைக்கிளை வயப்பட்ட காதலும் இருந்துள்ளது. இவை வெளிப்படுத்தவும் பட்டுள்ளன.

நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவு அயர்ந்திசினால் யானே (ஔவையார், அகம். 147)

என்பது வெள்ளிவீதியின் ஒருதலைக் காதலைக் குறித்த செய்தியாகும்.

ஆதிமந்தி போல பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ (வெள்ளிவீதியார், அகம் 45)

என்பது ஆதிமந்தி காதலனைத் தேடி அலைந்த நிலையாகும்.

இவ்வடிப்படையில் இவர்களால் பாடப்பெற்ற அகப்பாடல்கள் அகப்பாடல் களாவே கொள்ளப் பெற்றிருக்கின்றன. ஆனால் நக்கண்ணையார் பாடல்கள் புறம் சார் கைக்கிளையாக இறக்கம் செய்யப் பெற்றிருப்பதற்கான காரணங்கள் யாவை என்று அறியவேண்டியுள்ளது.

நக்கண்ணையின் காதல் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். அரச மரபினனான கிள்ளியின் மீது அரச மரபில்லாத பெண் ஒருத்தி காதல் கொண்டுவிட்டாள் என்ற சமூக ஏற்ற இறக்கம் இங்குப் பணியாற்றியிருக்க வேண்டும். இது போன்ற பல காரணங்களால் இவரின் பாடல் கைக்கிளைக்கு இறக்கம் செய்யப் பெற்றிருக்க வேண்டும்.

உள்ளிருக்கும் காதலை பெண்பால் கூற்றாக பிறர் அறியப் பாடலாகத் தந்திருப்பதன் வாயிலாக இவை பெண்கூற்றுக் கைக்கிளைப்பாடல்களாகக் கொள்ளப்பட வேண்டியனவாகிவிட்டன. புறப்பொருள் வெண்பா மாலை நிலையில் இதனை நெஞ்சோடு மெலிதல் என்ற துறைக்கு உரியதாக ஆக்கிக் கொள்ளலாம். பழிச்சுதல் என்ற துறையாகப் புறநானூற்றில் இது இடம் பெறுகிறது.

சங்க இலக்கிய மாண்புகளில் ஒன்று தற்சார்பு படாமல் அகப்பாடல்களை எழுதுவது ஆகும். அதாவது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளா நிலை அகப்பாடலின் மிகச் சிறந்த அடையாளமாகின்றது. இது மீறப்பட்ட நிலையில் அகப்பாடல் புறப்பாடலாக்கப்பட்டுவிடுகிறது.

பெண்பால் சார்ந்த கவிஞர்கள் பாடல்கள் புனைகின்றபோது அவர் களின் பாடல்கள் அவர்களின் வாழ்க்கைப் பாடல்களாகவே ஏற்கப்படுகின்றன என்பதற்கு நக்கண்ணையார் பாடல்களும் சான்றாகின்றன. ஆதிமந்தி, ஔவையார், வெள்ளிவீதியார் பாடல்களும் இவ்வழியில் கொள்ளத்தக்கனவே ஆகும்.

மொத்தத்தில் கைக்கிளைத் திணை ஆண்களுக்கு மட்டுமேஉரியது என்ற நிலையில் இருந்து பெண்களுக்கும் உரியது என்று நெகிழ்கின்ற நிலையைச் சங்ககால எல்லையிலேயே பெற்றவிட்டது எனக் கொள்ளமுடி கின்றது.

4

இனியவை நாற்பதும் பண்பாட்டுப் போர்க்களமும்

தமிழில் நீதி நூல்கள் தோன்றிய காலம் என்பது, கி. பி. 250 முதல் கி.பி. 600 வரையான காலமாகும். இக்காலகட்டத்தைத் தமிழிலக்கிய வரலாறுகள் இருண்ட காலம் என வருணிக்கின்றன. சங்ககாலத் தமிழ் மரபுகளும் பண்பாடு களும் வேறுபட்டு, சிதைந்து பழம்பெருமையும், புதுப்பொலிவும் அற்றுப் போன காலமாக இக்காலம் தமிழிலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் சுட்டப்படுகின்றது.

பாண்டிய நாட்டில் ஏற்பட்ட பன்னிரண்டு ஆண்டுகால வற்கடம் மூன்றாம் சங்கத்தின் அழிவிற்குக் காரணமாகியது. அச்சங்கப் புலவர்கள் பாண்டிய மன்னர் புரத்தல் இன்மையால் வேறுநாடுகளுக்குப் பெயரும் அவலநிலை ஏற்பட்டு, இலக்கிய வறட்சியும் அங்கு நிலவியது. இந்நிலையில் பாண்டிய நாட்டின் மீது களப்பிரர் படையெடுப்பு நிகழ்கிறது. களப்பிரர் என்பார் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்து, அதனைத் தொன்றுதொட்டு ஆட்சி புரிந்து வந்த தமிழ் வேந்தர்களான பாண்டியரைப் போரில் வென்று அவர்கள் நாட்டையும் கைப்பற்றினர் என்ற கருத்தின்படி தமிழ்நாட்டில் மேற்குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்த அரசியல் மாறுபாட்டை உணரமுடிகின்றது. தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டைநாடும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடையில் பல்லவர் ஆட்சிக்குள்ளாயின என்ற சான்றின்படி தமிழகம் முழுவதும் மேல் குறிப்பிட்ட காலத்தில் அயலார் ஆட்சி நிலவியது என்பது தெளிவு.

மேலும் இவ்வயலார் இடையீட்டால் தமிழகத்தில் வேற்றுமொழி வரவும், வேற்றுச் சமய வரவும் பெருகி தமிழ், தமிழர் பண்பாடு, தமிழர் சமயம் முதலியன

புறக்கணிக்கப்பெற்றன. இது குறித்து சதாசிவ பண்டாரத்தார் கடைச்சங்க காலத்திற்குப் பின் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் ஏதிலார் ஆகிய களப்பிரரும், பல்லவரும் தமிழ்நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட காலத்தில் பாலி, பிராகிருதம், வடமொழி ஆகிய பிற மொழிகளும், பௌத்தம், சமணம் ஆகிய புறச்சமயங்களும் எத்துணை உயர்வெய்திப் பெருமையுற்றன என விளங்கும் என்று கருத்துரைக்கின்றார். இதே கருத்தை அடியொற்றி இருண்ட காலத்துத் தமிழகத்தில் தமிழும், தமிழர் சமுதாயமும், தமிழர் பண்பாடும் ஓரளவு புறக்கணிக்கப்பட்டன என்று கருத்துரைக்கிறார் ஆய்வாளர் செல்லம்.

அரசியல், சமய, சமுக மொழி மாறுபாட்டால் பிறழ்ச்சி பெற்றிருந்த இக்காலத்திலும் தமிழ் இலக்கியப் படைப்பு முழுவதும் அற்றுப் போய்விடவில்லை. சமணச் சார்புடைய நீதி நூல்கள், எலிவிருத்தம் , நரிவிருத்தம் , கிளிவிருத்தம் முதலான படைப்புகள் எழும்பின. அவை பண்பாட்டு இருண்ட காலமாக வருணிக்கப்பட்ட காலத் தமிழ்ச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

நூலும் நுவல்பொருளும்

இனியவை நாற்பது மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனரால் இயற்றப்பட்ட இனியவைகளை பட்டியலிடும் வெண்பா யாப்பில் அமைந்த நீதிநூலாகும். இவர் கபிலருக்கும் பின்னவராக , கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருக்கு தரப்பெற்றுள்ள மதுரை, தமிழாசிரியர் முதலான அடைகள் அக்காலச் சூழலைக் கோடிட்டுக் காண்பிப்பனவாகும். வறுமைநிலை கருதி மதுரையினின்று புலவர்கள் வெளியேறிய சூழலில் அங்கிருந்து சென்ற புலவர்கள் வேற்றிடங்களில் தங்கித் தமிழ் நூல்களை யாத்தபோது தன் பெயரோடு மதுரை முதலான அடைகளை இணைத்துக் கொண்டனர் என்பதற்கு மேற்கண்டவை சான்றாகின்றன.

மேலும் இந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், பிரம்மா என்ற முறைமையில் கடவுளர் வணங்கப்பட்டுள்ளமை இன்னும் சில முடிவுகளுக்கு நம்மைஇட்டுச் செல்கின்றது. மதுரைக் கடவுளான சிவபெருமான் முன்னிறுத்தப் படுவதையும், சமண, பௌத்த மதச் சார்பினை விடுத்து கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ளமையையும் காணும்போது சமண, பௌத்த மதங்கள் இந்நூல் ஆசிரியரால் விலக்கப் பெற்றுள்ளமையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஏறக்குறைய இரு நூற்றாண்டுகள் படைப்பு இடைவெளி ஏற்பட்ட நிலையில் அதனைப் போக்கும் காலப் பொழுதில் இனியவை நாற்பது

படைக்கப்பட்டுள்ளது என்பதை நோக்கும் போது அதன் படைப்புத்தன்மை குறிப்பிடத்தக்கப் பண்புகள் கொண்டது என்பது விளங்கும்.

வாழ்விற்கு இனியன, சமுதாயத்திற்கு இனியன, தனிமனிதனுக்கு இனியன ஆகிய அனைத்தையும் தொகுத்தும் வகுத்தும் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இன்னா நாற்பது இதனுடன் அமைப்பு முறையில் ஒன்றிணைந்து செல்கிறது, ஆனால் பொருள் அளவில் எதிர்நிலைப் பட்டதாக உள்ளது. இவற்றை உற்று நோக்கும் பொழுது கருத்து முரண்பாடுகள் சமூக அளவிலும் இலக்கிய அளவிலும் அதிகம் கொண்டதாக இக்காலம் இருந்திருக் கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

<u>சமூகநிலை</u>

இனியவை நாற்பதின் காலத்தில் மக்கள் தமக்குரிய தகுதியோடு வாழ மிகக் கடினப்பட்டுள்ளனர். மலர்தலை உலகத்து மன்னுயிர்க்கெல்லாம் தகுதி யால் வாழ்தல் இனிது (20) என்னும் பாடலடியுள் குறிப்பிடப்படும் தகுதி என்னும் சொல் இங்கு இக்கருத்தை முன்வைப்பதாக உள்ளது.

தகுதியற்ற உலகாக மாறிவிட்ட தமிழகத்தைத் தகுதிப்படுத்த வேண்டிய கட்டத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளமை இதன் மூலம் தெரியவருகிறது. மேலும் இந்நூல் தமிழரைத் தகுதிப்படுத்துவதையே தலையாய நோக்கமாகக் கொண்டு செய்யப் பெற்றுள்ளது என்பதும் தெரிய வருகிறது. காட்சி நிறையில் மனிதரை புல்லா விடுதல் இனிது (125) , சலவரை (வஞ்சகரை)ச் சாராவிடுதல் நன்று (20), மானமழிந்தபின் வாழாமைமுன் இனிதே (13), மனமாண்பில்லாதவையைஞ்சி அகறல் எனை மாண்புந்தான் இனிது (10), கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே (28) என்பன தகுதி கருதிய இந்நூலின் தொடர்களாகும். வாழத்தகுதியற்ற உலகமாக அக்காலத் தமிழகம் இருந்தமையை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றன.

செல்வ நிலையிலும் குறைவுபட்டதாக அக்காலத்தமிழகம் விளங்கி யுள்ளது. பிச்சை புக்குண்பான் பிளிறாமைமுன் இனிதே (39), கடமுண்டு வாழாமைகாண்டல் இனிதே (10), கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே (31), பிச்சை புக்காயினும் கற்றல் மிக இனிதே (1) முதலிய தொடர்கள் தமிழகத்துச் செல்வத் தாழ்நிலையை உரைப்பன. பிச்சைபுகுதலும், கடன்புகுதலும் ஒருவர் வாழ்வையும் மற்றொருவன் தாழ்வையும் உரைப்பன ஆகும்.

ஆட்சிமுறையாலும் தாழ்ந்த தமிழகத்தை இக்காலம் பெற்றிருந்தமை இந்நூல் வாயிலாக அறியமுடிகின்றது. பற்றமையா வேந்தன் கீழ் வாழாமைமுன் இனிதே (32) கோல்கோடி மாராயம் செய்யாமைமுன் இனிது (5) ஆகிய அடிகள் நிலையான அறவாட்சி அக்காலத்தில் நிலவாமையைக் காட்டக் கூடியனவாகும்.

தாழ்வுற்று வறுமைமிஞ்சி, விடுதலைத் தவறிக்கெட்டு நின்ற தமிழகமாக நீதிநூல் காலத் தமிழகம் விளங்கியமைக்கு இந்நூல் செய்திகள் மேலும் அரண் சேர்க்கின்றன.

இச்சூழலில் பண்பாட்டுச் செழுமைமிக்கத் தமிழகத்தை, செல்வச் சிறப்பு மிக்கத் தமிழகத்தை உருவாக்கிட இந்நூல் பல முயற்சிகளை எடுத்துள்ளது.

“பத்தும் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே” என்ற தொடர் தமிழர்க் குரிய தாய்நாட்டினை அவர்களுக்கே உரித்தாக்குகிற தொடராகும். அந்நிய ஆட்சியால் மதுரை விட்டுப் போன சங்கப்புலவர்கள், தமிழ் இலக்கியம் ஆகிய-வற்றை மீட்கும், மீட்ட பெருமைஇத்தொடருக்குள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ‘‘அதர் சென்று வாழாமைஆற்ற இனிதே’’ (11) என்ற தொடருள்ளும் மண்ணுரிமை காக்கப்பட்டுள்ளமைதெளிவு.

தமிழகத்தில் தாழ்ந்து போன கல்வியை மேம்பாடு அடையச் செய்ய இந்நூல் பெரிதும் முயன்றுள்ளது. கற்றலிற் காழினியது இல் (40), கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே (20), கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே (16) , கழகம் அவை அஞ்சான் கல்வி இனிதே(12) என்ற கல்வித் தகுதியைப் பெற இந்நூல் அக்காலத் தமிழகத்தை வழி நடத்தியுள்ளது.

அடுத்ததாக அடக்கமுடைமையைப் பற்றிப் பேசும் இந்நூல் தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகமேல் கொண்டடையானாகல் இனிது(7), ஐவாய வேட்கை அவா அடக்கல் முன் இனிதே (25) முதலானவற்றை அடக்கமாக இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. தந்தையேயானாலும் அவன் அடக்கமில்லாதவனாக இருப்பானாயின் அவனை அடையாமல் இருப்பது நல்லது என்று கூறியிருப் பதன் வாயிலாக நியாயமற்ற நிகழ்வுகள் நிகழும் பொழுது அதுகண்டு வாளா விருத்தல் கூடாது என்ற கருத்து இந்நூலில் காட்டப்பெற்றுள்ளது. இதன் வழியாக மறைமுகமாக அநியாயத்தினை எதிர்க்கும் போக்கு இங்கு சுட்டப் பெற்றுள்ளது எனக் கொள்ளலாம்.

தமிழர் இல்லறவாழ்வு சிறக்கவும் இந்நூல் வழி கூறுகின்றது. முத்தேர் முறுவலார் சொல் இனிது (1), மனைவாழ்க்கை முன் இனிது (2), குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே (12), குழவி தளர் நடைகாண்டல் இனிதே (14), அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே (14) முதலியன இல்லற நெறிக்கான தகுதிகளை உணர்த்தும் தொடர்களாகும்.

தகுதியற்ற தமிழகத்தை எடுத்துக்காட்டி அதே நேரத்தில் தமிழகத்தைத் தகுதி மிக்கதாக்கும் அறிவுரைகளை வழங்கிச் சிறப்பதாக இந்நூல் உள்ளது. தமிழகத்தில் நிகழ்ந்த பண்பாட்டுப் போர்க்களத்தின் சான்றாக இந்நூல் விளங்குகின்றது.

5

சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியக் கூறுகள்

"நமது தமிழ் இலக்கியக் கருவூலத்தில் சிலப்பதிகாரம் ஓர் விலையரிய மாணிக்கமாகும். இதன் அருமைபெருமைகளை நன்றாகத் தெரிந்துணர்த் தவல்ல இலக்கிய மதிப்பு நூல் இன்றுகாறும் வெளிவந்ததில்லை." (வையாபுரிப பிள்ளை, ஆராய்ச்சித் தொகுதி ஏழு, ப. 123) என்பது வையாபுரிப்பிள்ளையின் கருத்தாகும். சிலப்பதிகாரத்தின் செம்மையை இக்கூற்று வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில் சிலப்பதிகாரத்தின் அருமை, பெருமைகளை உணர்த்த வல்ல நல்ல நூல்களைப் படைத்தளிக்க வேண்டியது திறனாய்வாளர்களின் கடமைஎன்பதையும் இக்கருத்துக் கோடிட்டுக் காட்டிவிடுகிறது.

சிலப்பதிகாரம் பற்பல திறனாய்வாளர்கள் ஆராயப்படவேண்டிய அளவிற்கு நுண்மையும், பெருமையும், செம்மையும் உடையது. அதன் முழுமைத் தன்மையை ஒரே திறனாய்வாளரால் கண்டறிந்துக் கூறிவிடஇயலாது. ஒரே நூலுள்ளும் அதன் முழுத் திறனாய்வை அடக்கிவிட இயலாது. சிலப்பதிகாரம் குறித்த பல செய்திகளை, பலரும் திறனாய, பல நூல்களாக அவை வெளிவரச் செய்யப்பட வேண்டும். காலந்தோறும் இந்நூல் பட்டியல் வளர்ந்து கொண்டே போகும். எனவே எல்லையில்லா ஆய்வுக்களமாக சிலப்பதிகாரப் படைப்புக்களம் அமைந்துள்ளது. இப்படைப்புக்களத்தின் முழுமைத் திறனாய்வு என்பதும் எல்லையற்றது என்பதும் கருதத்தக்கது.

இந்தச் சிலப்பதிகாரத் தொடர் திறனாய்வுக் களத்தில் இக்கட்டுரையும் சங்க இலக்கியக் கூறுகளைச் சிலப்பதிகாரத்தில் கண்டு அணி சேர்க்கிறது.

சங்க இலக்கியச் செவ்வியல் மரபைத் தொடர்ந்து எழுந்த காப்பியம் சிலப்பதிகாரம். சங்க இலக்கியங்களில் கலித்தொகையும், பரிபாடலையும் தவிர

மற்ற அனைத்தும் ஆசிரியப்பா யாப்பில் அமைந்தனவாகும். இந்த ஆசிரியப்பா யாப்பு தொடர்ந்து பத்துப்பாட்டின் படைப்பாக்கத்திற்கும், அதன் பொருள் வெளியீட்டிற்கும் உதவியுள்ளது. இந்த ஆசிரியப்பா வகைப்பட்ட படைப்பாக்கத் தொடர்பில் எழுந்த காப்பியநூல் சிலப்பதிகாரம் ஆகும்.

இடையில் சங்கம் மருவிய நூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்தன என்பதைக் கருத்தில் கொண்டுப் பார்க்கையில் சங்க இலக்கியப் பெரும்பான்மை வெளியீட்டு வடிவமான ஆசிரியப்பாவினை இளங்கோவடிகள் தேர்ந்து கொண்டதற்கு அவரின் சங்க இலக்கியப் பயிற்சியே காரணம் என்பது உணரத்தக்கதாகும்.

எளிய, இனிய நிலையில் காப்பியத்தினை அமைத்து, அதற்குள் பாத்திரங்கள் நடமாடவிட ஆசிரியப்பா யாப்புமுறையே அவருக்கு ஏற்ற வடிவமாக இருந்துள்ளது. சங்க இலக்கியப் படைப்பாக்கத்தின் காரணமாக உயர் நிலையைப் பெற்றிருந்த ஆசிரியப்பா யாப்பு வடிவம் சிலப்பதிகாரத்தின் பெரும்பான்மையான வடிவத்திற்கும் உரியதாகி உள்ளது.

வெண்பா, கலிப்பா ஆகியனவும் இவற்றோடு உரைப்பாட்டுமடையும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன என்றாலும் ஆசிரியப்பா யாப்பே சிலப்பதிகாரப் படைப்பாக்கத்தில் பெரிதும் ஏற்கபட்டுள்ளது. கலிப்பா, வெண்பா சார்ந்த பகுதிகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருப்பது அக்காலத்தில் அவையும் புலவர் செய்தற்குரியனவாக இருந்தன என்பது தெரியவருகிறது.

இவ்வகையில் யாப்பு தொடங்கி மற்ற நிலைகளிலும் சிலப்பதிகாரப் படைப்பாக்கத்திற்குப் பெரிதும் சங்க இலக்கியக் கூறுகள் பயன்பட்டுள்ளன என்பது முழுக்க உண்மையாகும்.

சங்க இலக்கியம் காட்டும் பூம்புகார்ச் செய்திகள், மதுரைச் செய்திகள், வஞ்சிச் செய்திகள் அனைத்தும் சங்க இலக்கியச் சாயலுடையன.

களவு வழி வாரா மணத்தில் சிலப்பதிகாரம் தொடங்குகிறது. பின் கற்பின் பிரிவான பரத்தையர் பிரிவில் அவலம் கொள்கிறது. அதன்பின் அதிலிருந்து மீண்டு எழுந்து, பொருள்தேடப் பிரிந்து கொடுமை பெறுகிறது. நிறைவில் கல்லாகித் தெய்வநிலையைப் பெற்றுவிடுகிறது. சங்க இலக்கிய அகமும், புறமும் இணைந்துச் செழிக்கும் காப்பியக் களமாக இவ்வளவில் சிலப்பதிகாரம் விளங்கு கிறது. மேலும் களவினைப் பற்றி எழுத காப்பியக்களத்தில் வாய்ப்பு இல்லை என்ற போதிலும் இளங்கோவடிகள் கானல் வரிப் பகுதியைச் சிறந்தக் களவு இலக்கியமாகப் படைத்துக் கொள்கிறார். இவ்வளவில் அகம், புறம் எனப் பிரிந்து

கிடந்த சங்க இலக்கிய மரபினை ஒருங்கிணைத்து ஒரே நிலைக்குள் இளங்கோவடிகள் கொண்டுவந்துள்ளார் என்பது குறிக்கத்தக்கது.

பல ஆய்வாளர்களும் சங்க இலக்கியக் கூறுகள் நிரம்பியது என்பதை முழுவதுமாக ஏற்கிறார்கள். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், சிதம்பரநாதன் செட்டியார், மார்க்கபந்து சர்மா, த. வடிவேலு, கொ. இராமசாமி, ந. மு. வேங்கடசாமி நாட்டார், இராம. இராமநாதன், பொ. அழகுகிருட்டிணன் போன்ற பல ஆய்வாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தந்து இக்கருத்துக்களின் அடிப்படையில் சங்க இலக்கியக் கூறுகளை உள்ளடக்கியது எனச் சான்றுகளுடன் க. பஞ்சாங்கம் எடுத்துரைக்கிறார். இவர்களது கருத்துக்களின் சாரம் பின் வருமாறு.

1. சங்க காலத்தில் தனிச் செய்யுட்களே இயற்றப்பட்டன. அதுபோலவே சிலப்பதிகாரத்தில் வரும் முப்பது காதைகளும் தனித்தனிச் செய்யுட் களாகவே விளங்குகின்றன என விளக்குவார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்... (தெ. பொ. மீ. குடிமக்கள் காப்பியம், பக். 2239)

2. புறநானூற்றில் வரும் கழாத்தலையார் பாடலின் அமைப்பில் இளங்கோவின் கண்ணகி பற்றிய வருணனை அமைந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறார் அ. சிதம்பரநாதன். (அ. சிதம்பரநாதன், இளங்கோவின் இன்கவி, பக். 6970)

3. சங்க நூற் சாரத்தின் தெளிந்த பிழம்பே சிலப்பதிகாரம் என்பார் மார்க்க பந்து சர்மா. (மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகாரம் ரசனை, ப. 187)

4. இளங்கோ அடிகள் ஊழை வலியுறுத்தும் தன்மையைப் புறநானூற்றுக் கணியன் பூங்குன்றனார் பாடலுடன் ஒப்பிட்டு விளக்குவார் த. வடிவேலு (த. வடிவேலு. பூங்குன்றனும் இளங்கோவும், செந்தமிழ்ச்செல்வி, 27)

5. செங்குட்டுவன் போர்க் கோலம் பூண்டு வெற்றி வாள், கொற்றக் கொடை, வீரமுரசு ஆகியவற்றை நன்னாள் பார்த்து வடதிசை நோக்கிப் புறப்பட விடுத்தனன் என இளங்கோவடிகள் பாடுவதை சங்க இலக்கியப் புறத்திணை மரபின் தொடர்ச்சியாகக் காண்பர் ந.மு. வேங்கடசாமி நாட்டார். (ந. மு. வேங்கட சாமி நாட்டார், இளங்கோவடிகளும் பொருள் இலக்கணமும், செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 8 பரல் 10)

6. இதுபோலவே செங்குட்டுவனின் வட நாட்டுப் படையெடுப்பையும் கண்ணிக்குச் சிலையெடுக்கும் கொள்கையையும் புறத்திணை மரபின் வெளிப்பாடாகக் கொள்வார் இராமநாதன். (இராம. இராமநாதன். சிலம்பில் புறத்திணை, எட்டாம் ஆய்வுக்கோவை, ப. 49)

7. கானல்வரிப் பாடல்கள் அகத்திணை மரபுப்படி அமைந்திருப்பதை தொ. பொ. மீ யின் கானல்வரி விரிவாக விளக்குவது போலவே அழகு கிருட்டிணன் என்பாரும் விளக்குகிறார். (பொ. அழகுக்கிருட்டிணன், சிலப்பதிகாரத்தில் அகத்திணைக் கூறுகள், ஐந்தாம் ஆய்வுக்கோவை, ப. 813) (க. பஞ்சாங்கம், சிலப்பதிகாரத் திறனாய்வுகள் ஒரு பார்வை, பக்.11011)

இப்பட்டியல் தவிர இன்னும் பலரும் இக்கருத்துக்கு வளம் சேர்க்கின்றனர். சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்னையத் தமிழ் இலக்கியம் அகத்திணைப் புறத்திணைப் பாடல்களே என்று தன் சிலப்பதிகாரச் சிந்தனை என்ற நூலில் குறிப்பிடுகிறார் ப. அருணாசலம்.(மேற்கோள், இராம. தட்சிணாமுர்த்தி, சிலப்பதிகாரத்தில் புறத்திணைக் கூறுகள், ப. 19.)

சங்க இலக்கிய மரபை முழுக்க மறுக்காமலும், முழுக்கப் பற்றாமலும் சிலப்பதிகாரத்தை அடிகள் ஆக்கினார் என்று சிலப்பதிகாரத்தின் தனித் தன்மையைப் பேணுகிறார் தட்சிணாமுர்த்தி. (மேலது, ப. 21)

தமிழ் செவ்வியல் மரபின் தொடக்ககால இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் முதன்மைப்படுத்திய மதிப்பீடுகளின் தொடர்ச்சியையே சிலம்பிலும் எதிர் கொள்ள முடிகின்றது. அரசியலில் அறம், ஊழின் வலிமை இவையே சங்கப்பாடல்களில் மீண்டும், மீண்டும் முன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் (பசுமதி (க. ஆ), தமிழ இலக்கிய வரலாற்றில் சிலம்பு, முனைவர் ச.வே. சுப்பிரமணியன், முனைவர் ச. மெய்யப்பன் (ப. ஆ) சிலப்பதிகாரம் பண்பாட்டுச் சுரங்கம் தொகுதி.1. ப. 96)

இவ்வாறு பற்பல நிலைகளில் சங்க இலக்கியக் கூறுகள் சிலப்பதிகாரத்தில் புதைந்து கிடப்பதை ஆய்வாளர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

இக்கட்டுரையில் சங்க இலக்கியக் கூறுகள் மிக நெருங்கி அளவில் ஒன்றுபட்டுக் கிடக்கும் சிலப்பதிகாரப்பகுதிகள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

மாறாத நகர வாழ்க்கை

பூம்புகார், மதுரை, வஞ்சி ஆகிய தமிழகத்தின் மூன்று தலை நகரங்களைச் சிலப்பதிகாரம் ஒருங்கிணைத்துத் தன் காப்பியக் களத்தை நகர்த்திச் செல்கிறது. இந்த மூன்று நகரங்களும் சங்க காலப் பின்புலம் வாய்ந்தவை. குறிப்பாகப் பூம்புகார் பட்டினப்பாலையிலும், மதுரை மதுரைக் காஞ்சியிலும், பரிபாடலிலும், திருமுருகாற்றுப்படையிலும், வஞ்சி சிறுபாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து போன்ற சங்க இலக்கியங்களிலும் காட்டப் பெறுகின்றன. இவற்றை ஒருங்கிணைத்துச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் படைக்கின்றார்.

பூம்புகார்

இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் பூம்புகார் பற்றிய பல செய்திகள் இடம் பெறுகின்றன. மேலும் திருமாவளவன் பற்றிய செய்திகளும் இதனுள் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகுதி அப்படியே பட்டினப்பாலையுடன் ஒன்றுபட்டு நிற்கிறது.

கொழும் பல்குடிச் செழும் பாக்கத்து
குறும் பல் ஊர் (பட்டினப்பாலை 27 – 28)

என்ற பட்டினப்பாலை அடிகளின் விரிவே சிலப்பதிகாரத்தில் காட்டப்படும் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் முதலியன.

குறுந்தொடை நெடும் படிக்கால்
கொடுந்திண்ணை பல் தகைப்பின்
புழைவாயில் போகு இடைக்கழி
மழை தோயும் உயர் மாடத்து... (பட்டினப்பாலை. 142 – 145)

என்று பட்டினப்பாலை காட்டும் மாளிகையின் அமைப்பு, சிலப்பதிகாரத்துள் அப்படியே பொருந்தி நிற்கிறது.

வேயா மாடம், (சிலம்பு. 7),

மரகத மணியோடு வயிரம் குயிற்றிப்
பவளம் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகை (சிலம்பு 148 – 150)

இவ்வாறு மாட மாளிகை கூட கோபுரங்கள் நிறைந்த சங்க கால நகர் நிலையைச் சிலப்பதிகாரத்திலும் காணமுடிகின்றது.

திருமாவளவன் இரு இலக்கியங்களிலும் பெரிதும் பேசப்படுகிறான். அவனின் வெற்றிகளுள் சிறந்த வெற்றி வடபுலத்து வெற்றியாகும். இதனை 'வடவர் வாட' (276) எனக் குறிப்பிடுகிறது பட்டினப்பாலை. சிலப்பதிகாரம் 'இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக் கொடுவரி ஒற்றிக் கொள்கையின் பெயர்வோற்கு' (96 – 97) என்று எடுத்துரைக்கிறது.

இவ்வகையில் பூம்புகார் என்ற நகரத்தின் இயல்பு மாறாது சிலம்பில் தொடர்ந்து வரும் பாங்கு தெளிவாகிறது.

மதுரை

காப்பியக் களத்தில் திருப்புமுனையைத் தந்த ஊர் மதுரையாகும். இவ்வூர் பற்றிச் சங்க இலக்கியங்கள் பல பட பேசுகின்றன.

இதன் கோட்டை அமைப்பினை
செருப்புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்க
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்

(திருமுருகாற்றுப்படை67 – 69)

என்று மதுரைக் கோட்டையின் வாயிலை திருமுருகாற்றுப்படை பல்பொருள் தொங்கும் நிலையில் காணும்.

மிளையும் கிடங்கும், வளைவிற்பொறியும்
கருவிரல் ஊகமும், கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
... கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து

(சிலப்பதிகாரம் 207–217)

இவ்வகையில் சங்கச் சாயல் கொண்ட மதுரையைச் சிலப்பதிகாரத்திலும் காண முடிகின்றது.

இதனையே மதுரைக் காஞ்சி
விண்உற ஓங்கிய பல்புடைப் புரிசை
தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க்கதவின் (மதுரைக்காஞ்சி 352 – 354)

எனப் பாராட்டுகின்றது. இவ்வகையில் மதுரையின் காப்பினை இலக்கியம் கொண்டும் சிலப்பதிகார ஆசான் கணித்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஊர்காண் காதை அப்படியே மதுரைக் காஞ்சி சுட்டும் நாடு, நகர, மக்கள், வீதி, வீட்டு அமைப்பு முறையின் படியெடுப்பாக உள்ளது.

புறஞ்சேரி இறுத்த காதையில் வரும் வையையின் வனப்பு என்ற பகுதி அப்படியே பரிபாடலில் வரும் வையை குறித்த பாடல்களுடன் ஒப்பிட்டு எண்ணத் தக்கதாகும்.

குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
மரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருத்தியும் செண்பக ஓங்கலும்
பாடலம் தன்னொடு பன்மலர் விரிந்து (சிலப்பதிகாரம் 150-155)

என்ற வையை ஆற்றின் வருகை அப்படியே பரிபாடலில் நல்லந்துவனார் பாடும் வையை வனப்புப் பாடலுடன் பொருந்துவதாக உள்ளது.

மாறு மென் மலரும் தாரும் கோதையும்
வேரும் தூரும் காயும் கிழங்கும்
பூரிய மாக்கள் உண்பது மண்டி (வையை 6)

இவ்வகையில் மதுரையின் சங்க கால இயல்பு தொடர்ந்து சிலம்பிலும் பின்பற்றப் பெற்றுள்ளமைதெரியவருகிறது.

<u>வஞ்சி</u>

காப்பியத்தில் கல் கூடம் அமைத்து வரலாற்றையும், காப்பியத்தையும் நிலைப் படுத்திய களம் இதுவாகும்.

பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள ஐந்தாம் பத்தின் நாயகனான செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் எடுத்தவன் ஆவான். அவனைப் பற்றிய பரணரின் பதிவாக விளங்கும் இந்தப் பத்துப்பாடல்கள் இளங்கோவின் இனிய முயற்சிக்கு விதையிட்டிருக்க வேண்டும். பரணரால் பாராட்டப் பட்ட செங்குட்டுவன் இலக்கியப் பதிவை, சிறப்பைப் பெற்றுவிடுகிறான். இலக்கியத்தால் நிலையான இடத்தைப் பெற முடியும் என்ற உயர் எண்ணத்தை இந்தப் பரணரின் பாடல்களே இளங்கோவிற்குத் தந்திருக்க வேண்டும். இம்முறையிலேயே இவர் காப்பியம் படைக்க முற்பட்டிருப்பார்.

கடவுள் பத்தினிக் கல்கோள் வேண்டிக்
கான் நவில் கானம் கணையின் பேரி
ஆரிய அண்ணலை வீட்டிப் பேர் இசை
இன்பல் அருவி கங்கை மண்ணி (ஐந்தாம் பத்தின் பதிகம் 47)

என்ற அடிகளில் இவ்வரசன் கண்ணகிக்குக் கோட்டம் எடுத்து வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது.

தாவாது
வஞ்சினம் முடித்த ஒன்றுமொழி மறவர்
முரசுடைப் பெருஞ்சமத்து அரசுபட கடந்து
வெவ்வர் ஓச்சும் பெருகத் தெவ்வர் (பதிற்றுப்பத்து. 41-:17 20)

என்ற அடிகளில் இவ்வரசன் சொன்ன வஞ்சினத்தைப் போர்வீரர்களும் ஏற்று வெற்றியைத் தேடித் தந்தனர் என்ற குறிப்பு காட்டப் பெற்றுள்ளது.

இந்த வஞ்சினம் என்ன என்பதைக் கூறாது விடுபட்டதனால் இதனையே தனக்குக் களமாக்கிக் கொள்கிறார் இளங்கோவடிகள். இந்த வஞ்சினத்தை வைத்துக் கொண்டு அவர் வடபுலப் போரை முடித்து வைக்கிறார்.

கல்தாரான் எனின்
வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்
முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக்கு அளித்த மகட்பாற் காஞ்சியும்
தென்திசை என்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதிர் ஊன்றிய நீள் பெருங் காஞ்சியும்
நிலவுக் கதிர் அளைந்த நீள் பெருஞ்சென்னி
அலர் மந்தாரமொடு ஆங்கயல் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறல் மாலை
மேம்பட மலைதலும் காண்குவல் ஈவல் (சிலப்பதிகாரம் 130 -140)

என்ற பகுதியில் இந்த வஞ்சினம் இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்படுகிறது.

பதிற்றுப்பத்தினை அடிப்படையாக வைத்துக் காணுகையில் சங்க இலக்கியத்தின் பின்தொடர்வாக அதன் கூறுகளுடன் ஒட்டிச் சிலப்பதிகாரம் செய்யப்பட்டிருப்பது மிகத் தெளிவாகிறது.

நகர அமைப்பு என்பது ஏறக்குறைய மாறாதது. வளரக்கூடியது. இந்நிலையில் புகார், மதுரை, வஞ்சி ஆகிய நகர் சார்ந்த செய்திகளில் சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும் ஒத்துப் போகின்றன என்பது குறிக்கத்தக்கது.

<u>பேகனின் கண்ணகியும், கோவலனின் கண்ணகியும்</u>

கண்ணகி என்ற சிலப்பதிகாரத்தின் தலைமைப் பெண் பாத்திரத்தின் வார்ப்பிற்கும் ஒரு சங்க இலக்கியப் பெண் முன் மாதிரியாக இருந்துள்ளாள். அவளின் பெயரும் கண்ணகி. இக்கண்ணகி பேகன் என்ற மன்னனின் மனைவி ஆவாள். கொடை மடம் பட்ட பேகனும் இவனும் ஒன்றா, வேறா என்ற கருத்து முரண்பாடுகள் இருந்தபோதிலும், இவனின் மனைவியான கண்ணகி சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் கண்ணகியின் வார்ப்பிற்கு மிகச் சரியான முன்மாதிரி ஆவாள்.

பேகன் தன் மனைவியான கண்ணகியை விட்டுவிட்டு மற்றோர் பெண்ணுடன் தன் வாழ்வை நடத்தி வருகிறான். இதுவறியாத புலவர்கள் கண்ணகி

யுடன் பேகன் வாழ்ந்த வீட்டின் முன்புறத்தில் வந்து வாழ்த்திக் கொண்டு நிற்பர். பல நேரம் பாடியும் பேகனும் வரமாட்டான். பொருளும் வாராது. அழுகைச் சத்தம் மட்டும் புலவர்களுக்குக் கேட்கும். ஏனெனில் பேகன் அவ்வில்லத்தில் இல்லாத வருத்தத்தினைக் கண்ணகி தன் அழுகைச் சத்தத்தால் உணர்த்தி, அவன் இல்லாத நிலையில் தான் பொருள் தருவது சிறப்பாகாது என விலக்கி விடுவாள்.

இந்தக் கண்ணகியின் மறு இலக்கிய வடிவமே கோவலனின் கண்ணகி. ஊழ் கண்ணகி வாழ்வில் விளையாடியதோ இல்லையோ பேகனின் கண்ணகி வாழ்வு ஊடாடியுள்ளது என்பது தெளிவு.

வையாவிக் கோப்பெரும் பேகனின் இந்த ஒழுக்கத்தைக் கடிந்துப் பரணர், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகியோர் பாடியுள்ளனர். குறிப்பாக பரணர் மட்டும் மூன்று பாடல்களை பேகனைப் பழித்துப் பாடியுள்ளார். மற்ற இரண்டு பாடல்களால் கொடைத்தன்மையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

பரணர் முன்பே கண்டபடி பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனைப் பாடி அவனின் நட்பைப் பெற்றவர் என்பது இங்குக் காணத்தக்கது. பரணரின் மனத்தைப் பேகனின் செயல் மிகவும் பாதித்ததால் அவர் மூன்று பாடல்களில் இந்தச் சிக்கலைத் தீர்க்க வழி தேடியுள்ளார். பரணரின் அன்பை அண்ணன் செங்குட்டுவன் பெற்றதைப்போல இளங்கோவடிகளும் பெற்றிருக்கவேண்டும். அவரின் பேகன் குறித்த வருத்தம் இளங்கோவடிகளால் உணரப் பெற்றிருக்க வேண்டும். இந்நிலையில் புகழ்ந்து பாடுதல், பழித்துப்பாடுதல் என்ற புலவர் தம் இரண்டு இயல்புகள் குறித்து அரச பரம்பரையரான இளங்கோ உணர்ந்திருக்க வேண்டும். இதன் காரணமாக அவரும் புலவர் இயல்பைப் பெற, இலக்கியப் படைப்பினை ஆக்க முன்வந்திருக்க வேண்டும். இவ்வாறுதான் சிலப்பதிகாரம் எழுந்திருக்க வேண்டும்.

அருளாய் ஆகலோ கொடிதே இருள்வர
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழ நின்
கார் எதிர் கானம் பாடினேமாக
நீல் நறு நெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்து வார் அரிப் பனி பூண் அகம் நனைப்ப
இனைதல் ஆனாளாக இளையோய்
கியையமன் எம் கேள் வெய்யோர்க்கு என
யாம் தற்தொழுதனம் வினவ காந்தள்
முகை புரை விரலின் கண்ணீர் துடையா
யாம் அவன் கிளையரேம் அல்லேம் கேள் இனி
எம் போல் ஒருத்தி நலன் நயந்து என்றும்
வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்

ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல் ஊரானே (புறநானூறு. 144)

என்ற இப்பாடல் சங்க இலக்கியச் சிலப்பதிகாரமாகும். பிறளை நயந்துபோன கணவனை எண்ணி, எண்ணி அவன் விருப்பதிற்கு மாறாக நடக்க விரும்பாத பெண்ணாகச் சிலப்பதிகாரக் கண்ணகியை இளங்கோவடிகள் படைக்க இவளே காரணம்.

இதே சூழலைச் சிலப்பதிகாரக் கண்ணகி வாயிலாகப் படைத்துக் கொள்கிறார் இளங்கோவடிகள்.

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை நும்
பெருமகள் தன்னொடும் பெரும் பெயர்த்தலைத்தாள்
மன்பெருஞ்சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவு இகந்தனனா
அற் புளம் சிறந்தாங்கு அருண்மொழி அளைஇ
எற்பாராட்ட யானகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலுமென்
வாய்அல் முறுவற்க அவர் உள்ளகம் வருந்த
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்
(சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை, 70 – 81)

பேகனின் மனைவிக்கு அருகில் அன்போடு பரணர் நின்றார். கோவலனின் மனைவிக்கு அருகில் கோவலனின் பெற்றோர் நின்றனர். அவளும் அறவோர்க்கு அளிக்க இயலா நிலையில் இருந்தாள். இவளும் அப்படியே. அவளும் கணவனை அழைத்துவர இயலாதவளாய் வீட்டிலே கிடந்தாள். இவளும் இப்படியே. போற்றா ஒழுக்கம் புரிந்தீர் என்று கண்டிக்கும்போக்கினை சிலப்பதி காரக் கண்ணகி பெற்றிருப்பது அவளை விட இவள் உரிமைபெற்றவளான நிலையைக் காட்டுகிறது.

மேலும் பேகன் என்ற அரசனின் மனைவி கண்ணகி அழும் போது புலவர் உள்ளம் அழுதது. கோவலன் என்ற சாதாரண வணிக மகனின் மனைவி கண்ணகி அழும்போது மன்னர் பரம்பரையில் வந்த இளங்கோவின் உள்ளம் அழுகின்றது.

இவ்வாறு சங்க இலக்கியச் சாயல் மிக்க நிலையில் கண்ணகிப் பாத்திரம் படைக்கப் பெற்றுள்ளது.

இது தவிர 'தீம்புளிப்பாகர்' வைத்த குறுந்தொகைத் (167) தலைவியின் இயல்பினைக் கண்ணகி கூறிய 'அமுதம் உண்க அடிகள்' என்ற தொடரில் காண முடிகின்றது.

அதுபோல 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல மேவன செய்யும் புதல்வன் தாய்க்கே' (8) என்ற இயல்பின் மறு நிலையைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது. அதாவது கண்ணகி மக்கட்பேறு பெறாதவள். ஆனால் மாதவி கோவலன் வழியாக அதனைப் பெற்றுவிடுகிறாள். பிள்ளை பெறும் உரிமைபெறாத சங்க கால காதற்பரத்தை சிலப்பதிகாரக் காலத்தில் குழந்தை பெறும் உரிமைபெற்றுள்ளாள். தன் குழந்தைக்குத் தாய் கண்ணகி எனக் காட்டும் அளவிற்கு மாதவியும் கண்ணகியும் முரண்பாடில்லாதவர்களாக இருந்துள்ளார்கள். இதற்குக் காரணம் கோவலன் இருவர் மாட்டும் கொண்டிருந்த உறவின் தன்மையும் அவனின் பண்பும் ஆகும்.

இந்நிலையில் சங்க இலக்கியப் பாத்திரப் பண்புகளை அப்படியே இளங்கோவடிகள் பின்பற்றியுள்ளார் என்பது உறுதியாகின்றது. சங்க இலக்கியத்தின் செவ்வியல் தன்மையும் அதுவே ஆகும்.

<u>நடைமுறைகள்</u>

சிலப்பதிகார நடைமுறைகள் பல அப்படியே சங்க இலக்கியச் சாயலுடன் விளங்குகின்றன. குறிப்பாக முதல்காட்சியான திருமணம் அப்படியே அகநானூற்றுப் பாடல் ஒன்றின் அடிப்படையில் விளங்குவதாக உள்ளது.

கோள் கால் நீங்கிக் கொடு வெண் திங்கள்
கேடு இல் விழப்புகழ் நாள் தலைவந்தென
உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்
பொது செய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர
புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று
வால் இழை மகளிர் நால்வரும் கூடி
கற்பினில் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆகுக என (அகநானூறு. 86)

என்ற பாடலில் இடம் பெற்றுள்ள மண நடைமுறை அப்படியே சிலப்பதிகாரத்தில் வந்துள்ளது. உரோகிணியுடன் திங்கள் சேரும் முதல் நாள் திருமணத்திற்கு நல்ல நாள் எனப் பழந்தமிழர் கருதியுள்ளனர்.

இதே நாளைச் சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகள் தேர்ந்து கொள் கிறார்.

வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை
(சிலப்பதிகாரம்: 50 – 54)

என்ற பகுதியில் சுட்டப்படும் நாள் அகநானூற்றில் காட்டப்பட்ட அதே ரோகிணி நாள் என்பது கருதத்தக்கது. மேலும்

விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
....
முளைக்குட நிரையினர் முகிழ்த்த முரலர்
போதொடு விரி கூந்தல் பொலன் நறுங்கொடி அன்னார்
காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக என ஏந்திச் சின்மலர் கொடு தூவி

என்ற சிலப்பதிகாரப் பகுதியில் வாழ்த்து தெரிவிக்கும் பெண்களும், அவர்கள் வாழ்த்தும் காட்டப் பெற்றுள்ளன. இவை அகநாநூற்றுப்பாடலின் சாயல் கொண்டன என்பது சொல்லவும் வேண்டுவதில்லை.

இவ்வாறு சங்க இலக்கியப் பாடு பொருளை விரித்தும், நயந்தும் இளங்கோவடிகள் பற்பல நிலைகளில் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

6

சிலம்பில் உரைநடை

உரைநடை என்ற சொல் காலத்தால் பிந்தையது, உரைநடை என்ற சொல் பழமையானது என்ற கருத்தைக் கொண்டு உரைநடை வடிவத்தின் பழமையை அறியலாம். செய்யுள் , கவிதை வகையினின்று, உரைநடை வடிவம்- மெல்லப் பிரிந்து, தனித்த வகையாகி, அதனுள் பல உரைநடை இலக்கிய வடிவங்கள் கிளைத்தெழுந்து, அதுமட்டுமில்லாது தற்காலத்தில் உரைநடை உதவியின்றிச் செய்யுளை உணரமுடியாது என்ற அளவிற்குப் பெருமதிப்பை அது பெற்றுள்ளது.

தமிழில், உரைநடையின் எழுச்சி உடனே ஏற்பட்டதல்ல. பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மெல்லக் கருவாகி பின்பே வெடித்தெழுந்துள்ளது. இதற்குப் பலவேறு சான்றுகள் கிடைக்கின்றன.

பாட்டிடை வைத்த குறிப்பினானும்
பாவிற் றெழுந்த கிளவியானும்
பொருளொடு புணராப் பொய்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்
உரைவகை நடையே நான்கென மொழிப

(தொல்காப்பியம், செய்யுளியல், 171)

என்ற தொல்காப்பியரின் நூற்பா தமிழ் உரைநடைவகையின் வகைக்கு கருவாக அமைந்ததாகும். அடுத்ததாக தமிழ் உரைநடை சிலப்பதிகாரத்தில் சிற்றிலை விட்டு முகிழ்க்க ஆரம்பிக்கின்றது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் மற்றோர்க்கு, படிப்போர்க்கு உரைக்கும் முகமாக நாடகப்பாங்கின் கூற்று முறையில் சில உரைநடைப் பகுதிகளைப் படைத்துள்ளார்.

இதற்கு அடுத்த நிலையில் இறையனார் களவியல் உரை அமைகின்றது. இந்நூல் குறித்து இக்கவிதைத்தன்மை சிலப்பதிகார உரைப்பாட்டுமடை போன்றது. தமிழ் உரைநடையின் ஆரம்பகாலத்தை – கவிதை நிலையிலிருந்து உரைநடைக்குத் தமிழ் மாறுகிற ஒரு காலப்பகுதியைக் களவியல் உரைகாட்டு கிறது என்று கருத்துரைக்கின்றார் மு. வரதராசனார்.

உரையாசியர்களின் உரைப் பகுதிகளும் தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியைத் தந்தன. காலப்போக்கில் உரைநடை என்ற வகையை வரையறைகளோடு வளர்த்த பெருமை, மேலை நாட்டாரைச் சேரும். இன்றுவரை வளர்ந்து வந்துள்ள உரைநடையின் வளர்ச்சி யை உரசிப்பார்க்கும்போது சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் உரைநடைப்பகுதிகள் காலவகையாலும், அமைப்புமுறையாலும் மற்ற தமிழ் உரைநடைப் பகுதிகளைவிட முந்தைய ஒன்று என்பது உறுதியாகின்றது. தமிழ் உரைநடை வளர்ச்சியில் சிலப்பதிகார உரைநடையை விடுத்து விட்டுச் செல்ல இயலாது என்கிற நிலையில் சிலப்பதிகார உரைநடை சிறப்பிடம் பெறுகின்றது. அதன் பகுதிகளே தமிழில் மூத்த உரைநடை இலக்கியப் பகுதிகளாகக் கருதத்தக்கன.

சிலப்பதிகாரம் - உரைநடையை உள்ளடக்கிய நூல்

சிலப்பதிகாரம் உரைநடையை உள்ளடக்கிய நூல் என்பதைப் பதிகம் சுட்டுகின்றது. இவ்வாறு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசால் அடிகள் அருள (பதிகம் 86-88) என்ற பதிக அடிகள் இங்கு நோக்கத்தக்கன. இவ்வடிகளுக்குச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் பின்வருமாறு பொருள் கொள்ளுகின்றனர்.

'அரும்பதவுரையாசிரியர் பாட்டும், உரையும் கலந்து வந்த காவியம்' என்றும்,

அடியார்க்கு நல்லார்– 'உரையிடையிட்டனவும், பாட்டுடையனவுமாகிய செய்யுளை'... என்றும்

பெருமழைப்புலவர் 'நாடக வழக்கத்தால் உரைச் செய்யுள்களை இடை யிடையே கொண்டுள்ளதும் நாடகத்திற்கும் இசைக்கும் உரிய பாடல் களையும், இயற்றமிழுக்கேயுரிய செய்யுள்களையுடைய இக்காப்பியத்தை என்க' என்றும்

ஆர். கே. சண்முகம் செட்டியார் 'உரைச் செய்யுளை இடைஇடையே தொடுத்த பாட்டுடைச் செய்யுள்' என்றும் கருதுகின்றனர்.

மேற்கண்டவர்களின் கூற்றுள், சண்முகம் செட்டியாரின் கூற்று மற்றவர் களிடமிருந்து வேறுபாடுடையது. மற்றவர்கள் செய்யுள், இசைப்பாடல்கள், உரைப்பகுதிகள் கலந்த காப்பியமாகச் சிலப்பதிகாரத்தைக் காண, இவர் மட்டும் சிலப்பதிகாரத்தை உரைச் செய்யுளை இடையிடையே கொண்டுள்ள பாட்டுடைச் செய்யுள் என்று காட்டுகின்றார். இதன் மூலம் சிலப்பதிகாரத்தில் உரைநடை யானது செய்யுள் வடிவில் இடம்பெற்றுள்ளது என்ற கருத்தைப் பெறமுடிகின்றது. தற்கால உரைநடையைச் சிலப்பதிகார உரையோடு ஒப்பிடும்போது இளங்கோ வடிகள் பயன்படுத்திய உரைநடை – செய்யுள் சாயலுடையது என்ற கருத்து ஏற்புடையதே.

சிலபத்திகாரம் செய்யுள் அடியாக எழுந்துள்ள காப்பியம் என்பது உறுதி. அதனைச் செய்யுள் காப்பியம், பாடல் இணைந்த காப்பியம், உரை இயைந்த காப்பியம் என்னும் பொருள்பட உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று பதிகத்தில் சுட்டுவதன் மூலம், பதிக ஆசிரியர் எதனைச் சிறப்பிக்க விரும்புகின்றார் என்பது குழப்பமாக உள்ளது.

சிலப்பதிகாரம் காப்பியம் என்பதால் அதனைச் செய்யுளால் இயன்றது எனக் குறிப்பிட வேண்டியது தேவையற்றதாகிவிடுகின்றது. இவ்வளவில் பதிக அடிகள் ஏதேனும் ஒரு சிறப்பு கருதியே இவ்வடியினை எடுத்துக்காட்டியிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதி. அதனை கட்டுரையின் பின்பகுதி விளக்கும். எதுஎவ்வாறு ஆயினும் சிலப்பதிகாரம் உரை இடைஇடையே அமைந்த காப்பியம் என்பதில் மாற்றமில்லை.

<u>சிலம்பில் உரை என்னும் சொல்லும், உரை என்னும் வடிவமும்</u>

சிலப்பதிகாரத்தில் உரை என்ற சொல் மற்றவர்க்கு உரைத்தல் என்ற பொருளில் பல இடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளது. எடுத்துகாட்டாக வழக்குரை காதை என்ற தலைப்பினைச் சுட்டலாம். கண்ணகி வழக்கினை உரைக்கும் பகுதிக்குத் தலைப்பிடப் பெறுகையில் அவளின் உரைக்கும் முறையை முன்னிறுத்தி வழக்குரைகாதை எனப்பட்டது.

கட்டுரைக்காதை என்ற பகுதியில் கட்டுரை என்ற சொல் இடம் பெற்றுள்ளது. மதுராபதி தெய்வம் முன்னை வினைகளைத் தொகுத்து உரைக்கும் காதை கட்டுரைக்காதை ஆகின்றது. இக்காதைக்கான தலைப்பு கூட்டி உரைக்கும் முறை கருதி வைக்கப்பட்டதே அன்றி உரை சார்ந்த நிலையில் வைக்கப்பட வில்லை என்பதை அறிய வேண்டும். மேலும் கட்டுரைக்காதை சிலப்பதிகார உரை வகைகள் எதனையும் தன்னுள் கொண்டமையவில்லை. இப்பகுதி காப்பியத்தில் இடம்பெறும் செய்யுள் அமைதிக்கு ஏற்ப உள்ளது.

மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகியைக் குறித்துக் கூறும் உலவாக் கட்டுரை கண்ணகியின் அழகு என்னும் ஒருபொருள் குறித்த கோவலனின் உரைக் கூற்றுத் தொகுப்பாக விளங்குகின்றது.

இளங்கோவடிகள் ஒருவர் மற்றவர்க்கு நேர்முகமாக கருத்துக்களைத் தொகுத்து உரைப்பதாக காப்பியத்தில் சூழல்கள் அமையும்போது, அவற்றைக் குறிக்க உரை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். காப்பியச் செய்யுள் முறைமைக்கு மாறுபாடின்றி நிகழும் இவ்வுரைகளைக் கூற்றுக்கள் எனக் கொள்வது இங்கு ஒரு தெளிவினை ஏற்படுத்தும்.

மேலும் உரை என்ற போது கூறுவார் ஒருவரும் கேட்பார் ஒருவரும், அல்லது பலரும் சுட்டப்பட்டே உரைக்கப் பெற்றுள்ள பொதுமைஇங்கு நோக்கத் தக்கது. சிலப்பதிகாரமேசீத்தலைச் சாத்தனார் கேட்க, இளங்கோவடிகள் கூறியது என்பதால் சிலப்பதிகாரம் உரைக்கும் நிலையினது என்பது கவனிக்கத்தக்கது.

காப்பியச் செய்யுள் நடையில் அமையாது, அதனினும் நீர்த்த நிலையில் கூற்றாக அமைக்கப்படுவனவே உரைநடை வகையின எனக் கொள்வது சிலம்பில் இடம்பெறும் உரைநடைகள் பற்றியதான சிந்தனையில் ஒரு தெளி-வினை ஏற்படுத்தும். அவ்வகையில் உரை என்ற சொல்லிற்கும், உரை என்ற வடிவிற்கும் வேறுபாடு உண்டு என்பது தெளவாகின்றது. செய்யுள் அடிப்படையில் அமைந்த கூற்று(உரை)ப் பகுதிகளை விடுத்துக் காணும்போது சிலப்பதிகாரத்தில் பின்வரும் இடங்களில் உரைநடைப் பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

<u>சிலம்பில் இடம் பெறும் உரைநடைப்பகுதிகள்</u>

கீழ்க்காணும் உரைநடைப் பகுதிகள் அனைத்தும் இளங்கோவடிகளால் செய்யப் பெற்றனவா என்ற ஐயம் உரையாசிரியர்களிடத்தில் காணப்பெறுகின்றது. அடியார்க்கு நல்லார் அனைத்தும் இளங்கோவடிகளால் செய்யப்பட்டன என்று கருத்தினை முன்வைக்கிறார். பெருமழைப்புலவர் சில உரைப்பகுதிகள் மட்டுமே இளங்கோவடிகளால் படைக்கப்பெற்றன என முடிவு கொள்ளுகின்றார்.

1) பதிகத்திற்கு அடுத்து அமைந்துள்ள உரைபெறு கட்டுரை

2) கானல்வரியில் கோவலன் பாடத்தொடங்கும் நிகழ்வைக் கூறுவதற்கு முன்னதாக அமைந்துள்ள கட்டுரைப்பகுதி

3) கானல்வரியில் மாதவி பாடத்தொடங்கும் நிகழ்வைக் கூறுவதற்கு முன்னதாக அமைந்துள்ள கட்டுரைப்பகுதி

4) புகார்க் காண்ட முடிவில் உள்ள கட்டுரைப்பகுதி

5) ஆய்ச்சியர் குரவையில் இடம்பெறும் உரைப்பாட்டுமடை

6) ஆய்ச்சியர் குரவையில் இடம்பெறும் கருப்பம்

7) வழக்குரை காதையில் வரும் கருப்பம்

8) மதுரைக்காண்ட முடிவில் உள்ளகட்டுரைப் பகுதி

9) குன்றக்குரவையில் இடம்பெறும் உரைப்பாட்டுமடை

10) வஞ்சிக்காண்ட முடிவில் காணப்பெறும் கட்டுரைப்பகுதி

11) நூலின் இறுதியில் இடம்பெறும் நூற்கட்டுரை

உரைபெறுகட்டுரை-இளங்கோவடிகளால் படைக்கப்பட்டதா

'உரைபெறு கட்டுரை என்ற தொடருக்கு உரைத்துப் போகிற கட்டுரை' என்று அரும்பதவுரை பொருள் கொள்ளுகின்றது.

இவை முற்கூறிய கட்டுரைச் செய்யுள் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசாலடிகளருள (பதி 87-8) என்றமையால் காப்பியங்கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புகளும் சில வருமெனக் கொள்க என்பது அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம்.

இதனால் இவ்வுரைபெறு கட்டுரை என்னும் உறுப்பும் இளங்கோவடி களாரே இயற்றியது என்பது அடியார்க்கு நல்லார் கருத்து என்பது அறியப்படும். இதன் கண் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று கள வேள்வியால் சாந்தி செய்ய எனவரும் சொற்றொடரே அடிகளார் இதனைச் செய்திலர் என்பதற்குப் போதிய சான்றாம் என்பது பெருமழைப்புலவரின் மறுப்பு ஆகும்.

இவற்றின் மூலம் உரைபெறு கட்டுரை என்ற பகுதி இளங்கோவடி களால் எழுதப்பெற்றதா என்ற விவாதம் முக்கியமானதாகின்றது. உரைபெறு கட்டுரை பெரும்பாலும் கல்வெட்டுக்களில் காணலாகும் ஓம்படைக் கிளவிகளை ஒத்துள்ளன. அவற்றில் கண்ணகி பாத்திரத்தின் பெருமைகள், அவளைக் காவல்தெய்வமாக்கும் முயற்சிகள் பேசப்பட்டுள்ளன. நூலுக்கு முன்னதான காப்புரையாகவே இது காணப்பெறுகின்றது. தவிர இது இளங்கோவடிகளின் படைப்புச்சாயலைச் சிறிதளவேனும் பெற்றிருக்கவில்லை என்பது கற்ற அளவி லேயே புலப்பட்டு விடுகின்றது. இவை போன்ற கருத்துக்களால் உரைபெறு கட்டுரை இளங்கோவடிகளால் படைக்கப் பெற்றதல்ல என்ற முடிவு உறுதியுடைய தாகின்றது. இதனை இளங்கோவடிகள் படைத்தார் எனக் கொண்டால் உரை

இடையிட்ட பாட்டுடைச்செய்யுள் என்ற முறைமைக்கு, மாறாக உரை முன்னும், இடையும், பின்னும் கொண்ட பாட்டுடைச்செய்யுள் என்று சிலப்பதிகாரக் காப்பியத்திற்குப் புதிதான ஒரு முறைமையை வகுக்க வேண்டிவரும். இவற்றால் இப்பகுதி இளங்கோவடிகளால் எழுதப்படவில்லை என்பது பொருத்தமுடையதா கிறது.

காண்ட இறுதிக் கட்டுரைகள், நூற்கட்டுரை - இளங்கோவடிகளால் படைக்கப்பட்டனவா

ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும் வரையப்பெற்றள்ள கட்டுரைப் பகுதிகள் இளங்கோவடிகளால் செய்யப்பட்டன அல்ல என்பது பெருமழைப் புலவரின் கருத்து.

“இந்நூலின் பதிகத்தை அடுத்துள்ள உரைபெறுகட்டுரையும், ஈண்டு இக்காண்டத்திறுதியிலுள்ள இக்கட்டுரையும் இங்ஙனமேஎஞ்சிய இரண்டு காண்டங்களின் இறுதியிலுள்ள கட்டுரையிரண்டும், நூலிறுதியிலமைந்த நூற்கட்டுரை என்பதும் இளங்கோவடிகளால் செய்யப்படாதன. பிற்காலத்தில் பிறராற் பாடிச் சேர்க்கப்பட்டன என்று கருதுதற்கிடனுளது. ... இக்கட்டுரையகத்தே அடிகளார் இந்நூலில் ஓரிடத்தேனும் கூறப்படாத சகோடம் என்னும் சொல் புணர்க்கப் பட்டிருத்தலும் இதுவும் அடிகளாராற் செய்யப்பட்டதில்லை என்பதற்கு ஓரகச் சான்றாகும்” என்ற மேற்கண்ட உரையாசிரியரின் உரைப்பகுதி இளங்கோ வடிகளால் எழுதப்படாத உரைநடைப்பகுதிகள் குறித்து தெளிவுபடுத்துகின்றது.

காண்டங்களின் பின்பகுதியல் அமைந்துள்ள கட்டுரைப்பகுதிகள் மூன்றும் தொடக்க வரிகளால் ஒப்புமையுடையினவாக உள்ளன. முடியுடை வேந்தர் மூவருள்ளும் (புகார், வஞ்சி) முடிகெழுவேந்தர் மூவருள்ளும் (மதுரை)– இவை அக்கட்டுரைப்பகுதிகளின் தொடக்க வரிகளாகும். மேலும் பதிகத்துள் காணப்படும். முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியது என்ற பதிகஅடிகளும் மேற்கண்டவையோடு ஒப்புநோக்கத்தக்கது. இவற்றுக்குள் காணப்படும் ஒற்றுமைபதிக காலத்தில், இவை தோற்றம் பெற்றிருக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய ஐயப்பாடுகளுக்கிடையில் பெருமழைப்புலவரின் சந்தேகத்–திற்கிடமான உரைநடைப் பகுதிகளை விடுத்து மற்றவையே இளங்கோவடிகளால் எழுதப்பட்டன என்று கொள்வது இங்கு பொருந்துவதா கின்றது.

மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் விலக்கப் பெற்ற பகுதிகள் தவிர மற்ற பகுதிகள் உரைநடை வகைச் சாயலுடையன என்பதில் ஐயமேதுமில்லை. கட்டுரை, உரைப்பாட்டுமடை, கருப்பம் ஆகியன சிலப்பதிகார

உரை நடை வகைகளாகக் கொள்ளத்தக்கன. இவை குறித்த விளக்கங்கள் இவற்றின் பண்பை அறிய உதவும்.

கட்டுரை

இதற்கு அரும்பதவுரையிலும், அடியார்க்கு நல்லார் உரையிலும் விளக்கம் இடம்பெறவில்லை. பொருள் பொதிந்த உரைநடையால் இயன்ற செய்யுள் என்று பெருமழைப் புலவர் உரைகாணுகின்றார். பொருள் பொதிந்த, என்பதற்கு ஏதேனும் ஒரு பொருள் பற்றியதான ஒருவரின் கூற்று எனக் கொள்வது சிறப்பாகும். கானல்வரியில் இடம்பெறும் கட்டுரைப்பகுதிகள் ஆசிரியர் கூற்றின் பாற்பட்டதாக ஒரு பொருள் பற்றியதாக அமைந்துள்ளமை கருதத்தக்கது. இப்பகுதி செய்யுள் வடிவத்தினின்று சற்று தாழ்வான செறி-வுடையது என்பது கவனிக்கத்தக்கது.

உரைப்பாட்டுமடை

உரை போன்ற நடையமைந்த பாட்டினை இடையிலே மடுத்தது, உரையாகிய பாட்டை இடையிலே மடுப்பது என்பது பெருமழைப்புலவரின் விளக்கமாகும். ஆய்ச்சியர் குரவையுள் மாதரி தன் மகளை அழைத்து உரைக்கும் பகுதியாக பாட்டுமடைகள் இடம்பெறுகின்றன. வரப்போகின்ற தீங்கு குறித்ததான முன் அறிவிப்பாக மூன்று நிமித்தங்களை இப்பகுதி விளக்கு கின்றது. குன்றக்குரவையின் தொடக்கப் பகுதியிலும் உரைப்பாட்டுமடை இடம்பெறுகின்றது. குருவி யோப்பியும் எனத் தொடங்கும் இப்பகுதி கண்ணகியை குன்றத்தோர் வினவுவதாகவும், அதற்கு அவள் பதில் உரைப்பதாகவும் அமைந்துள்ளது. இவை இசைப்பாட்டு வடிவத்தினின்று சற்று தாழ்ந்து அமைந்தவை என்பது கவனிக்கத்தக்கது.

கருப்பம்

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கருப்பம் என்ற பகுதி உரைவகையின் பாற்பட்ட ஒன்றாகக் கருதத்தக்கது. இதற்கான விளக்கத்தை இவை எல்லாம் பின்வரும் கேட்டிற்கு முதலாம் , இத்தீநிமித்தமெல்லாம் இனிவரும் கேட்டிற்குக் கருக்கள் ஆம் என்று விளக்கம் தருகிறார் பெருமழைப்புலவர். கருப்பப்பகுதிகள் பெரும்பாலும் முன் உரைத்த பகுதியின் மறுபதிவாக, செய்யுள் நடைப்பட்ட உரைநடையாக இயற்றப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் சிலப்பதிகாரத்தில் உரைப்பாட்டுமடை, கட்டுரை, கருப்பம் ஆகிய மூன்று உரைநடைப்பகுதிகள் எவ்விதமாறுபாடும் இன்றி

உரையாசிரியர்கள் அனைவராலும் இளங்கோவடிகளால் செய்யப்பட்டன என்று ஏற்கப்பெற்றுள்ளமைதெரியவருகின்றது.

கட்டுரை என்பது செய்யுள் வடிவத்தில் ஒரு பொருள் குறித்து, தொகுத்து, ஒருவரால் மற்றொருவருக்கு உரைக்கப்பெறும் பகுதி என்ற கருத்தினைச் சிலப்பதிகார கட்டுரைப்பகுதிகளை ஒருங்கிணைத்துக் காணும்போது பெற முடிகின்றது.

உரைபாட்டுமடை என்பது பாட்டு வடிவில் ஒரு பொருள் குறித்து ஒருவரால் மற்றொருவருக்கு உரைக்கப் பெறும் பகுதி என்ற முடிவை உரைபாட்டு மடைப்பகுதிகளை ஒருங்கிணைத்துக் காணும் போது பெறமுடிகின்றது.

கருப்பம் என்பது முன்னர் கூறப்பட்ட ஒன்றின் மறுபதிப்பாக உரைநடை வயப்பட்டுக் கதைக்கருவாக அமைவது என்பது கருதத்தக்கது.

இக்கருத்துக்களை அடியொற்றி சிலப்பதிகார உரை என்பதைப் பின்வரும் நிலைகளில் பகுப்பாகப்பெறலாம். பதிக ஆசிரியர் குறிப்பிட்ட உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற அடியை உரையிடையிட்ட செய்யுள், உரையிடையிட்ட பாட்டு என இருவகைப்படுத்திப் பகுத்துக் கொள்ள வேண்டும்.

சிலப்பதிகார உரை வகையின் தகுதிகள்

'காப்பியம் தொய்வின்றிச் செல்ல வடிவ அமைப்பின் செய்யுள் உத்திகள் உதவுகின்றனவெனின், தொடர்புக் கண்ணிகளமைக்கவும், செய்திகள் வழங்கவும், கருத்தழுத்தம் தரவும் உரைநடை உதவுகின்றது' என்று சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் உரைநடையைக் காப்பிய உத்தியின் ஒரு பகுதியாக ச. வே. சுப்பிர மணியம் கருதுகின்றார். இவ்வளவில் செய்யுள் நிலைக்கு அடுத்ததான இடத்தைச் சிலப்பதிகாரத்தில் உரைநடை பெறுகின்றது என்பது கருதத்தக்கது.

கட்டுரைப்பகுதியின் உரைநடைத்தகுதி

சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல்வனப்பெய்திப்
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பு மென்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுதுவாங்கிப்

பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக்கு என்று நாட்டிய
எண்வகையால் இசையெழீஇப்
பண்வகையால் பரிவுதீர்த்து
மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏருடைப் பட்டடை யென இசையோர் வகுத்த
பட்டவகைதன் செவியின் ஓர்த்து
எவலன்பின் பாணியாதெனக்
கோவலன் கையாழ் நீட்ட அவனும்
காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்

(கானல்வரி 1)

ஆங்குக் கானல்வரிப் பாடல்கேட்ட மான் நெடுங்கண் மாதவியும்
மன்னுமோர் குறிப்புண்டிவன் தன்னிலை மயங்கினானெனக்
கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கித்
தானுமோர் குறிப்பினள் போல் கானல்வரிப்பாடல்பாணி
நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக்
கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத் தொடங்குமன்

(கானல்வரி 24)

இவ்விரு கட்டுரைப்பகுதிகளும் அமைப்புமுறையில் சிலம்புச் செய்யுள் வகைபோல அமையவில்லை. மாறாக அதனின்று அளவாலும், கட்டமைப்பாலும் இளகிய வடிவுடையனவாக உள்ளன. இவ்வுரைப்பகுதியில் எதுகை மோனை நடையைக் காணமுடிகின்றது. உவமைகள் இடம்பெறுகின்றன; வகைமைகள் இடம்பெறுகின்றன; செய்திகள் கோர்க்கப்பெற்று, அடுத்து நிகழ்வது யாதென அறியத் தூண்டுவனவாக இக்கட்டுரைப்பகுதிகள் உள்ளன.

டாக்டர் ஜான்சன் உரைநடைக்கான வரையறையை அது ஒரு மனதின் பேச்சு வடிவம், வடிவ ஒழுங்கு வரைமுறை அற்றது. செரித்து உணரத் தக்கதல்ல, இயல்பானதும் அல்ல. ஆனால் முறையான செய்கையுடையது என்று வரையறுக்கின்றார். இவரின் கருத்துக்கு ஏற்ப மேற்கண்ட உரைநடை அமைந்துள்ளது.

உரைப்பாட்டுமடையின் உரைநடைத்தகுதி

குடப்பால் உறையா குவியிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன்றுண்டு
உறிநறு வெண்ணெய் உருகா உருகும்
மறிதெறித்து ஆட வருவதொன் றுண்டு
நான்முலை ஆயம் நடுங்குபு நின்றரங்கும்
மான்மணி வீழும் வருவதொன்றுண்டு

(ஆய்ச்சியர் குரவை-1,2,3)

குருவிஒப்பியும் கிளிகடிந்தும்குன்றத்துச் சென்றுவைகி
அருவி ஆடியும் சுனைகுடைந்தும் அலவுற்று வருவேம்முன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே
மணமதுரையோடு அரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையாங்கு இழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்
என்றலும் இறைஞ்சி அஞ்சி இணைவளைக்கை எதிர்கூப்பி
நின்ற எல்லையுள் வானவரும் நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவரும் கண்டுநிற்பக் கொழுநனொடு கொண்டுபோயினர்
இவள்போலும் நம் குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலின்
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங் கொளுமின் சிறுகுடியீரே
நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வணுங் கொள்ளுமின் சிறுகுடியீரே
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்
ஒரு முலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே. (குன்றக்குரவை 1-22)

உரைப்பாட்டுமடையாக அமைந்த இப்பகுதிகள் ஆக்ஸ்போர்டு அகராதி வரையறுக்கும் உரைநடைக்கான இலக்கணத்துடன் அமைந்துள்ளமை கருதத்தக்கது. கட்டுரை என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றியதான அல்லது பொருளின் ஒரு கிளை பற்றியதான நீட்சி என்ற மேற்கண்ட அகராதியின் கருத்தினுக்கு ஏற்ப இவ்வுரைப்பகுதி ஒரு பொருளின் கிளைபற்றியதான

நீட்சியாக உள்ளது. இப்பகுதியில் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல செயல்கள், கருத்துக்கள் திருப்பித் திருப்பி கோர்த்து உரைக்கப் பெற்றுள்ளன.

கருப்பப்பகுதிகளின் உரைநடைத்தகுதி

இவை உரையாசிரியர்களின் இயல்பைப்போல, மூலத்திற்கு மறுபடி உரையெழுதும் போக்கினதாக உள்ளது.

குடத்துப்பா லுறையாமையும்
குவியிமி லேற்றின்
மடக்கண்ணீர் சோர்தலும்
உறியில் வெண்ணெ யுருகாமையும்
மறி முடங்கியாடாமையும்
மான்மணி நிலத்தற்று வீழ்தலும்
வருவதோர் துன்பமுண்டென
மகளை நோக்கி மனமயங்காதே
மண்ணின் மாதர்க்கணியாகிய
கண்ணகியும் தான் காண
ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரிதை நாடகங்களில்
வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடாடிய
குரவையாடுதும் யாம் என்றாள்
கறவை கன்று துயர் நீங்குகவெனவே. (ஆய்ச்சியர் குரவை 2,3.4)

இப்பகுதி மேற்கண்ட முன்னர் கூறப்பட்ட உரைப்பாட்டுமடையின் உரைவிளக்க மாக அமைந்துள்ளது.

செங்கோலும் வெண்குடையும் செறிநிலத்து மறித்துவீழ்தரும்
நங்கோன்தன் கொற்றவாயில் மணிநடுங்க நடுங்கும் உள்ளம்
இரவுவில்லிடும் பகல்மீன்விழும் இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு மன்னவற்கியாம் உரைத்துமென
ஆடியேந்தினர் கலனேந்தினர் அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடியேந்தினர் பட்டேந்தினர் கொழுந்திரையலின் செப்பேந்தினர்
வண்ணமேந்தினர் சுண்ணமேந்தினர் மானமதத்தின் சாந்தேந்தினர்
கண்ணிஏந்தினர் பிணையலேந்தினர் கவரி ஏந்தினர் தூபமேந்தினர்
கூனும்குறளும் ஊமும் கூடிய குறுந்தொழிலிளைஞர் செறித்துசூழ்தர

நரைவிரைஇய நறுங்கூந்தலர் உரை விரையஇய பலர்வாழ்த்திட
ஈண்டு நீர் வையம் காக்கும் பாண்டியன் பெருந்தேவிவாழ்கென
(வழக்குரைகாதை1 – 19)

இப்பகுதிகள் சிலப்பதிகார உரைநடை வகைகளுள் மிக இளகிய வடிவம் உடையன. கட்டுரையின் கரு என்பது மனித எண்ணங்கள் சார்ந்த எவ்வகைப் பட்ட துறை குறித்தும் இருக்கலாம் என்ற கருத்தினுக்கு ஏற்ப மனித அழிவின் அறிகுறியை முன்னுரைப்பதாக இப்பகுதிகள் அமைந்துள்ளன.

இம் மூன்று பகுதிகளும் சிலப்பதிகாரத்தில் உரைநடை உத்தி இடம் பெற்றுள்ளதை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. இவற்றின் தகுதிகள் இக்கால உரைநடை வகைகளுக்கான இலக்கணத்துடன் ஒத்து அமைவது நோக்கத் தக்கது.

பாவாணர் உயர்ந்த கட்டுரைக்கான இலக்கணங்களாக கருத்து ஒருமைப்பாடு, பொருட்பொலிவு, ஒழுங்கு, பத்தியமைப்பு, நன்னடை ஆகிய வற்றைக் காட்டுகின்றார் . இவையணைத்தும் சிலப்பதிகார உரைநடை வகை களுள் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனவே சிலப்பதிகார உரை நடைகள் அமைப்புமுறையாலும், தகுதியாலும் தமிழில் முத்த உரைநடை இலக்கியமாக விளங்குகிறது என்பது உண்மை.

7

தமிழகக் குடும்ப வாழ்க்கை

(நேற்று - இன்று - நாளை)

குடும்பம் என்பதற்கு உறவு, ஒரு குடியிலுள்ளோர், வீடு என தமிழ் மொழியகராதி பொருள் கொள்ளுகிறது. வாழ்க்கை என்பதற்கு ஜீவிப்பு எனப் பொருள் கொள்ளலாம். குடும்ப வாழ்க்கை என்பதற்கு ஒரு வீட்டின் ஜீவிப்பு என்று நேரடியாகப் பொருள் கொள்வோம்.

நேற்றைய குடும்ப வாழ்க்கை தனிக்குடும்பமா கூட்டுக் குடும்பமா?

சென்னைத் தொலைக்காட்சியில் ஆயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு தீபாவளி அன்று ஒரு பட்டிமண்டபம் ஒளிபரப்பப்பட்டது. அதன் தலைப்பு எது சிறப்பு? தனிக்குடும்பமாகூட்டுக் குடும்பமா? என்பதாகும். நடுவர் கோ. சாரங்கபாணி வாதங்களைப் பரிசீலித்து விட்டுத் தனிக்குடும்பமேசிறந்தது அதுவே தேவையும் கூட என முடிவு சொன்னார்.

அடுத்த வார எதிரொலியில் (வாசகர் கடிதப்பகுதி) வந்திருந்த, வாசிக்கப் பட்ட, முப்பத்தோரு கடிதங்களும் இத்தலைப்பின் முடிவைப் பற்றி விமர்சனம் செய்திருந்தன, அனைத்துக் கடிதங்களும், தனிக்குடும்ப முடிவு தவறான முடிவு, கூட்டுக் குடும்பமே தமிழகத்தின் மரபு அதுவே தேவை எனக் கூறியிருந்தன.

ஆனால் நேற்றைய தமிழகத்தை, அதன் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கிற போது தனிக்குடும்பம் ஒரு சோதனை முயற்சிக்காக ஏற்று நடத்தப்படிருக்கின்றது என்பதைக் காணமுடிகின்றது. திருமணம் ஆனவர்கள் எவ்வாறு தன் வாழ்வை

நடத்திக் கொள்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்ளும், சோதனை முயல்வாக தனிக்குடும்ப முயல்வு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத் தலைவனும், தலைவியும் , தனிக் குடும்ப வாழ்வில் இன்பங்கண்டனர் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இதற்கான பல சான்றுகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் தருகின்றன.

சங்க காலத்தில் ஒரு கணவனும், மனைவியும் இனிய வாழ்க்கை நடத்திக் கொண்டு வருகின்றனர். அவர்களைப் பார்ப்பதற்காக, தாயொருத்தி பகலெல்லாம் நடந்து வந்து மாலை நேரத்தில் அவர்களின் வீட்டிற்கு வருகின்றாள்.

அப்போது அவள் கண்ட காட்சி, அவள் பிள்ளையின் வீட்டின் முன் ஒரு மலர்த்தோட்டம் இருந்தது. அங்கே ஒரு அகலமான மேடை, அம்மேடை அருகில், முல்லைக்கொடி அடர்ந்து படர்ந்து, மலர்களைச் சுமந்து கொண்டிருந்தது. அவ்வேளையில் பாணர் முல்லையாழில் முல்லை நிலத்து இன்னிசையை மீட்டிக் கொண்டிருந்தனர். கணவன் மேடையின்மேல் முகமலர்ச்சியுடன் அமர்ந்து, எதிரேயிருக்கும் தன் மகனை எடுத்துத் தன் மேலே அமர்த்தி, அக்குழந்தையின் இரு கைகளையும் பிடித்து, யாழின் இசைக்கு ஏற்பத் தாளங்கொட்டுமாறு செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான். வேறொரு புறத்திலே மனைவி முல்லை மலரைப் பறித்து அவற்றை மாலையாகத் தொடுத்துக் கொண்டிருந்தாள். பின்பு தான் தொடுத்த மாலை ஒன்றினைக் கணவன் மடிமேல் தாளம் கொட்டிக்கொண்டிருந்த சிறுவனுக்குச் சூட்டி, மற்றொன்றை, தனக்கும் சூட்டிக் கொண்டாள். கணவன் மனைவியின் அழகை அப்போது, பருகிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் தாய் வீட்டிற்கு வர, இந்நிகழ்வையெல்லாம், தாய் கண்டு மகிழ்ந்தாள்[1].

இதைப் போல பல பாடல்கள் சங்க இலக்கியத்தில் தனிக்குடும்ப நிலையை விளக்கிக் காட்டியுள்ளன. சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களிலும் தனிக் குடும்ப வாழ்க்கை முறையைக் காணமுடிகிறது. கோவலனும் கண்ணகியும், மணம் முடித்த பின் மனையறம் படுத்த காதை வழியாக தனிக் குடும்பம் நடத்த முனைகின்றனர்[2]. குடும்ப விளக்கில் பாரதிதாசனார், பெற்றோர்களை விடுத்த தனிக்குடும்பத்தினை தலைவன் நடத்தும் நிலையை இனித்திட இனித்திடத்தான் நகைமுத்தன் எழில் சிறம் நடத்து தற்கு தனியில்லம் கொண்டான் என வெளிப்படுத்துகிறார்[3].

இத்தகைய சான்றுகளின் மூலம் தனிக் குடும்ப நிலை வழிவழியாகத் தமிழகத்தில் நடை பெற்றிருப்பதை அறியலாம். ஆனாலும் தனிக்குடும்ப

வாழ்வில் சுற்றத்தாருக்கும், பெற்றோர்க்கும் உரிய தொடர்பு தரப் பெற்றிருந்தது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.

தமிழ் மரபில் களவு, கற்பு என்ற இரண்டு நிலைகள் உண்டு. களவென்பது காதல் வாழ்க்கை; கற்பு என்பது மணவாழ்க்கை. கற்பு வாழ்க்கையே குடும்ப வாழ்க்கை எனக் கொள்ளப்படுகின்றது.

தலைவனும், தலைவியும் இவ்வுலகத்தில் ஒன்றாய்ப் பிணைந்து, சுற்றத்தாரோடும், மக்களோடும் கூடி இல்லறம் நிகழ்த்தும் பொழுது உலகத்தில் நுகர வேண்டிய நுகர்வுகளை எல்லாம் ஒவ்வொன்றாய் நுகர்ந்து அவை நிலையில்லாதன என அறிந்து தெளிவு பெற்று நிலையான வீட்டின்பத்தை விரும்பி வாழ்தல் தான் குடும்ப வாழ்வின் பயன் என்கிறார் தொல்காப்பியர்[4]. வையத்துள் வாழ் வாங்கு வாழும் இம்முறையே குடும்ப வாழ்வின் சிறப்பாகும்.

இல்வாழ்வில் தலைவியும் தலைவனும், உடல் உயிராகவும், உயிர் உடலாகவும் வாழ்ந்திருக்கின்றனர். இன்பம் நுகர்வதற்கும், இல்லறக் கடன்களைச் செய்வதற்கும், இருவராக பிரிந்து நின்றே செயலாற்ற வேண்டியிருப்பதால் இவ்வுலகில், ஆணும் பெண்ணும் இருவராய்ப் பிறக்கின்றனர். கடன்களைப் பொறுப்புடன் செய்யும்போது இடையிடையே ஆணும் பெண்ணும் பிரிதல் வேண்டியிருக்கிறது. தலைவனும் தலைவியும் அப்பிரிவை பூ இடைப்பட்டலும், ஆண்டு கழிந்ததைப்போல் உணரும் மகன்றில் பறவையின் பிரிவைப் போலக் கருதியுள்ளனர்[5]. ஒருவர் பிரிய நேரின் மற்றவர் இறக்கக் கருதியுள்ளனர். உயிரின்றி உடல் இயங்கல் இல்லை போல, தலைவன் தலைவியரின் இல்லற வாழ்வு இணைந்தே நடைபெற்றிருக்கின்றது.

குடும்பத்தில் தலைவியின் பங்கினைக் குறுந்தொகைப் பாடலொன்று அழகாக விளக்குகின்றது. ஒரு இலக்கியக் குடும்பம் அது. கணவனுக்கு முதன் முதலாக, தானே சமைத்து உணவிட மனைவி விரும்புகிறாள். தயிரைப் பிசைந்து மோர்க்குழம்பு ஆக்குகிறாள். தயிர் கட்டி பட்டிருக்கின்றது. அதனைத் தன் காந்தள் விரல் நோகத் தலைவி பிசைகின்றாள். பிசைந்த போது விரல்களின் இடுக்கில் தயிர்த்துளிகள் ஒட்டிக் கொள்கின்றன. பின் அதனைத் தக்கவாறு பாகம் செய்ய அடுப்பில் ஏற்றுகிறாள். அப்போது ஆடை சிறிது நெகிழ அதனையும் தன் கையால் எடுத்துச் சரிசெய்து கொள்கிறாள். இப்போது ஆடையில் தயிர் துளிகள்; பின் தாளிப்பதற்காக பாகங்களை எடுத்து அடுப்பில் வைக்கிறாள். கண்கள்நோக புகை படிய, பார்த்துப் பார்த்துத் தாளிக்கின்றாள். ஒரு வழியாய் மோர்க்குழம்பு வைத்துவிட்டுத் தன் கணவனுக்கு உணவிடுகிறாள். கணவன் அதனை இனிதாய்

இருக்கின்றது என உண்கின்றானாம். இந்தப் பெருமைப் பேச்சு, அவளின் துன்பத்தையெல்லாம் கரைத்து, அவளை நாணிப் போகச் செய்து விடுகிறது[6]. அப்படிப்பட்ட இலக்கிய வாழ்வை நேற்றை தமிழகத்தோர் வாழ்ந்திருக்கிறார்கள்.

குடும்பத்தின் பயன்

பெருமைபெற்ற குடும்ப வாழ்விற்கு பயன் என்ன? என்ற வினாவிற்கு விடை மக்கட் பேறாகும். குறுகக் குறுக நடந்து சிறிய கையினை நீட்டி, உணவுக் கலத்தில் கிடந்ததைத் தரையிலே இட்டும். கொட்டியும், தோண்டியும், வாயில் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யுடைச் சோற்றை உடம்பின் கண் சிதறியும் எனப் பல விதங்களில் உணவினை உண்ணும் மக்களைப் பெறாத வரின் வாழ்க்கை, பயனில்லாத வாழ்க்கை[7] எனப் புறநானூறு பேசுகிறது. மகவின் சிறுகை அளாவிய கூழ்போல வேறொரு அமுதம் உலகில் இல்லை என்கிறது திருக்குறள்.

குடும்பத்தின் பயன் என வருகிறபோது, மக்கட் பேறுதான் அதில் முதலிடம் வகிக்கின்றது. தாய் மகனைப் பெறலும், தந்தை சான்றோனாக அம்மகனை ஆக்கலும் கடனாகக் கொண்டு சங்கத் தமிழர் வாழ்ந்திருக் கின்றனர்[8].

குடும்பத்தின் கடமைகள்

சங்க காலத் தமிழ்க் குடும்பங்களுக்கு, கடமைஎன்ற ஒன்று இருந்திருக் கிறது. இல்லறத்தான் என்பான் இயல்புடைய முவர்க்கு துணையாக வாழ்தல் வேண்டும்[9]. அதுவே அவனின் கடமையாகும். துறவோர், விருந்தினர், சுற்றத்தார் என்ற முவர்க்கும் துணையாக இல்வாழ்வினர் அமைய வேண்டும்.

விருந்தினர் என்பார், முன்பின் அறியாதவராய்ப் பசித்து வரும் இல்லற நிலையினர். நற்றொழில் காரணமாக இடம் பெயரக் கருதும்போது, தமக்கு வேண்டிய உணவு கருதி முன்பின் அறியாதவரின் வீட்டிற்கு விருந்தினராக வருபவர்கள் விருந்தினர்கள். இவர்களை உபசரித்தலை சங்ககாலக் குடும்பத்தினர் கடமையாகக் கொண்டனர்.

தலைவன் ஒருவன் தான் சந்தித்த தலைவியிடம் ஒரு உறுதி செய்து தருகிறான். தலைவியே உன்னை நான் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தி, வரும் விருந்தினருக்கு உணவளித்து அவர்கள் உண்ட மிச்சிலை நான்

உணக்களித்து உண்பேன்! என்னை ஏற்பதிலே உனக்கு ஒரு குறையும் இருக்காது[10] என உறுதி கூறுகிறான். எனவே நேற்றைய தமிழகத்தில் விருந்து புரத்தல் சிறப்பாகக் கருதப்பட்டுள்ளது என அறியலாம். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து நோக்கிய[11] அக்கால நிலையை வள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

சுற்றமெனப்படுபவர் உடம்பின் தொடர்பாலும், பிறவற்றாலும், சூழ்ந்து நிற்பவர் ஆவர். இவரன்றி இடத்தின் தொடர்பாலும், அலுவல் தொடர்பாலும் சுற்றம் ஏற்படலாம். துணையற்ற பெண்டீர்க்கும், ஏழைச் சிறுவர், சிறுமியர்க்கும், உண்டி உணவு கொடுத்தல் தலைவன் தலைவியர் வாழ்வில் ஒரு கடனாகக் கருதப்பட்டது. ஔவையாரை அதியமான் புரந்ததும், பாரி, கபிலர் முதலியவரைப் புரந்ததும் இப்பாற்பட்டதாகும். துறந்தோர் என்போர் அனைத்தையும் துறந்தவராவர். எனவே அவர்களின் வாழ்வும் இல்லற வாழ்வில் திகழ்வோரின் நிலையை எண்ணியே வாழ வேண்டிய அவசியம் இருந்தது. எனவே இவை மூன்றும் சங்ககால இல்லறத்தார் கடமைஎன உணரலாம்.

<u>பரத்தை</u>

இல்லற வாழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தலைவன் தலைவியை விட்டுப் பிரியக் கூடிய சூழல் ஏற்படலாம். இப்பிரிவிற்கு ஆறு காரணங்களை இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். பரத்தை, ஓதல், காவல், தூது, துணை, பொருள்வயிற்பிரிவு என அறுவகைப்படும். இதில் பரத்தை மட்டுமேதலைவனின் மாறுபட்ட ஒழுக்கம் கருதியாகும். மற்ற ஐந்தும் கடமை கருதியதாகும். பரத்தைபால் பிரிதல் என்றே இதனைத் தனியாக வகுத்து அதற்குரிய காலமும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இவ்வொழுக்கம் மன்னர் முதல் அனைவருக்கும் ஏற்கப்பட்டிருந்தது.

பேகன் என்ற மன்னன், தன் மனைவியை விடுத்து பரத்தை பால் சார்ந்திருந்தான். அதனை இடித்துரைத்து அரிசில்கிழார் போன்ற புலவர்கள், அவனை திருந்திய வாழ்விற்கு அழைத்து வருகின்றனர்[12] பேகன் பரத்தை ஒழுக்கம் கொள்ளினும் அவனின் மனைவி கண்ணகி, அவனையே நினைத்து வாழ்ந்திருத்தலைச் சிறப்பு எனச் சங்க கால புலவர் கருதினர். ஆடவன் மாறினும் மனையுறை மகளிர்க்கு[13] ஆடவரே உயிர் என வாழ்தலே சிறப்பாக , அக்கால சமுதாயம் கருதியிருக்கிறது.

காப்பிய காலத்தில் இற்பரத்தையைச் சார்தல் என்ற நிலை வளர்வு பெற்று அதுவே கதையம்சமாகத் திகழ்ந்திருப்பதை சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

கோவலன் மாதவியின் பால் ஏற்பட்ட கலையன்பில் உள்ளங்கொண்டு அவளைச் சார்கின்றான். இருப்பினும் கண்ணகி அவனையே நினைத்து வாழ்ந்து, இறுதியில் அவனின் உயர்விற்காகப் போராடிய திறம் சிறப்பாகும்.

சிலம்பின் ஒரு பகுதியில் தேவந்தி கணவனால் கைவிடப்பட்ட கண்ணகியைப் பார்த்துச் சோமகுண்டம், சூரியகுண்டம் முழ்கின் உன் கணவன் கிடைப்பான் எனக் கூற[14] பீடன்று என ஒதுக்குகிறாள். கண்ணகியின் இந் நிலையைக் காணுகின்ற போது, கணவன் இன்பமே, தன் இன்பம், கணவன் எங்கு இன்பம் காணுகின்றானோ அங்கே காணட்டும். எம் வணங்குதலால் அவன் இங்குவரின் இன்பம் குறையலாம் எனக் கருதி கண்ணகி அப்படிச் சொல்லியிருக் கலாம் என உணர முடிகின்றது.

பெரிய புராணத்தில், இந்நிலையினின்று சற்று மேம்பட்ட நிலையைக் காணமுடிகின்றது. திருநீலகண்டர் என்ற நாயன்மார் சிற்றின்ப மிகுதியால் பரத்தையிடம் சென்று விட்டு வீட்டிற்கு வருகின்றார். வந்ததும் அவரின் நிலையறிந்த மனைவி என்னைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்[15] எனச் சொல்லி உடல் இன்பத்தினை அவரிடமிருந்து பெறுதலை வெறுத்ததோடு உள்ள அன்போடு மட்டும் வாழ்ந்தார். பரத்தை ஒழுக்கம் கடிந்த பெண்ணாக இவரைச் சேக்கிழார் படைத்துள்ளார். எனவே ஒரு காலத்தில் பரத்தை ஒழுக்கம் மறைவான ஒழுக்கம் எனக் கருதப்பட்டிருப்பினும் அதனை ஏற்றுக் கொண்ட மனைவியர், பின்பு அவ்வொழுக்கத்தினை கடிந்தவராக வளர்ந்து வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

<u>வீரம்</u>

ஒருபுறம் சுக வாழ்வில் இன்புற்றிருந்த தமிழர்கள், மறுபுறம் வீர வாழ்வில் வெற்றியையே துணையாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். உன் மகன் எங்குள்ளான்? என ஒரு சங்க இலக்கியத் தாயிடம் கேட்டால், அவள் சொல்கிறாள் என்மகன் எங்குள்ளான் என யான் அறியேன். ஆனால் புலிவந்து சற்று நேரம் படுத்துக் கொண்டிருந்து பின் வெளிப்பட்டுப் போன மலைக்குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு இதுவாகும். அவன் பெரும்பாலும் போர்க் களத்தில் காணப்படுவான் எனக் கூறுகிறாள்[16].

அந்த அளவிற்கு வீரர்கள் வாழ்ந்த உலகாக, அக்காலத்தில் தமிழகம் திகழ்ந்திருக்கின்றது. மற்றொரு தாய், போருக்குச் செல்ல யாரும் இல்லாத போது தன் ஒரே மகனை, பாலகனை அழைத்து அவன் குடுமிக்கு, எண்ணெய் தடவி, கையில் வேலைக் கொடுத்து போர் முரசு கேட்டதும் அனுப்பி வைத்தாளாம்[16. அ].

குழவி இருப்பினும், ஊன் தடி பிறப்பினும், அதனை வாளினால் அறுத்துப் புதைத்த வீர பரம்பரையினைச் சார்ந்தவர்கள் தமிழர்கள்[17]. முல்லை நிலத்தில் நடந்த ஆடலேறு தழுவலும் வீரத்தின் அடிப்படையே ஆகும். இதன் வழி திருமணங்களும் நிகழ்ந்தன. கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையிலும் எண்ணாள் முல்லை நிலப்பெண். இதனுடைய வளர்ச்சி பின்னாளில் போட்டி களின் வாயிலாகப் பெண்களை மணத்தல் என்பதாக நிகழ்ந்தது. சீவக சிந்தாமணியில் சீவகனுக்கு வைக்கப்படும் போட்டிகளும், பாண்டியன் பரிசில் ஏற்படும் அன்னத்திற்கான பேழை போட்டியும், இவ்வகை நிகழ்வின் அடிப்படையே எனலாம்.

எனவே சங்க இலக்கியகாலம், இல்வாழ்வை, அன்பும், அறனும், வீரமும் செறிந்ததாகக் கொண்டு வாழ்ந்த காலம் என்பதில் ஐயமில்லை.

பக்தி இலக்கிய காலத்தில், குடும்ப வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. எல்லாமே இறைவன் எனக் கருதப்பட்டது. சுற்றமும், விருந்தும் அவனே. அதனால் தான் வணங்கும் இறைவனை அப்பனாய், அம்மையாய் சேயனாய், அன்புடைய மாமனாய், மாமியாய், ஒப்புடைய மாதருமாய், சுற்றமுமாய், எல்லாமாய் நாவுக்கரசர் கண்டார்[18]. 'அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்று மாணிக்க வாசகரும் பாடுகின்றார்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல் ஆண்டாள் இறைவனையே, தன் கணவனாகப் பாவித்து அவனன்றி வேறு மானிடர் எவர்க்கேனும், என் உடல் பேச்சுப்படில் உயிர் வாழேன் என்று கூறுகிறாள்[19]. சங்ககால சமுதாயத்தில் கணவனும் மனைவியும் உயிரும் உடலுமாய் ஒன்றியிருந்த வாழ்க்கை இக்காலக் கட்டத்தில் கடவுள் மனிதத் தொடர்பு என்ற நிலையில் உயர்த்திப் பேசப்பட்டுள்ளது. இருப்பினும் இல்லற வாழ்விற்கு எக்குறையும் ஏற்படவில்லை. பெரிய புராணத்து மெய்யடியார்கள், பலர் இல்லற நெறியில் நின்று இறைவனைக் கண்டுள்ளனர். இல்லறக் கடமையான, துறவறத்தாரைக் காத்தல், விருந்து "சுற்றம் காத்தல் போன்றவற்றை குறைவறச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை.

பாரதியின் கண்ணன் பாடல்களும், இதன் வழிவந்தனவே எனலாம். தோழனாக, தாயாக , தந்தையாக , சேவகனாக , அரசனாக, சீடனாக, சற்குரு வாக, குழந்தையாக, காதலன் காதலியாக, பாங்கியாக, ஆண்டானாக, குல தெய்வமாக, விளையாட்டுப் பிள்ளையாகப் பாரதி கண்ணனைப் பாடியதும் இதன் வளர்நிலை என்றே கருதலாம். பக்தி இலக்கிய கால கட்டத்திற்கு பின் எழுந்த தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களின் முதல் தலைமுறை நூல்கள்

கடவுளைப் பாடு பொருளாக்கின. அடுத்த தலைமுறைச் சிற்றிலக்கியங்கள் மனிதர்களை, மன்னர் களைப் பாடின. கடவுள் தமிழர்களின் வாழ்வில் இவ்வாறு நீங்கா நிலைத்த இடம் பெறுகிறார் என்றாலும் இல்லற நெறியின் வலுவூட்டலாகவே கடவுள் படைப்பும் கடவுள் இலக்கியப் படைப்புகளும் அமைந்தன என்பது கவனிக்கத் தக்கது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் எழுந்த விடுதலைப் போராட்ட உணர்வு, மற்றும் மேலை நாட்டுத் தாக்கம் போன்றன தமிழிலக்கியத்தை புதிய வடிவ நிலைக்குக் கொண்டு போயின. இலக்கியக் களத்திற்கு புதிய பாடு பொருள்கள் கிடைத்தன. சமுதாய நலனோடு இலக்கியங்கள் அணுகப்பட்டன. எனினும் குடும்ப வாழ்வில் அதே அளவு அன்பு, பற்று, பாசங்கள் பின்பற்றப்பட்டன.

தாயன்பு குறித்துப் பாரதிதாசன் அற்புதமான காட்சி ஒன்றைக் காட்டு கிறார். ஒரு தாய் தன் குழந்தையோடு கட்டிலில் படுத்திருக்கின்றாள். சிறிதே அவள் புரண்டு படுத்தாலும், தாயின் உடல் அக்குழந்தையின் மீது படிந்து விடும். இதை அறிந்த அந்தத் தாய் தன் வலக்கையினைத் தலையணையின் மீதும் இடக்கை யினை கூடாரம் போல் குழந்தையின் மீது பாடமலும் வைத்துப் படுத்திருந்தாள். இவளை எழுப்ப அவளின் கணவன் நினைக்கின்றான். பக்கதில் கிடந்த பூச்செண்டிலிருந்து ஒரு மலரை எடுத்து அவளின் திங்கள் போன்ற முகம் மீது இட்டான். எவ்வித அசைவும் அவளிடம் ஏற்படவில்லை. ஒரு மலரிதழை எடுத்துக் குழந்தையின் மீது இட்டான். இப்போது அந்தத் தாயினது கரம் இதழ் விழுந்த இடத்தைத் துடைத்து விட்டுச் சென்றது[20].

நேற்று வரை, அன்பும், அறமும் உடையவர்களாக வாழ்ந்த தமிழ் மக்களின் நிலை இன்று எப்படியுள்ளது என்பது இதன்பின் விவரிக்கப்படுகிறது.

<u>இன்றைய தமிழகம்</u>

சங்ககாலத்தில் பின்பற்றப்பட்ட மூவகைக் கடமைகளும், இக்காலத் தமிழர்களாலும் ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஆனால் அன்பு, வீரம் என்ற இரு தலையாய கொள்கைகளும் மாறுபட்டு அழிந்து போகு மளவிற்கு இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் குடும்ப நிலை அமைந்து வருகின்றது.

திருமணம் என்பது அன்பின் வெளிப்பாடாக, காதலின் முடிவாக, குடும்ப வாழ்வின் வாயிலாக நேற்று வரை கருதப்பட்டது. ஆனால் இன்றைய திருமணங்கள் பொருளாசை மிக்கதாக, ஏன்! வாழ்வின் முடிவினைத் தரும் முடிவு நிலையாகக் கூட மாறிவிட்டன.

இன்றைய பெரும்பாலான திருமணங்கள், பொருளாதாரக் காரணங்கள் கொண்டே ஆய்ந்து நிச்சயிக்கப் படுகின்றன. பொருளாதார வசதிக்காகவும், உடலுறவிற்காகவும் மட்டுமே தற்காலத்தில் திருமணங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

வரதட்சணை என்ற பெயரில் பொருளாதாரக் கொடுமைகள் நடக்க திருமணங்கள் வழி வகை செய்கின்றன. வரன் தட்சணை – பெண்ணை மணந்து கொள்ளப்போகும் வரனுக்கு பெண் வீட்டார் தட்சணை கொடுக்க வேண்டும். இவ்வொப்பந்தமே இரு மனங்களின் வாழ்வினை நிச்சயிக்கின்றது. திருமணங்கள் அன்புச் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட காலம் மாறி ரொக்கத்தில் நிச்சயிக்கப் படுகிற காலம் இன்று தமிழகத்தில் நிகழ்கின்றது. எனக்கு இராமன் வேண்டாம் தூக்கிக் கொண்டு போகும் இராவணன் கிடைத்தால் போதும் என்று ஏங்குகின்ற கன்னி கழியாத பெண்கள் பலர் தமிழகத்தில் உள்ளனர்.

வரதட்சணையைத் தருவதாகச் சொல்லிவிட்டு சில தந்தையர் பெண் களைத் திருமணம் செய்து கொடுத்து விட்டு பின்னால் கொடுக்க முடியாது போன போது, அவர்களின் மகள் மாப்பிள்ளை வீட்டாராலேயே கொலை செய்யப்படும் கொடுமையான நிகழ்வுகளும் தமிழகத்தில் இன்று தினசரிகளின் செய்திகளாகி விட்டன. அடுப்பு வெடிப்புதான் வரதட்சணைக் கொடுமையின் இறுதி ஆயுதம். ஒரு புதுக் கவிஞன் பாடினான்; "மருமகள் ஏற்றுகிற ஸ்டவ் மட்டும் வெடிக்கிறதே மாமியார் ஏற்றும் ஸ்டவ் வெடிப்பதில்லையோ" இவ்வரிகள், வரதட்சணைக் கொடுமையைப் படம் பிடிப்பனவாகும்.

குடும்ப வாழ்வின் இன்பமான அன்பு நிலை அடித்தளத்தை மறந்து விட்டு இன்றைய தமிழகம் வாழ்கின்றது. அன்பை விலை பொருளாக்கி விலை கூவும் நிலை தமிழகக் குடும்ப அவல நிலையின் ஒரு கொடுமையான பகுதியாகும். வரதட்சணைக் கொடுமையினின்று வீறு பெற்று எழுந்த பெண்களும் உண்டு. அதனால் சாம்பலாகிப் போனவர்களும் உண்டு.

<u>மக்கட்பேறு</u>

எவ்வளவு இனிமைஎனக் கருதப்பட்டதோ அவ்வளவிற்கும் இழிவான தாக மக்கட் பேற்றினை (அதுவும் பெண் மக்கட் பேற்றினை) கருதுகிற நிலையை இன்றைய தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. பெண் குழந்தைகளைச் சாகடிக்கும் கொடுமை, தமிழகத்தின் உட்பகுதிகளில் நடைபெறுகின்றது. பிறந்த பெண் குழந்தையின் வாயில் நெல்லைப் போட்டுவிட, அது மூச்சுத் திணறி இறந்து படுகிறது. இப்படி ஆயிரம், ஆயிரம் குழந்தைகள் இந்நிலையைச் சந்தித்து

மண்ணாய்ப் போயுள்ளன. இவைகளைத் தடுக்க தமிழக அரசு, இப்போது ஒரு புது முடிவை எடுத்தது. ஒவ்வொரு ஊரிலும் தொட்டில் வைக்கப்பட்டது. இதற்கு அரசாங்கத் தொட்டில் என்று பெயர். இதனுள் வளர்க்க முடியாத பெற்றோர்கள் குழந்தையை இட்டு விடலாம். அக்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பினை அரசாங்கமும் சில பொது நிறுவனங்களும் ஏற்றுள்ளன. இது எந்த அளவிற்கு நடைமுறைக்குச் சரியாகும் என்பது போக போகத்தான் தெரியும். இதைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு புதுக் கவிஞன் பாடினான். தொட்டிலில் போடப்பட்ட குழந்தை ஒன்று இரண்டானது. மூன்று நான்கு நூறானது. ஆனால் இதை கவனிக்கும் ஆயா மட்டும் ஒருவரே, குழந்தையின் அழுகைக்குள் ஆயாவின் தாலாட்டு மறைந்து போனது என்று[21].

பரத்தை இன்று

அடுத்து இன்றைய நிலையில் பரத்தையர் ஒழுக்கம் பற்றி ஆராய்வோம். இன்றைய நிலையில் தமிழகத்தில் பரத்தை ஒழுக்கம் என்பது கேவலமான ஒழுக்கமாகக் கருதப்படுகின்றது. பெரும்பாலான ஆண்கள் இவ்வொழுக்கத்தில் பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. அவ்வாறு ஈடுபட்டால் எந்தப் பெண்ணும் கண்ணகி போல் சாந்தமாக இருப்பதில்லை, அவள் அவனைப் பல்வேறு முறைகளில் தண்டிக்கின்றாள்.

இது ஒரு புறம் இருக்க, பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதிகளைப் பற்றி அண்மையில் ஒரு செய்தி பேசப்பட்டது. அங்கு உள்ள பரத்தையரில் பாதிக்கு மேல் தமிழ்ப் பெண்கள் என்பது கணக்கிடப்பட்டது. பெரும்பாலான தமிழ்ப் பெண்கள் ஏமாற்றப்பட்டு அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். இதைத் தடுக்க தமிழக அரசு ஓர் “எக்ஸ்பிரஸ் திட்டத்தை” அறிவித்தும் எவ்வித பலனுமில்லை.

குடும்ப நிலையைப் பொறுத்த வரையில், இவ்வொழுக்கம் களையப் பட்டிருப்பினும், திருமணமாகாத, குடும்ப நிலை சாராத பெரும்பாலான இளைய சமுதாயம், இதனை இன்ப நிலைக்காக ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாததாகும். இதன் விபரீதத்தை உணர்த்தும் அவர்கள் ஈடுபடுவது முரண்பட்ட போக்குதான். எனவே இன்றைய தமிழகம் அன்பு வாழ்வினை மறந்து போலி அன்போடு வாழ்கின்றது என்பது தெளிவு.

நாளைய தமிழகம்

தமிழகத்தின் எதிர்கால நினைப்பினை நினைக்கும் போது ஒரு மகிழ்வு ஏற்படத் தான் செய்கின்றது. நாளையாவது விடியுமா? என்ற நிலையில் வாழ்ந்து

கொண்டிருக்கும், பம்பாய், இலங்கை, தமிழகத் தமிழர்களின் குடும்ப நிலை நாளை எப்படியிருக்கும்? இது ஒரு கற்பனை விடியல்தான்.

இந்த ஆய்வை எழுத்தாளர் சுஜாதா 'என் இனிய இயந்திரா' என்ற நாவலின் முலம் சிந்தித்துப் பார்க்கிறார். பல்வேறு கட்டுப் பாடுகளுக்கிடையே வாழும் சமுதாயம்! பெயர் இரண்டெழுத்தில் இருக்க வேண்டும். குழந்தையை கூட கேட்டுதான் பெற வேண்டும் என்ற நியதி, இவைகளுக்குத் தலைவனான ஜீவா என்ற சர்வாதிகாரி, 50 வயதுக்குப் பின் முதியவர்களுக்குக் கட்டாய சாவு என பல முரண்பட்ட நிலைகளை அந்நாவல் முன் வைத்திருக்கிறது.

இதைப்போல ஒரு கட்டாய வாழ்க்கைக்கு தமிழகம் தள்ளப்பட்டுவிடுமா? இயந்திரவாழ்வு அங்கீகரிக்கப்படுமா? ஓரளவு இப்போது ஒட்டிக்கொண்டிருக்கும் அன்பெனும் தத்துவமும் அழிபட்டு விடுமா?

எது போனாலும், தமிழனின் விருந்தோம்பல் பண்பும், சுற்றம், துறவறம் போற்றும் பண்பும் மாறாது; மாறக் கூடாது. இவை தமிழனின் தனித்த பண்புகளாம்.

முடிவுகள்

1. சங்க காலத் தமிழர் வாழ்க்கை அன்பும், அறனும், வீரமும் செறிந்ததாக அமைந்ததாகும். அவர்களுக்கு சுற்றம், விருந்து, துறவறத்தோர் ஆகியோரைப் பேணுதல் என்ற முக்கடமைஇருந்தது. இல்லற வாழ்வின் பயனாக, குழந்தைப்பேறு கருதப்பட்டது. நேற்றைய வாழ்வின் நோக்கம் இதுவாகத்தான் இருந்தது.

2. தனிக் குடும்ப வாழ்வு தமிழகத்தின் சோதனை முயல்வாக சங்க காலத்தில் நடத்தப் பெற்றிருப்பினும், அது கூட்டு வாழ்வின் ஓர் அங்கமாகவே திகழ்ந்தது.

3. இன்றைய தமிழகத்தில் திருமணம் அன்பு வழி சாராது, பொருளா தாரம் வழிப்பட்டதாய் உள்ளது. அன்பைப் புறக்கணித்த இவ்வாழ்வு, பெருமை உடைத்தன்று. பெண் குழந்தைகளை , மரணிக்கச் முயற்சியும் சிறப்புடைய தன்று.

4. நாளைய உலகு, இயந்திர உலகு என அமைந்தாலும், அதிலும் தமிழர் பண்பாடான, கடமையான சுற்றம், விருந்து , துறவறத்தோர் பேணுதல் ஆகிய முன்றும் மறுக்கப்படாது. மறுக்கப்படக் கூடாது.

குறிப்புகள்

1. பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துளிதீர் கொள்கைத் தன்புதல்வனொடு பொலிந்தே. (ஐங்: 408)

2. சிலம்பு ,மனையறம் படுத்த காதை

3. இனித்திட இனித்திடத் தான்
எழில் நகை முத்தினோடு
தனித்தறம் நடாத்துதற்குத்
தனியில்லம் கொண்டான். பாரதிதாசன் குடும்ப விளக்கு. ப. 50(3, 4, 5)

4. காமஞ் சான்ற கடைகோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (தொல்: கற்பியல் :51)

5. பூவிடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீருரை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிதரி தாகிய தண்டாக் காமமொடு
உடனுயில் போக தில்ல கடனறிந்து
இருவேமாகிய உலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே. (குறுந்தொகை)

6. முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇத்
குவளையுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்
றொண்ணுதன் முகனே (குறுந் 167)

7. படைப்புல படைத்து பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினுமிடைப்பட

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குரை யில்லைத் தாம் வாழுநாளே (புறம் 188.)

8. ஈன்றுபுறந்தருதல் எந்தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே (புறம் 312)

9. குறள்41

10. விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்
பெருந்தகை நின்னோடு உண்டலும்
புரைவது என்றாங்கு (குறிஞ்சிப்பாட்டு வரி 206)

11. குறள் -86

12. புறநானூறு 146

13. குறுந்தொகை 135

14. சிலம்பு கனாத்திறம் உரைத்த காதை

15. பெரிய புராணம். திருநீலகண்டர் புராணம்

16. புறநானூறு 86

16. அ. புறநானூறு 279

17. புறநானூறு 74

18. அப்பர் தேவாரம்

19. நாச்சியார் திருமொழி

20. பாரதிதாசன் குடும்ப விளக்கு
(3, 4, 5 மக்கட்பேறு . பக் . 80)

21. தொட்டிலைத் தேடும் பெண் சிசுக்கள்
பெற்றவர்களே தொட்டிலில் போட்டு விட்டு
பேட்டி கொடுக்கும் பெருமிதம்,
இன்று ஒன்று அழுகிறது.
நாளை ஒன்பதாய் மறுநாளில் நூறாய்
ஓரே அழுகை இத்தனை சிசுக்களுக்கும்
தாலாட்டுப் பாட ஓரே ஒரு ஆயா,
ஆயாவின் தாலாட்டும் அலரலாய் மாற...
தொடரும் , அக் டிச, 1992 வெளியீடு கிருங்கை சேதுபதி கிருங்காக்கோட்டை

8

தமிழர்தம் மரபுசார் போர்க்கருவிகள்

தமிழர்களின் போர்முறை அறப்போர்முறை ஆகும், அவர்களின் போர்முறை வஞ்சகம், சூழ்ச்சி, அடுத்துக் கெடுத்தல் அற்றதாக நேரானதாக இருந்துள்ளது. காலை முரசறையத் தொடங்கும் அவர்களின் போர் மாலை முரசறைய நிறுத்தப்படுவதாக இருந்துள்ளது. முழுஇரவு ஓய்விற்குப்பின் மீண்டும் அடுத்தநாள் காலை தொடங்கும் அவர்களின் போர்முறை எதிரிகளுக்கு இரங்கும் நெஞ்சம் உடையதாக. எதிரிகளுக்குத் தக்க வாய்ப்பளிக்கும் போக்கினதாக அமைந்திருக்கிறது. 'இன்று போய் போர்க்கு நாளை வா' என்று இராவணனை அனுப்பிய இராமனின் உள்ளம் தமிழர் போர் பண்பாட்டின் வழிப்பட்டதாகக் கம்பரால் வரையப் பெற்றதாகும்.

எதிர்க்குழுவினரையும் தம்மொடு ஒத்த மனித உள்ளமாக, மனித உடலாகக் கொண்டு தமிழர்கள் போர் செய்துள்ளனர். அவர்கள் தன் இரத்தம் வெளிப்படும் துன்பத்தைப் போலவே பிறன் இரத்தம் வெளிப்படும் துன்பத்தையும் கண்டுள்ளனர், இதன் மூலம் போர்க்களம் என்பது கொலைக்களமாக மட்டும் விளங்காமல் துயரம் கண்டு இரங்கும் களமாகவும் இருந்துள்ளது. முல்லைப்பாட்டில் இறந்த உயிர்களுக்காகத் துன்புறும் மன்னனின் செயல் இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும், (முல்லைப்பாட்டு 68-75) அஃறிணை உயிர்களுக்கு இரங்கும் மன்னவன் உள்ளம் இவ்வடிகளில் போர்க்களத்தை இரங்கு களமாகக் கண்டுள்ளது.

இவ்வகைப்பட்ட போரை நடத்திட தமிழர்க்குப் பல போர்க்கருவிகள். பல திட்டங்கள் உதவிபுரிந்திருக்க வேண்டும். அவர்கள் இவ்வகைக் கருவிகளை

உருவாக்கி. அவற்றைப் பயன்படுத்திடக் கற்றுக் கொண்டிருக்கவேண்டும். தமிழர் இத்தகைய போர் அறிவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தமைக்கான சான்றுகள் பண்டை இலக்கண நூலான தொல்காப்பியம் முதலாகக் கிடைக்கப் பெறுகின்றன. பண்டைக்காலம் முதலாக. தொடர்ந்து வரும் காலங்களிலும் அவர்களின் போர் அறிவியல் ஆற்றல் மேம்பட்டிருந்ததற்கான பல சான்றுகள் தமிழிலக்கியங்கள் வாயிலாகக் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றை ஆய்வு நோக்கில் அணுகுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

'ஆர்டன்னர்ஸ்' என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் பீரங்கி, சகடத்தின் மேல் ஏற்றப்படும் பெரிய இயந்திரத்துப்பாக்கி, படைக்கலச் சாலையரங்கம் என்ற பொருள்களைத் தருகிறது சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழகராதி, இந்த ஆங்கிலச் சொல்லிற்குப் போர்படைக்கருவிகளின் ஒட்டு மொத்தத் தொகுப்பிற்கு இப்பெயர் உரியது என்று ஒரு மின்கலைக்களஞ்சியம் பொருள் தருகின்றது. இவற்றின் அடிப்படையில் படைக்கலச் சாலையரங்கம் அல்லது போர்க்கருவி களின் தொகுப்பை –இச்சொல் குறிப்பதாகக் கொள்ளமுடிகின்றது, இவ்வகையில் தமிழர்தம் போர்க்கருவித் தொகுப்பைப் பற்றி எடுத்துரைப் பதாகவும் தமிழர்தம் போர் அறிவியலை வெளியிடுவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது. இதன் மூலம் இன்றைக்கு வளர்ந்துள்ள போர் குறித்த அறிவியல் செய்திகளின் சிந்தனைகள் செயற்பாடுகள் பண்டைக்காலத்திலேயே தமிழர்களிடத்தில் இருந்துள்ளது என்பதை நிறுவ இயலும்.

தமிழர் தொல்காப்பிய காலந்தொட்டே போர்க்கருவிகளைக் கையாள் வதிலும், அவற்றை வடிவமைத்துக் கொள்வதிலும் பழக்கமுடையவராக இருந்துள்ளனர். மேலும் தமிழர்களின் எயில் போர் மிகச் சிறப்பு வாய்ந்த்தாக இருந்துள்ளது. எயிலிடத்து பல கருவிகளை அவர்கள் பரப்பிப் போர் செய்து ள்ளனர். தமிழர் பயன்படுத்திய மரபுசார் போர்க்கருவிகளை இரண்டு வகைகளாக பகுத்துக் கொள்ள இயலும். அவை 1. இயல்புப் போரில் பயன்படுத்தப் பெறும் வாள், வேல், வில் ஆகிய முப்போர்க்கருவிகள் 2. எயிற்போர்க்கருவிகள் என்பனவாகும். இவற்றுள் இயல்புப்போர் (அதாவது ஒருவகையில் தும்பைத் திணைப் போர்) என்பது மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப் பெற்று விளக்கப்படு கிறது.

மன்னர்களும் அவர்களின் போர்க்கருவிகளும்

மன்னன் வழித்தே மலர்தலை உலகம் என்ற அற்றை மொழிக்கு ஏற்ப மன்னர்தம் வழித்ததாக அற்றைத் தமிழக மக்கள் செயல்பட்டனர். அவர்களின் பாதுகாப்பு கருதி மன்னர்கள் போர்ப்படைகளை வைத்திருந்தனர்.

நால்வகைப்படைகள் - மன்னர்களால் அமைக்கப் பெற்றிருந்தன. இம்மன்னர்கள் பொன், பொருள், நிலம், பாதுகாப்பு முதலானவற்றில் ஏதேனும் ஒரு காரணம் பற்றிப் போர் தொடங்குகையில் ஊர்க்கு. வீட்டிற்கு இத்தனைபேர் என்ற நிலையில் ஆண்கள் போரில் கலந்து கொண்டனர்.

படையும் கொடியும் குடையும் முரசும்.
நடைநவில் புரவியும் களிறும் தேரும்.
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய

(தொல்காப்பியம், பொருளதிகாரம் - 616)

என்ற நூற்பாவின்வழி மன்னர்க்குரிய புறவடையாளங்கள் பெறப்படுகின்றன, இவற்றுள் படை முன்னணியில் முதலாவதாக உள்ளது. அதனுடன் களிறு, தேர், நடைநவில்புரவி ஆகியன இணைய நாற்படை கொண்டிருத்தல் அரசரின் இலக்கணமாகிறது. கொடி, குடை, முரசு, தார் (மாலை), முடி(மணிமுடி), செங்கோல் முதலியன மன்னர்க்குரிய மற்ற அடையாளச் சின்னங்களாகும். இவற்றுள் குடை, முரசு ஆகியன போர்க்கருவிகளாகவும் கொள்ளத் தக்கனவாகும்.

எனவே நாற்படை உடைய அரசன் அடிப்படைகளைப் பெருக்கி, மக்களை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழி செய்ய வேண்டிய கடப்பாடு உடையவனாக விளங்கவேண்டும் என்பது தொல்காப்பியர் காலத்திலேயே மன்னர்க்குரிய முறையாக இருந்தது என்பது தெரிய வருகிறது.

இந்நால்வகைப் படைகளை மன்னர்கள் பெற்றிருந்தமையைச் சங்க இலக்கியக் குறிப்புகளும் காட்டுகின்றன. 'நெடுநல்யானையும் தேரும் மாவும் படையமைமறவரும் உடையம் யாம்' (புறநானூறு, 72), 'வினை நவின்ற பேர்யானை சினம் சிறந்து களன் உழக்கவும் மா எடுத்த மலிகு உத்துள் அகல்வானத்து வெயில் கரப்பவும் வாம்கரிய கருந்திண்தேர் காற்று என்னக் கடிது' கொட்பவும் வாள்மிகு மறமைந்தர்தோள் முறையான் வீறுமுற்றதாம் (மதுரைக் காஞ்சி 47-54) என்பன மன்னன் நால்வகைப் படையைப் பெற்றிருந்தமையைக் காட்டும் சங்க இலக்கியச் சான்றுகளாகும்.

<u>மன்னர் பின்னோர்</u>

மன்னர் பின்னோராக விளங்கும் ஏனைய மக்கள் வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் மாலையும் தேரும் மாவும் மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய (தொல், பொரு, மரபி, 628) என்ற நூற்பாவின்படி வில், வேல், கழல், கண்ணி, தார், மாலை, தேர், குதிரை ஆகியன கொண்டு போர் புரிய, வாழ

இலக்கணம் பெற்றுள்ளனர், நூற்பாவை கூர்ந்து நோக்கினால் தேர், குதிரை ஏறிப் போர் புரியும் ஏனோர் வில், வேல் ஆகியன கொண்டு போர் புரிவர் என்பது தெரியக் கிடைக்கும்.

இவ்வகையில் போர்க் கருவிகளில் முக்கிய இடம் வகிக்கும் வாள், வில், வேல் முதலியன குறித்த சிறப்புச் செய்திகள் பல தமிழிலக்கியங்கள் வாயிலாக கிடைக்கின்றன. அவை பின்வருமாறு.

__தமிழரின் முப்போர்க்கருவிகள்__

தொல்காப்பிய காலம் முதலாக தமிழர் மூன்று போர்க்கருவிகளை முதன்மையானதாகக் கையாண்டு வந்துள்ளனர். அவை வாள், வில், வேல் என்பனவாகும். வில்லும் வேலும் வாளுமேஇவரது முந்திய ஆயுதங்கள் (கந்தையாபிள்ளை. தமிழகம் ப. 176) என்ற குறிப்பும் இக்கருத்தினை அரண் செய்யும்.

இவற்றுள் வாள் என்னும் போர்க்கருவி நெருங்கி நின்று போர் செய்கை யில் பயன்படுத்தப் படுவதாக இருந்துள்ளது. வில்லும் வேலும் பகைவரை தூரத்தில் இருந்து தாக்கப் பயன்பட்டுள்ளது, இம்முப்போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சங்கஇலக்கியங்களிலும், அவற்றைத் தொடர்ந்த இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

இம்முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளிகடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேலுறை ஆகிய கருவிகளையும் தமிழர் பயன்படுத்தியதாக புறநானூற்றின் முன்னுரையில் உ.வே. சாமிநாதைய்யர் குறிப்பிடுகின்றார்.

மேலும் போர்க்கருவிகள் தம்மை ஊறு செய்யாவண்ணம் காக்க கரடித் தோலாற் செய்யப்பட்ட , புலித்தோலாற் செய்யப்பட்ட கேடயமென்னும் கருவி களைப் பயன்படுத்தியதாக கந்தையாப்பிள்ளை குறிப்பிடுகின்றார் (தமிழகம். ப.176).

வாள்

தொல்காப்பியத்தில் வாளோர் ஆடும் அமலை(தும்பைத்திணை), ஔவாள் வீசிய நூழில்(தும்பைத்திணை). வாள்மங்கலம் (பாடாண்திணை) ஆகிய இடங்களில் வாள் என்னும் சொல் போர்க்கருவியாக கருதுமளவிற்கு எடுத்தாளப் பட்டுள்ளது. சங்கப்பாடல்களிலும் பல இடங்களில் வாள் என்னும் போர்க்கருவி எடுத்தாளப் பெற்றுள்ளது. 'போர்க்கு உரைஇப் புகன்று கழிந்தவாள் உடன்றவர் காப்புடை மதில் அழித்தலன் வான்உற மூழ்கி உரு இழந்தனவே' (புறநானூறு 97), 'ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (புறநானூறு 312), என்ற சங்கப்பாவடிகள் வாள் வெற்றி காட்டுவனவாகும்.

வாள் என்பது ஆண்களுக்கு மிகுதியும் பயன்படும் போர்க்கருவி என்றாலும் அதனைப் பெண்களும் கையாண்டுள்ளமை மற்றொரு புறநானூற்றுப் பாடல்வழி புலனாகின்றது. 'கொண்ட வாளொடு படுபுனம் பெயராச் செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய படுமகன் கிடக்கை காணூஉ ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே' (புறநானூறு 63) என்ற காக்கைப் பாடினியார் பாடலடிகள் வீரத்தாய் ஒருத்தி வாள் கொண்டு போர்க்களம் புகுந்த செய்தி பெண்களின் வாள் பயன்பாட்டிற்குச் சான்றாவதாகும்.

வேல்

வேல் – முருகக் கடவுளின் கருவியாக சங்க இலக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. வேல் கொண்டாடும் வேலன் அகப்பாடல்களில் முக்கியப் பாத்திரமாக அமைக்கப் பெற்றுள்ளான். புறம் சாராத அகம் சார்ந்த பயன்பாடு இதுவாயினும் வேல் என்னும் கருவியை மக்கள் போற்றியமைக்குச் சான்றாக மேற்கருத்து விளங்குகிறது. தொல்காப்பியத்தில் 'பெரும்பகை தாங்கும் வேலினானும்' என்று வேல் குறிக்கப்பட்டுள்ளது.

ஔவையார் அதியமானைக் காட்சிப்படுத்தும்போது 'கையது வேலே, காலன புனைகழல்' (புறநானூறு 100) என்று வருணிக்கிறார். 'பூ ஆர் காவின் புனிற்று புலால் நெடுவேல் எழுபொறி நாட்டத்து' (புறநானூறு 99), 'நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார் ஒண்படைக் களிறு பெயர்த்து எண்ணினி விண் இவர் விசும்பின் மீனும்' (புறநானூறு 302), 'பீலிக்கண்ணி பெருந்தகை மறவன் மேல்வரும் களிற்றொடு வேல் துறந்து' (புறநானூறு 274), 'திறல் ஒளிறிலங்கு நெடுவேல் மழவர' (புறநானூறு 88), 'சாந்தமைமார்பின் நெடுவேல் பாய்ந்தென' (புறநானூறு 63) முதலான குறிப்புகளால் வேல் என்னும் போர்க்கருவி அதிக அளவில் பயன்படுத்தப்பட்டமைதெரிய வருகிறது.

சிறிய பருவத்தின்போதே வேல் என்னும் போர்க் கருவி தாயால் மகனுக்கு அறிமுகப்படுத்தப் பெற்று தரப்பெற்றமை மற்றொரு புறநானூறு பாடலால் தெரியவருகிறது. “இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி வேல்கைக் கொடுத்து வெளிது விரிந்து உடீஇப் பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி” (புறநானூறு 279) என்ற பாடலில் வேலின் உயரம்கூட இல்லாத சிறுவனுக்கு வேல் என்னும் கருவியைத் தந்து அதனைப் பயன்படுத்தக் கற்றுத்தரும் பெண்ணின் வீரஉணர்வு இங்கு கருதத்தக்கது.

<u>வில்</u>

வில், அம்பு, அம்பறாத்தூணி இவை மூன்றும் அமைந்த கூட்டுக் கருவியாக தமிழர்கள் வில்லைப் பயன்படுத்தியுள்ளனர். ‘கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்’ (தொல்காப்பியம், புறத்திணையியல் 16) என்று இக்கருவியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ‘வினை வல் அம்பின் விழுத்தொடை மறவர்’ (அகநானூறு 105), ‘எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண் கூர்ந்து பிடிக்கணம் பிரிந்த’ (முல்லைப்பாட்டு) , ‘வைந்நுணைப் பகழி’ (முல்லைப் பாட்டு), ‘உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு’ (புறநானூறு 310), ‘எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என’ (புறநானூறு 9) முதலான அகச்சான்றுகள் சங்க காலத்தில் வில் பயன்படுத்தப் பட்டமைக்கான சான்றுகளாக விளங்கு கின்றன.

இவ்வாறு இம்முக்கருவிகளும் பெரும்பான்மையும் சங்ககாலத் தமிழரால் பயன்படுத்தப் பெற்றுள்ளன. ஔவையார் பாடிய பாடல் ஒன்று இம்முக்கருவிகளையும் ஒருங்காகக் காட்டுவதாக உள்ளது. ‘மார்புறச் சேர்ந்து ஒல்கா தோல் செறிப்பு இல் நின் வேல் கண்டவர் தோல் கழியொடு பிடி செறிப் பவும். வாள் வாய்த்த வடுப் பரந்த நின் மற மைந்தர் மைந்து கண்டவர் புண் படு குருதி அம்பு ஒடுக்கவும், நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது’ (புறநானூறு 98) என்ற இப்பாடலடிகள் முக்கருவிகளும் ஓரரசனிடத்தில் இருந்தமையைத் தெளிவு படுத்துகிறது.

<u>படைக்கலக் கொட்டில்-தொழிற்கூடம்</u>

சங்ககாலத் தமிழர் போர்க்கருவிகளைப் பெரும்பாலும் இரும்பால் ஆக்கி கொண்டனர். அவற்றைப் புதிதாக உருவாக்கிட. சீர் செய்ய உலைக் கூடங்களை அவர்கள் அமைத்துக் கொண்டனர். ‘வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே’ (புறநானூறு– 312) என்ற பொன்முடியார் பாடலின் வழி யாகக் கொல்லர்கள் தம் பட்டறையில் வேல்வடித்துத் தந்துள்ளனர் என்பது தெரிய

வருகின்றது. 'இரும்பு முகம் சிதைய நூறு ஒன்னார் இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே' (புறநானூறு-309) என்பதும் ஆகுபெயரால் போர்க் கருவியைக் குறிக்கும் பாடலடியாகும்.

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,
கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,
கொல் துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல்எம்கோமான்,.வைந்நுதிவேலே.

(புறநானூறு, 95)

என்ற பாடலில் ஔவையார் - படைக்கலன்களின் நிலையையும், படைக்கலத் தயாரிப்பையும் காட்டுகிறார்.

தொண்டைமான் படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் மயிற்பீலிகள் அணிவிக்கப் பெற்று. மாலைகள் சூட்டப் பெற்று, நெய் பூசப்பெற்று, அதன் கூர்மைசரி செய்யப் பெற்று தக்கவகையில் வைக்கப் பெற்றிருந்ததாக பாடலின் முற்பகுதி குறிக்கிறது.

பின்பகுதியில் அதியமான் படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் உடைந்து கிடக்கும் காட்சி காட்டப்பெறுகிறது. இங்குப் பகைவர்களைக் குத்தியதால் வேலின் நுனி சிதைந்து கிடக்கிறது. மற்ற போர்க்கலன்களும் உடைந்து கிடக்கின்றன. போரில் வெற்றி கொண்டபின் வெற்றியை ஏற்படுத்தித் தந்த போர்க் கருவிகளை வெற்றென களத்தில் விட்டுவிடாது மீண்டும் உலைக்களம் சேர்த்த மாண்பை இவ்வடிகள் விளக்குகின்றன.

இப்பாடலின் இறுதியடியில் அதியமான் கையில் வைத்திருக்கும் வேல் என்றைக்கும் கூர்மை மிக்கதாய் உடையாமல் உள்ளது என்ற புகழ்க்குறிப்பு காணப்படுகிறது. இவ்வாறு போர்க் கருவிகளை உருவாக்கிக் கொள்ளவும். சரியாக்கிக் கொள்ளவும் சங்கத்தமிழர் திறம் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகிறது.

<u>படைவீடு</u>

போரில் வெற்றிபெற்றபின் வென்ற வீரர்கள் தோற்ற நாட்டில் படைவீடு அமைத்துத் தங்குவர். அந்தப் படைவீடு உறுதி ஒழிந்த, சிதைந்த போர்க்கருவிகள் கொண்டு கட்டப் பெற்றிருக்கும். முல்லைப்பாட்டில் அப்படி ஒரு படை வீடு அமைக்கப் பெற்றிருந்தது. ‘கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை கடுப்ப, நல் போர் ஓடா வல் வில் தூணி நாற்றி கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை பூந்தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து. வாங்கு வில் அரணம் அரணம் ஆக' (முல்லைப் பாட்டு 37-42) என்ற முல்லைப்பாட்டின் பாடலடிகளில் பயன்படா நிலை எய்திய போர்க்கருவிகள் மாற்றுவழியில் தங்கும் பாடிவீட்டின் சுவர்களாக மாற்றப்பட்டுள்ளமைகுறிக்கப்பட்டுள்ளது. உடைந்த போர்க்கருவி களின் பகுதிகள் தூணாக மாற்றப் பெற்று. கயிற்றால் அவை இறுக பிணைக்கப் பெற்று குந்தம், கிடுகு முதலானவை தடுப்புச் சுவர்களாகவும் துணிகள் கூரைகாளகவும், அமைக்கப் பெற்றமைமேற்காண் வரிகளால் தெரிய வருகிறது.

சங்கம் மருவிய காலத்திலும் இம் மூவகைக் கருவிகள் பெருமளவில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. வில் ஏர் உழவர் பகைகொளினும்(குறள் 872), பிழைத்த வேல் ஏந்தல் இனிது(கு,772) (மேலும் வேல் பற்றிய குறட்பாக்களின் எண்கள், 113,774,775,772,546,550). வாள் ஆண்மை(கு, 614), தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்(குறள் 828), தெரிகணை எஃகம் (களவழி 5) என்றவாறு வில் வாள் வேல் ஆகிய படைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டுள்ளமைக்குத் தக்க சான்றுகள் உள்ளன.

குறளில் காட்டப்பெறும் ‘தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்' என்ற தொடர் வஞ்சகமாக பழிதீர்க்கும் பான்மை திருவள்ளுவர் காலத்தில் இருந்த மையை எடுத்துரைப்பதாகும். சங்க காலத்தில் நிலவிய போர்த்தூய்மைஇக்காலம் முதல் திரியத் தொடங்கியது என்பதற்கு இக்குறள் சான்றாகிறது.

காப்பிய காலத்தில் ‘வாளும் குடையும் மயிர்க்கண் முரசும் நாளொடு பெயர்த்து' (சிலம்பு 5,89) என்று சிலப்பதிகாரத்துள்ளும் வாள் என்ற போர்க் கருவி சொல்லாட்சி பெற்றுள்ளது.

‘ஒளிறுவாள் மறவரும். தேரும் மாவும் களிறும் சூழ் தர' (விழாவறை காதை 69-70) என்று மணிமேகலையில் நாற்படைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது, மேலும் இந்நூலில் ‘அம்பு ஏவுறு மஞ்சை, ஆவக்கணைக்கால் காணாயோ அம்புப்புட்டில்' (துயிலெழுப்பிய காதை64), ‘காய்வேல் வென்ற கருங்கயல்' (உதய குமாரன் அம்பலம் புக்க காதை) என உவமைகள்

வாயிலாகவும் இயல்பாகவும் போர்க் கருவிகள் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. (மன்மதனைக் குறிக்க பல இலக்கியங்களில் வில் பயன்படுத்தப் பட்டுள்ளது)

காப்பியகாலத்தின் பிற்காலத் தொடர்வாகத் தொடர்ந்த கம்பராமாயணம் மற்றும் வில்லி பாரதம் ஆகிய இலக்கியங்களில் போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. இராமாயணத்தில் கம்பர் அம்புகளின் பல்திறன்களை எடுத்துரைக்கிறார். அம்புகளின் வகைகள். அவற்றின் இயல்புகள் குறித்த பல செய்திகள் கம்பரின் வாயிலாகக் கிடைக்கப் பெறுகின்றன.

அதே நேரத்தில் இப்போக்கிலிருந்து வில்லி பாரதம் சற்று வேறுபட்டு படைக்கருவிகளின் வியூகங்கள். படைக் குழுக்களின் வியூகங்கள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தருகின்றது.

வில், அம்பு, அம்புப்புட்டில் ஆகியவை அடங்கிய இக்கூட்டுக்கருவி தமிழர் போர்வாழ்வில் பெருத்த வளர்ச்சி அடைந்துள்ளமையை மேற்கண்ட இருகாப்பியங்கள் வழியாக அறிய முடிகின்றது.

கம்பராமாயணத்தில் இடம்பெறும் 'வேலோடு வாள் வில் பயிற்றலின்' (பாலகாண்டம் நகரப்படலம் 12) என்ற அடி தமிழர்தம் மரபு சார் முக்கருவிகளின் பயன்பாட்டைக் குறிப்பிடுவதாக உள்ளது. மேலும் சங்கரன் கொடுத்த வாளும், அங்கதன் உடைவாள் ஏந்த ஆகிய கம்பராமாயணப் பாடல்தொடர்கள் வாள் பயன்பாட்டிற்கான அகச்சான்றுகளாகும்.

இவை தவிர வேறு கருவிகளையும் கம்பராமாயண காலத்தில் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். தோமரம் சக்கரம் சூலம் கோல் மழு நாமவேல் உலக்கை வாள் நாஞ்சில் தண்டு எழு வாமவில் வல்லையம் கணையம் மற்று உள சேமவெம் படை எலாம் சுமந்து சென்றவால் (கும்பகர்ணன் வதைப்படலம் 105) என்ற போர்ப்படை வரிசை காட்டும் பாடலின் மூலம் தமிழர் பயன்படுத்திய பல போர்க்கருவிகள் அறியக் கிடைக்கின்றன.

இராவணன் மூலபலம் என்ற தனது மிக வலிமைவாய்ந்த படைக் குழுமத்தை வைத்திருந்த குறிப்பு ஒரு பாடலில் காட்டப்படுகிறது. 'சூலம் வாங்கிடின், சுடர்மழு ஏந்திடின், சுடர் வாள் கோலும் வெஞ்சிலை பிடித்திடின், கொற்றவேல் கொள்ளின், சால வன்தண்டு தரித்திடின், சக்கரம் தாங்கின், காலன், மால், சிவன், குமரன், என்று இவரையும் கடப்பார்.' (மூலபல வதைப்படலம்,11) இப்பாடலில் மூலபல படைகள் வைத்திருந்த போர்க்கருவிகள் தரப்பெறுகின்றன.

இவைதவிர வில் என்ற போர்க்கருவியை மிகத் திறமைவாய்ந்ததாகக் கம்பர் தன் இராமாயணத்துள் காட்டியுள்ளார். இராமனின் வில் எதிரியைத் தாக்கி விட்டு அதன்பின் கடல் சென்று தன்னைத் தூய்மைசெய்து கொண்டு மீண்டும் அவனது அம்பராத்தூணியில் வந்து சேரும் பெருமையதாகக் கம்பரால் படைக்கப் பெற்றுள்ளது. மேலும் இராமனின் வில் ஏழுமராமரங்களைத் துளைத்தது, வருணனை அழைத்தது. தாடகை, வாலி, இராவணன் ஆகியோரை அழித்தது போன்ற அருஞ்செயல்களை ஆற்றியதாகவும் இராமாயணக்கதை செல்வதால் வில் என்ற போர்க்கருவி மேலும் சிறப்புடையதாக ஆக்கப் பெற்றுள்ளமை தெரியவருகிறது.

ஆயிரக் கோடி பல்லம், ஆயிரக் கோடி நாகக்கணை. கோட்டியின் தலைய கோடி கோடி அம்பு, கங்கபத்திரம், திங்களின் பாதி கோடி. கோரையின் தலைய கோடி கொடுங்கணை அரக்கன், பாரையின் தலைய கோடி, தாமரை தலைய வாளி, வச்சிரப்பகழி கோடி, முச்சிரப்பகழி, அஞ்சலி அஞ்சுகோடி (நாகபாசப் படலம் 107 முதல் 113 வரையுள்ள பாடல்கள் தரும் போர்க்கருவிகள்) ஆகியவற்றை இந்திரசித் பயன்படுத்தியதாக கம்பர் தெரிவிக்கின்றார், மேலும் அவன் வைத்திருந்த பிரம்மாத்திரம், நாகபாசப்படை ஆகியன மிகத் திறமை வாய்ந்ததாக இராமாயணத்துள் காட்டப்படுகிறது.

இவைதவிர இக்காப்பியத்துள் நேருக்கு நேர் போர் செய்யும் காலத்து ஒரு போர்ப்படைக் கருவிக்குத் தக்க எதிரானதாக மறுபடை ஏவப்படும்போது அவை இரண்டின் செயல்களை கம்பர் எடுத்துரைக்கின்றார். இதன்வழி போர்க்கருவி களின் எதிரெதிர் செயல்பாடுகள் விளக்கம் பெறுகின்றன. கீழே இராமஇராவணப் போரின் போது பயன்படுத்தப் பெற்ற போர்க்கருவிகளின் பட்டியல் தரப்பெறுகிறது.

இராவணன்	இராமன்
தாமதப்படை	சிவன்படை
ஆசுரப்படை	அக்கினிப்படை
மயன்படை	காந்தர்ப்பம்
தண்டு	அம்பு
மாயைக் கணை	ஞானக்கணை
சூலம்	உங்காரம்
நிருதிப்படை	பாதிப்பிறைமுக அம்பு

மேற்காண் பட்டியல்வழி இராவணன் பலவகைப் படைகளைப் பயன்படுத்தியபோதும் இராமன் வில். அம்பு கொண்டே பதில் போர் செய்துள்ளான் என்பது தெரியவருகிறது. மேலும் உங்காரம் என்ற மூச்சின் மூலம் சூலப்படையைத் தகர்த்துள்ளான் இராமன். எனவே மூச்சும் ஒரு வகை

எதிர்கருவியாகச் செயல்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. பாதிப் பிறைமுக அம்பு என்பது இராமனின் தனிச்சிறப்பு மிக்க அம்பு ஆகும். இது கொண்டே இராவணனின் உயிர் தொலைக்கப் பெற்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

கம்பராமாயணம் மூலமாக அம்பு இணையற்ற இடத்தைத் தமிழரின் போர் வாழ்வில் பெற்றுவிட்டது என்பது தெரியவருகிறது.

இதற்கு அடுத்த நிலையில் வில்லிபாரதத்தில் படைவியூகம் பற்றிய பல செய்திகள் தெரிவிக்கப் பெற்றுள்ளன. 'தேர் பரி ஆள் எனும் படையுடை பாஞ்சாலர்' (படை எழுச்சிச் சருக்கம் 3), 'வாளினர், வேலினர், போர் வில்லினர்' (கிருட்டிணன் தூதுச் சருக்கம் -190) எனத் தமிழர்தம் முக்கருவிகளையும் வில்லிபாரதம் குறிப்பிடுகிறது. இவைதவிர

வெங் கணையத் திரள், குந்த நிறப் படை, வெம்பும் உலக்கைகள், போர்
பொங்கிய வச்சிரம், உந்து கலப்பைகள், புன் கழுவர்க்கம்,அயில்,
எங்கும் மலைத்து எழு செஞ் சுரிகைத் திரள், தண்டம்,இவற்றினொடும்
தங்கிய சக்கர பந்தி தரித்தன–தண் பல கைத்தலமே.

மேல் எழு பூங் கதிர் வாள் உறை போம்படி வீசின; வான்புடையே,
தோல்இனம் ஏந்தின; நீள் கவண் ஏந்தின; சோரிகள் சோர்ந்திடவே,
ஞாலம் எலாம் பொரு தோமரம் வாங்கின; நா ஒருமுன்றனவாம்
சூலமொடு ஓங்கின; பாசமொடு ஓங்கின;–சூழ் சில பூங்கரமே.
(கிருட்டிணன் தூதுச் சருக்கம்202 , 203)

என்ற பாடல்களில் மகாபாரதத்தில் பயன்படுத்தப்பட்ட போர்க்கருவிகளின் பட்டியல் தரப்பெற்றுள்ளது. இவை தவிர வில்லிபாரதத்தில் படை அமைப்பு பற்றிய பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. அவற்றின் பட்டியல் பின்வருமாறு.

போர்நாள்	கௌரவர்	பாண்டவர்
3	கருட வியூகம்	சந்திர வியூகம்
6	கிரவுஞ்ச வியூகம்	மகரவியூகம்
7	சகட வியூகம்	பாம்புவியூகம்
8	சூசிவியூகம்	சகட வியூகம்
9	மசருப்பதோபத்திரவியூகம்	பற்ப வியூகம்
11	சகட வியூகம்	கிரவுஞ்ச வியூகம்
12	மகரவியூகம்	மண்டல வியூகம்
13	சக்கர வியூகம்–	மகர வியூகம்

இப்பட்டியல் வழியாக பாண்டவர் கௌரவர் பயன்படுத்திய படை அமைப்பு முறைகள் தெரியவருகின்றன. படை அமைப்பு முறைகள் நாளுக்கு நாள் மாறு பட்டனவாகவும். ஒருவர் பயன்படுத்திய அமைப்பு முறை மற்றவரால் வேறு ஒரு முறை பயன்படுத்தப்பட்டமையும் தெரியவருகிறது. சக்கர வியூகம் அபிமன்யூவை அழித்த வியூகம் ஆகும்.

இவ்வாறு பண்டைக்காலத்தில் படைக்கருவிகளாக மட்டும் இருந்த முப்படைக் கருவிகள் பிற்காலத்தில் படை அமைப்புமுறையில் பயன்படுத்தத் தக்க அளவில் வளர்ச்சி பெற்றன என்பது தெரியவருகிறது.

<u>முடிவுகள்</u>

தமிழரின் அடிப்படை முக்கருவிகளாக வில் வேல் அம்பு ஆகியன பண்டைக் காலம் தொட்டே அமைந்திருந்தன. அவற்றைத் தயாரிக்கவும், சரி செய்து கொள்ளவும் பல தயாரிப்பு நிலையங்களைத் தமிழர் பெற்றிருந்-தனர்,திறனொழிந்த படைக்கருவிகளை அப்படியே விட்டுவிடாது மீண்டும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழர் கற்றிருந்தனர். முற்றிலும் பயனா-காத படைக்கருவிகள் படைவீடுகள் அமைக்கப் பயன்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்கள். சங்கம் மருவிய இலக்கியங்கள். காப்பியங்கள் ஆகியவற்றில் போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திலும் பண்டைத்தமிழர் போர்க்கருவிகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் படைக்கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதோடு. அவற்றின் வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளமுடிகின்றது. கம்பராமாயணம். வில்லி பாரதம் ஆகியவற்றில் படைக்கருவிகள் திட்டமிடப்பட்ட அளவில் தேர்ந்த அமைப்பு முறையில் கையாளப்பட்டுள்ளன என்பது தெளிவா கின்றது.

9

திருக்குறளில் ஊழியல் பொதுப்பார்வை

திருக்குறளில் அதிகம் விவாதத்திற்கு உரிய களமாக விளங்குவது ஊழியல் என்ற பகுதியாகும். கடவுள் மறுப்புக் கொள்கை, கடவுள் ஏற்புக் கொள்கை ஆகிய இருவேறுபட்ட கருத்துச் சார்புடையவர்கள் இவ்வதிகாரம் தரும் கருத்து விவாதங்களில் பங்கு கொண்டு ஒருவருக்கு ஒருவர் நேர் மாறான கருத்துக்களைத் தந்துள்ளமைஇதன் புதிர்த் தன்மைக்கு மேலும் சிறப்பளிக் கின்றது. இதற்கு உரை தந்த உரையாசிரியர்கள் வழுவிட முடியாத நிலையில் தான் கடவுள் ஏற்புக் கொள்கை உடையவரா அல்லது மறுப்புக் கொள்கை உடையவரா என்பதை அறிவித்திட வேண்டிய சிக்கலை ஏற்படுத்தும் பகுதியாகவும் இது உள்ளது.

ஊழியல் அதிகாரத்துச் செய்திகளை விட உரையாசிரியர்களின் கருத்துக் கள் அதிகம் ஆராயத்தக்கனவாக உள்ளன. ஊழியல் பற்றிய செய்திகளையும், அதன் புதிர்த் தன்மைகளையும், அது குறித்து உரையாளர்கள் கொண்டிருந்த நோக்குகளையும் ஒருங்கிணைத்தே ஊழியல் என்ற பகுதியை நோக்கவேண்டி உள்ளது. இந்த இயலைப் புரிந்து கொள்ள நுண்ணிய நூல் பல இருப்பினும் உண்மை அறிவே தேவைப்படுகின்றது.

ஊழ் என்ற ஓர் அதிகாரம் மட்டுமே ஊழியல் என்ற உட்பிரிப்பில் வைக்கப் பெற்றுள்ளது. திருக்குறளின் முப்பத்தெட்டாம் அதிகாரமாக ஊழ் அமைக்கப் பெற்றுள்ளது. இது அறத்துப்பால் முடிவு பெறும் சூழலில் பொருட்பாலுக்கு முன்னதாக அமைக்கப் பெற்றுள்ளது. காமத்துப்பால் இதனைத் தொடர்ந்து வருகிறது. அறத்தினால் விளையும் பயன் பொருளும், இன்பமும் என்பதால் இந்த

இயல் இவ்விடத்தில் வைக்கப் பெற்றுள்ளது என்பது அனைவரும் ஏற்கும் காரணம் ஆகும். இங்குப் பயன் என்பது வினைப்பயனைக் குறிப்பது ஆகும். அதாவது ஊழ் ஆகும்.

கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம், அறிவு முதல் வாதம் என்ற மூன்று அடிப்படை வாதங்கள் தமிழத்தின் இலக்கிய அரசியல் பின்னணியில் இதுவரை இருந்து வந்திருக்கின்றன. கருத்து முதல் வாதம் என்பது கடவுளை முதலாக வைத்து ஆராயும் பின்னணி பெற்றது. தமிழ் இலக்கியப் பரப்பில் மிக நெடும் பரப்பு இதன் அடிப்படை வாய்ந்ததே ஆகும். பொருள் முதல்வாதம் என்பது பொதுவுடைமைச் சிந்தனையின் விளைவால் தமிழகத்தில் தோன்றியது. அறிவு முதல் வாதம் என்பது பெரியாரியக் கொள்கைகளின் சார்பால் தமிழகத் திற்குக் கிடைத்த ஒரு வழியாகும். இம்மூன்று அடிப்படைகளில் கருத்து முதல் வாதத்தினரும், அறிவு முதல் வாதத்தினரும் ஊழியல் பற்றிய விவாதங்களில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். பொதுவுடைமைச் சார்புடைய உரைப் பகுதி திருக்குறளுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அளவில் மட்டுமே அமைந்தன (எஸ். இராமகிருஷ்ணன் அவர்களின் உரை இவ்வகைப்பட்டது. இவ்வடிப்படையில் ஊழியலை வள்ளுவர் படைத்தமைக்கான தேவை என்ன என்பதை ஆராய வேண்டி இருக்கிறது.

ஊழும் இறைச்சார்புடையோரும்

இறைவனை வணங்குவோர், இறைவன் மீது நம்பிக்கை கொண்டோர் ஊழ் என்பதனை இறைச் சார்புடையதாகவே எண்ணுகின்றனர். பெரும்பாலான பழைய உரையாசிரியர்கள் அனைவரும் இக்கருத்துடனே உரை கண்டுள்ளனர். பரிமேலழகர், காலிங்கர், பரிதியார் முதலான உரையாசிரியர்கள் இறைநம்பிக் கையின் பாற்பட்டே உரை கண்டுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் நெருக்கத்தில் இருக்கும் தற்போதைய சூழலில் திருக்குறளுக்கு உரைகண்டவர்கள் என்ற நிலையில் கடவுள் ஏற்புக் கருத்துச் சார்புடைய உரையாசிரியர்களைத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையின் கீழ் ஒருங்கிணைத்துக் கொள்ள முடியும்.

'உயிர் பொறி புலன்களால் செய்யும் செயல், செயல்களின் விளைவாகிய ஊழ், அவரவர் செயலின் பயனை ஊழை அனுபவிக்க வேண்டுமென்ற நியதி, எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் இறைவன், இந்த நான்கினையும் ஆராய்தலே தெளிவு' (குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை,தொகுதி.2. ப. 258) என்ற நிலையில் இறைவனை முன்வைத்து அவனின் வழிகாட்டுதலால் நடக்கும் நியதிக்கு ஊழ் எனப் பொருள் கொள்ளுகின்றனர் இறைச்சார்பாளர்கள்.

வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்ற குறளுக்கு உரை வகுக்கப் புகுந்த அறவாணன் வாழ்க்கையை வகுத்த தெய்வம் (ஊழ்) வகுத்திருந்தால் ஒழிய ஒருவர் கோடி அளவு பொருள்களைச் சேர்த்து வைத்திருந்தாலும் அவற்றை அனுபவிக்க முடியாது (க. ப. அறவாணனின் திருக்குறள் உரை.ப. 377) என்று தெய்வச் சார்புடைய உரையைக் காணுகின்றார்.

தெய்வத்தின் சார்பில் சென்ற காலத்தில் உயிர்கள் செய்த வினையின் பயனாக இக்காலத்தில் அனுபவிக்கும் நன்மை, தீமைகள் ஊழ் எனப்படுகின்றது என்று பல உரையாசிரியர்கள் மேற்கண்டோரைத் தொடர்ந்து கடவுள் ஏற்புக் கருத்துடன் ஊழியலுக்கு விளக்கம் தந்துள்ளனர்.

<u>ஊழும், இறை மறுப்பாளர்களும்</u>

ஊழ்னை இறைவன் தரும் பயன் என்ற கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டு உரை ஆக்கியவர்களின் வரிசையில் நிற்போரை கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையின் கீழ் ஒருங்கிணைக்க இயலும். ஊழ் என்பதற்கு இவர் இயற்கை நிலை எனப் பொருள் கொள்ளுகின்றார். ஊழ் என்பதற்கு உலக முறை எனப் பொருள் கொள்ளுகின்றார் வ. சுப. மாணிக்கனார், இயற்கை நியதி எனப் பொருள் கொள்ளுகின்றார் ச.வே.சுப்பிரமணியன். இவ்வரிசையில் குழந்தை, சிற்பி போன்றோரும் அடங்குவர்.

'வகுத்தான் எனத் தொடங்கும் முன்காட்டிய குறளுக்குப் பின்வருமாறு இம்மூவரும் பொருள் கொள்ளுகின்றனர். வகுத்து முறைப்படுத்திய வாழ்க்கை நெறியை ஒட்டி நடக்காவிட்டால் கோடிப் பொருள் குவித்தாலும் அதன் பயனை அனுபவிப்பது என்பது அரிதேயாகும்'. என்பது கலைஞர் உரை. அமைத்தவன் அமைத்த நெறிப்படி அல்லது கோடி தொகுப்பினும் நுகருதல் இயலாது என்பது வ.சுப. மாணிக்கனார் கருத்து.

'பொருள்களை ஈட்டுதல் என்பது ஒன்று. அவற்றைப் பயன் கொள்ளல் என்பது மற்றொன்று. ஈட்டிய பொருள்கள் பயன்படாமலும் போகலாம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது பழமொழி' என்பது ச.வே. சுப்பிரமணி யனாரின் உரை. இவ்வுரைகளைத் தொகுத்துக் காண்கையில் விதி, வினைப் பயன், தெய்வம் முதலியன பின்தள்ளப் பெற்று இயற்கையின் விளைவாக ஊழ் காட்டப் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது.

இவ்வாறு அடிப்படையில் வேறுபட்ட ஒன்றுக்கு ஒன்று முரணான இரு கருத்துக் களன்கள் உருவாக ஊழியல் என்ற அதிகாரம் இன்று வரை இருந்து வருகிறது என்பது உணரத்தக்கது. உரையாளர்கள் தம் கருத்துரைகளில் மாறுபட்டாலும் அவர்கள் தம் இலக்கிய உறவில் வேறுபாடு கொள்ளாது இருப்பது நயத்தக்க நாகரீகம் ஆகும்.

வள்ளுவர் ஊழின் வலி அறிந்தவர் என்றாலும், அவர் அதனையும் வெற்றி கொள்ள இயலும் என்ற கருத்தில் நிலைத்து நிற்கிறார். இதனை இவரின் ஊக்கமுடைமை, ஆள்வினைஉடைமைஆகிய அதிகாரங்களில் அமைந்த ஊழ் எதிர்ப்புக் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன. ஊழையும் உப்பக்கம் காணுதல், தெய்வத்தான்ஆகாது எனினும் முயற்சி கூலிதரும் ஆகிய குறள்களில் தன் முயற்சியால் மனிதன் முன்னேற வேண்டும் என்று வள்ளுவர் விரும்பியுள்ள விழைவு தெரியவருகிறது.

அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் பல அதிகாரங்களுள் ஊழின் ஆற்றலை வள்ளுவர் மறுப்பதுடன் ஊழ்வினையின் இலக்கணமாகச் சொல்லப்படும் அனைத்துக் கருத்துக்களுக்கும் எதிர்மறையான கருத்துக் களையே விளக்கிச் செல்கின்றார். எனவே ஊழ் பற்றிய கருத்துக்கள் திருக்குறளில் இடம் பெறச் செய்யப் பெற்றிருந்தாலும் அவை நியதிக் கோட் பாட்டை ஒட்டி அமையவில்லை. ஆதலால் வள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் நிலவிய ஊழ் பற்றிய சிந்தனையின் வளர்ச்சியே ஆசீவகமாக உருப் பெற்றிருக்க வேண்டும் என்று ஆசீவத்தின் தோற்றத்திற்கு வள்ளுவக் கருத்துக்கள் காரணமாக இருந்திருக்கும் வாய்ப்பினை நெடுஞ்செழியன் எடுத்துக்காட்டுகின்றார். (தமிழ்க் காவல் இணையதளம்) வள்ளுவர் ஊழினை மனித சமுதாயத்தினை முடக்கும் வன்மையுடையதாக ஆக்காது அதனை வெல்லும் ஆற்றலை மக்கள் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கையாண்டுள்ளார் என்ற கருத்தினை மேற்காட்டிய மேற்கோளின்வழி பெற முடிகின்றது.

<u>ஊழியல் தரும் கருத்துக்கள்</u>

ஊழ் இருவகைப்படும். அவை ஆக்கம் தரும் ஆகூழ், கேடுகளைத் தரும் போகூழ் என்பனவாகும். ஆகூழால் முயற்சி, கைப்பொருள் முதலியன பெருகும். போகூழால் சோம்பல் உருவாகும்(1). நல்லனவெல்லாம் தீய முடிவுகளைத் தரலாம். தீயனவெல்லாம் நல்ல முடிவுகளைத் தரலாம். இது ஊழின் புதிர்த்தன்மை(5). விரும்பிக் காத்தாலும் ஊழால் செல்ல வேண்டிய பொருள்கள் நிற்காது. இருக்க வேண்டிய பொருள்கள் போகாது(6). வகுத்தான் வகுத்த வழிப்படியே தான் வாழ்க்கை செல்லும். அவன் வழிப்படி அல்லாது மிகுந்த

செல்வத்தைப் பெற்றிருந்தாலும் அனுபவிக்க இயலாது(7). வறுமை உடையவர்கள் பொருள்களைப் பெற ஆசைப்படாது துறவு வாழக்கையை நாடிப் போவர். இவ்வாறு விட்டுவிலகிப் போவதற்கும் ஊழ் காரணமாக அமையவேண்டும்(8). நல்லன நடக்கும் போதெல்லாம் நன்மைஎன்று மகிழ்ந்து அனுபவிப்பவர்கள் தீமைநடக்கையில் அதனை ஏற்காது அவற்றைக் களைய நினைப்பது ஏன் எனத் தெரியவில்லை(9). ஊழினை விட வலிமையானது எதுவும் இல்லை. அது மற்ற எல்லாவற்றையும் விட முந்தி வரக்கூடியதாகும்(10).

மேற்கண்ட ஏழு குறள்கள் ஓரளவிற்குக் குழப்பம் இல்லாமல் பொருள் களைத் தருவன. எஞ்சியுள்ள மூன்று குறள்களில் பல்வேறு குழப்பங்கள் மண்டிக் கிடக்கின்றன.

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவு அகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை (2)
நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றும்தன்
உண்மைஅறிவே மிகும் (3)
இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு. (4)

இம்மூன்று குறள்களிலும் அறிவு, செல்வம் இரண்டுக்கும் இடையே நடைபெறும் போட்டியை முன்வைத்து வள்ளுவர் சில கருத்துக்களைச் சொல்லியுள்ளார்.

இழவூழ் எனப்படும் போகூழ் பேதமைதந்து நிற்பதாகும். ஆகல் ஊழ் என்னும் ஆகூழ் அறிவை விட (அகற்றி) செல்வத்தை வளத்தை அதிகம் தந்து நிற்கும்.(2)

நூல்கள் தரும் அறிவை விட உண்மைஅறிவு வலிமைவாய்ந்தது. செல்வம் காரணமாக அறிவற்றவர்கள் அறிவைப் பெற நுண்ணிய நூல்கள் பல கற்றாலும் உண்மைஅறிவு என்பது உயிர்களுடன் ஒட்டி நிற்பது. அதற்கு இணை யாக வருவிக்கப் பெற்ற அறிவு நிற்காது(3).

அறிவு உலகம், பொருள் உலகம் இவை இரண்டும் வேறு வேறானவை. பொருள் உலகத்தை ஆகூழால் கொண்டு வரமுடியும். அறிவு சார்ந்த உலகத்தை அதனால் கொண்டு வரவேமுடியாது. எனவே ஊழ் என்பதற்கும் அறிவு என்பதற்கும் நேர் முரண் உண்டு. ஊழையும் உப்பக்கம் காணும் திறம் உண்மை அறிவு, ஊக்கம் பெற்றவர்களிடத்தில் உண்டு. அவர்கள் வெற்றி பெறுவார்கள். எனினும் இருவேறுபட்ட அறிவுசார், அறிவற்ற, செல்வம் சார், செல்வமற்ற உலகம் என்ற இரு நிலையில் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

மேற்கண்ட மூன்று குறள்கள் பெருத்த உரை மாறுபாடுகளைக் கொண்டு விளங்குவன. இவற்றிற்கான விளக்கங்கள் உரையாசிரியர்கள் தம் தரத்திற்கு ஏற்ப வேறுபட்டு பொருள் கொள்ளப்படுகின்றன. கட்டுரையாசிரியர் இவற்றை கருத்து முதல் வாதம், அறிவு முதல் வாதம் முதலான இற்றைக்கால நோக்கங் களின்படி அணுகியுள்ளார். இதன்மூலம் தற்கால உலகையும், மக்களையும் பிரித்து இனம் காண முடியும். செல்வம் சேர்ப்போர் அதனையே குறிக்கோளாக இயங்கியும், எழுந்தும், சுருங்கியும், தேய்ந்தும் வருகின்றனர். அறிஞர்கள் அறிவினை மையமிட்டு செல்வத்தைப் புறந்தள்ளி தன் வழி நடந்து செல்லு கின்றனர். இக்கருத்து வள்ளுவர் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. தற் போதும் உள்ளது. இனியும் இம்முரண் அழியாது நிற்கும் என்பதில் ஐயமில்லை.

10

இலர் பலராகிய காரணம்

"செய்க தவம், செய்க தவம், தவம் செய்தால் எய்த நினைத்ததை எய்தலாம்". என்பது பாரதியார் கூற்று. இங்கு தவம் என்ற சொல் காட்டிடை தனித் துறைதல், ஞானம் தேடி கோயில் குளம் சுற்றல், யாகம் இயற்றி இறைவனிடம் வேண்டுவன பெறுதல் என்ற பொருளில் பாரதியாரால் கையாளப்பெறவில்லை. மாறாக, ஒரு பொருள் குறித்த சிந்தனை. அதன் செயல்வடிவம், பல்வேறு சூழ்நிலைகளிலும், இன்னல்களிலும் தான் கொண்ட சிந்தனையிலேயே கவனம் செலுத்தி வெற்றிபெறுதல் என்ற பொருளுடையதாகக் கையாளப்பெற்றுள்ளது. பாரதியாரின் இவ்வடிகள் வழியாக எய்த நினைக்கும் எதையும் தவம் மூலம் பெறலாம் என்ற கருத்து பெறப்படுகின்றனது.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும் (கு.எ.265) என்ற குறள் மேற்கண்ட பாரதியின் கருத்திற்கு விதையாகும். இக் குறளில் காட்டப்பெற்றுள்ள செய்தவம் என்ற சொல் வினைத்தொகையில் அமைந்து முக்காலத்திற்கும் உரியதாக விளங்குகிறது. முயலப்படும் என்ற வினையும் தவமுயற்சிகள் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டே இருக்கும், வெற்றி அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் என்பதை உணர்த்துவதாக வள்ளுவரால் படைக்கப் பெற்றுள்ளது.

வேண்டியதை வேண்டியாங்கு பெற உதவும் தவம், துறவறத்தார்க்கு மட்டுமே உரியது அன்று. தவம் செய்வோர் துறவிற்குக் கூறப்பெற்ற இலக்கண வரையறைகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதாவது ஐந்துபுலத்தை விடல் வேண்டும் (கு.எ. 343), வேண்டின் உண்டாகத்

துறக்க(கு.எ.342), யான், எனது செருக்க அறுக்க வேண்டும்(கு.எ. 346), பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும் (கு. எ.350) என்ற இலக்கணங்கள் தவம் செய்வோர்க்குத் தேவைப்படுவதில்லை. செய்பவர் செய்பவராகவே, தன்னை எவ்விதத்திலும் மாற்றிக் கொள்ளாதவராக, எதையும் குறைத்துக் கொள்ளாத வராக, எவற்றையும் மிகுத்துக்கொள்ளாதவறாக தம் கருமம் செய்து முடித்தால் அதுவே தவமாகிறது.

<u>தவத்திற்கான இலக்கணங்கள்</u>

தவத்திற்கும் இலக்கணங்கள் உண்டு. அவை பின்வருமாறு. உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை(கு.எ.261), தன்னுயிர் தானறப் பெறல் (கு.எ.268) ஆகியன தவத்திற்கான இலக்கணங்கள் ஆகும்.

இராவணன் சங்கரனிடம் வாள் பெற்றதும், சூரபன்மன் வச்சிரகம்பம் ஏறி தன்னைத் தூளாக்கி நின்றதும், சில தவமுறைகளாகும்.

கடிதின் உச்சிநின் றுருவியே வச்சிர கம்பத்து
அடித னில்சென்று சூரபன் மாவெனும் அவணன்
படிவ முற்றுநுண் துகளுற உளம்பதை பதைத்து
முடிய மற்றது கண்டனன் மடங்கல் மா முகத்தோன்.

(கச்சியப்பர், கந்தபுராணம், பா.எ.240)

என்பது சூரபதுமன் செய்த தவமுறையாகும். மேற்கண்ட இரு சான்றுகளும் தன்னைத் தானே துன்புறுத்திக் கொண்டு, தவமியற்றி வெற்றி பெற்றதற்கான இலக்கியச்சான்றுகள். தவம் என்பது தனக்கு உற்ற நோய் நோன்றல் என்ற திருக்குறள் எல்லையைத் தாண்டி, இவ்விரு செயல்களும், தனக்குத்தானே துன்பம் செய்து கொண்ட நிலைமையின.

தன்னுயிர்க்கு உறுகண் ஏற்பட்டால், அதைப் பொறுத்துக்கொண்டு, பிற உயிர்களுக்கு உறுகண் செய்யாமல் இருத்தல் மிகச் சிறந்த தவமாகின்றது. இதன்மூலம் வள்ளுவர் உயிர்ப்பலி செய்து யாகத்தால் அடையப்பெறும் தவத்தை ஏற்கவில்லை என்பது தெளிவு.

அண்ணல் காந்தியின் சத்தியாகிரகப் போராட்டம் தன்னை வருத்தி பிற உயிர்களைக் காக்கும் நிலைமைத்தது. 'பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்து நிற்பதான சத்திய சொரூபத்தை நேருக்கு நேராக ஒருவர் தரிசிக்க வேண்டுமாயின் மிகத் தாழ்மையான உயிரையும் தன்னைப்போலவே நேசிக்க முடிந்தவராக அவர் இருக்க வேண்டும்' (காந்தியடிகள், சத்திய சோதனை , ப.604) என்ற அவரின் கருத்து அப்படியே வள்ளுவரின் கருத்தினை வழி மொழிவதாக உள்ளது.

தவம் என்பது தன்னுயிர் அற மன்னுயிர் காத்தல் என்பது மற்றொரு இலக்கணமாகும். தன்னுயிர் தனக்குரிமையானது அல்ல, அது பிற உயிர்களுக் கானது என்ற நிலையில் இராமன் பதினான்கு ஆண்டு தவமியற்றி இராவணனைக் கொன்று வென்றான். அதனால் 'அவன் எளிவரும் உயிர்கட்கு எல்லாம் ஈன்ற தாய் எதிர்ந்தது ஒத்தான், அளிவரும் மனத்தோர்க்கு எல்லாம் அரும்பத அமுதம் ஆனான்' (கம்பர், இராமாயணம், மீட்சிப்படலம், பா.எ. 319.)

இங்கு வள்ளுவரின் தவ இலக்கணங்களுக்குச் சான்று காட்டப்பெற்ற அனைவருமே இல்லற நெறிப்பட்டோர் என்பது கவனிக்கத்தக்கது. அதே நேரத்தில் இராவணன், சூரபன்மன் ஆகியோர் மறவழிப்பட்டோர் ஆயினும் அவர்களும் தவமியற்றினால் வெற்றிகாண முடியும் என்பதையும் அறிய வேண்டும். மேலும் இவ்விருவரும் தவம் வெற்றிபெற தன்னை அழித்துக் கொள்ள முன்வந்தவர்கள். அத்தவத்தால் வெற்றிபெற்றபின், மற்ற உயிர்களைத் துன்பப்படுத்த முனைந்தவர்கள், அவர்கள் தொடர்ந்து தவவழியில் நின்றிருப் பார்களேயானால் அவர்கள் பிற உயிர்களைத் துன்புறுத்தி தமக்கு அழிவு தேடிக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதும் கருதத்தக்கது.

<u>தவம் செய்யத் தகுந்தவர்கள்</u>

தவம் செய்யத் தகுந்தவர்கள் இவர்களென வள்ளுவர் சுட்டிக் காட்டி யுள்ளார். தவத்தினைத் துறவுடையோர் செய்யலாம். அவர்களின் தவம் பிறப்பு அறுக்கும் உயர்ச்சியது. இவர் தவிர மற்றவர்களும் செய்யலாம். ஆனால் அவர்களின் தவம் அவரவர் தேவைகளுக்கு ஏற்ப மாறுபடுவது. ஆனால் மற்றவர்கள் தவம் துறவறத்தார்க்கு மட்டுமே உரியது என அதனைச் செய்ய மறந்துவிட்டமைவருத்தத்திற்குரியது என வள்ளுவர் கருதுகின்றார்.

துரந்தார்க்குத் துப்புறவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்-கள்(கு.எ.263) என்ற குறளில் தொனிக்கும் வருத்தத்தை இனி வாழும் இல்லறத்தாராவது களைய வேண்டும்.

தவமும் தவம் உடையவர்க்கே ஆகும். (கு.எ.2620) என்ற குறளடி தவம் என்பது தவமாகச் செய்வேன் என்ற தன்முனைப்புடையவருக்கே தவம் ஆகக் கூடியது என்பதைக்காட்டுவதாகும். நிலைத்த கொள்கை, நிலைத்த மனம் இல்லா மற்றவர்கள் தவம் செய்யப் புகுந்தால் அது அவமாக முடியும். எனவே தவம் செய்பவர்க்கு அவர் மனமே, அவர் கொண்ட கொள்கையே அவரை தவத்திற்கு உரியவராக ஆக்குகின்றது என முடிவு கொள்ளலாம்.

தவம் செய்பவர்கள் தாம் நினைத்த செயலை எச்சூழலிலும் தவறாது செய்யும் வலிமைபெற்றவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் வெறும் தவம் செய்ய வேண்டும் என்ற ஆசை உடையவர்களே ஆவர். தவம் செய்வார் தம் கருமம் செய்வார்மற்று அல்லார் அவம் செய்வார் ஆசையுள் பட்டு(கு.எ.266) என்பது குறள்.

இதன்மூலம் தவம் செய்வேன் என்ற ஆசை அனைவருக்கும் ஏற்படுவதுண்டு. ஆனால் அத்தவத்தைச் சரியான முறையில் செய்பவர்க்கே தவம் தவமாக அமைகிறது. மற்றவர்களுக்கு அவமாக தவம் அமைந்துவிடும். எனவே தவம் செய்வோம் என்ற ஆசையை உறுதியாக்கி, அதையே தவமாகச் செய்தால் தவம் அமையப்பெறும் என்ற வள்ளுவரின் கருத்து போற்றத்தக்கதா கின்றது.

தவத்தார் இயல்பு

தவத்தை ஏற்றுச் செய்ய எண்ணுபவர்கள் எவ்வகைத் துன்பம் தனக்கு ஏற்பட்டபோதும் கலங்காது செயலாற்றும் தீரம் மிக்கவர்களாவர். துன்பம் வர வர அவர்களின் தவம் மேலும், மேலும் உறுதியாகின்றது. சுடச்சுட ஒளிரும் பொன் போல, அவர்கள் துன்பம் வர வர மேன்மேலும் தவத்தின்பால் ஈர்ப்பு கொள்ளுவர் என்பது வள்ளுவரின் வாக்காகும்.(கு.எ.267)

தவத்தோர் வலிமை

மேற்கண்ட வகையில் தவம் செய்வோர், தம் தவத்தால் பயன் பல பெறு கின்றனர். தவம் செயவோர் தம் தவவலிமையால் கூற்றுவனையும்கூட அஞ்ச வைக்கமுடியும். கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப் பட்டவர்க்கு(கு.எ.269) என்பது குறள் நெறி.

தவமுடையவர்கள் மன்உயிர்கள் தொழத்தக்கப் பெருமையினர். தன் உயிர்தான் அறப்பெற்றானை ஏனைய மன்உயிர் எல்லாம் தொழும். (கு.எ.268) என்ற குறளடியும் இங்கு எண்ணத்தக்கது.

தவத்தார் தீயவரைத் தம் சொல்லால், செயலால் கண்டிக்கும் வல்லமை யைப் பெற்றவர்கள். நல்லவரை மேன்மைப்படுத்தவும் அவர்களாலும் இயலும்.

ஒன்னார் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணித் தவத்தான் வரும் (கு.எ.264) என்ற குறளடி மேற்கருத்தை எடுத்துரைக்கின்றது. இவையனைத்தும் தவத்தாரின் வலிமைகள் ஆகும்.

அறத்துப்பாலில் இடம்பெறும், தவம் என்னும் அதிகாரத்தில் மேற்கண்ட ஒன்பது குறட்பாக்களும், உரையாசிரியர்களால் ஒத்த பொருளுடையனவாகக் கருதப்பட்டுள்ளன. ஆனால் நிறைவு குறட்பாவான இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்பலர் நோலா தவர் (கு.எ.270) என்பதற்கு பொருள் காணப் புகுகையில் உரையாசிரியர்கள் அவரவர்க்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு நோக்கில் பொருள் கண்டுள்ளனர். இக்குறள் உணர்த்தும் உண்மைப்பொருள் என்ன என்பதை அறிய உரையாசிரியர்கள் பலரது கருத்துக்களையும் ஒருங் கிணைத்து ஆராய வேண்டியுள்ளது. இதற்காகவே இக்கட்டுரை வரையப்பெறு கின்றது.

உரையாசிரியர்கள் கருத்துக்கள்
பரிமேலழகர்

இலர் பலராகிய காரணம்உலகத்துச் செல்வர்கள் பலராக, நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாது எனின், நோற்பார் சிலர் நோலாதவர் பலர் அது தவம் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல். செல்வம், நல்குரவு என்பன ஈண்டு அறிவினது இன்மை குறித்து நின்றன. என்னை? நுண்ணுணர்வின்மை வறுமை, அஃதுடைமை பண்ண பணைத்த பெருஞ்செல்வம் என்றாராகலின். (தண்டபானி தேசிகர்(தொ.ஆ), திருக்குறள் உரைவளம் (அறத்துப்பால்), ப.358.)

மணக்குடவர்

பொருளில்லாதார் உலகத்துப் பலராதற்குக் காரணம், தவம் செய்வார் சிலராதல், அது செய்யாதார் பலராதல் என்றவாறு.

பருதியார்

பாக்கியவான்கள் சிறிதாக மிடியாளர் பெருத்ததாகிய காரியம் எது என்னில், தவம் பண்ணினவர்கள் அற்பம், தவம் செய்யாதார் பலராகையால் என்றவாறு.

காலிங்கர்

இவ்வுலகத்து இவ்வாறு தமது பேரிடர் நீங்கிப் பெரும்பயனுறுதலைப் பலரும் இலராதற்கு காரணம் யாதோ எனின், உலகத்தில் ஞானம் பெற நோற்பார் சிலர். மற்று நோலாதார் அளவிறந்தாராவர் என்றவாறு

கு. ச. ஆனந்தன்

துய்க்கும் பொருளின்றி அடிப்படைத் தேவைகளுக்கும்கூட, வக்கற்றுத் துடிக்கும் வறிவயர்கள் சமுதாயத்தில் பல்கிப் பெருகிப் போனதற்குக் காரணம் சமுதாயப் பயன் விளைவிக்கக் கூடிய பொதுக்கடமைகளை நிறைவற்றுபவரும் தனக்கு வந்துற்ற துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, சமுதாயத்தில் எவ்வகை இடுக்கணையும் செய்யாதிருப்பவரே மெல்ல மெல்லக் குறைந்து இறுதியில் சிலராகத் தேய்ந்துவிட்டனர். தம் கடமையை மறந்து ஆசை என்னும் தன்னலத் தேட்டத்தினால் உந்தப்பட்டுத் தவஞ் செய்யாதவர் பலராகப் பெருகிவிட்டனர் (இரா. சாரங்கபாணி(தொ.ஆ),திருக்குறள் உரைவேற்றுமை,ப.405.).

ச. வே. சுப்பிரமணியம்

உலகில் வறுமையுடையோர் பலர் இருக்கக் காரணம், தவம் செய்தோர் சிலர், செய்யாதவர் பலர்.(ச.வே. சுப்பிரமணியம் (உ. ஆ),திருக்குறள் நயவுரை, ப.85.)

தமிழண்ணல்

உலகில் பலர் செல்வம் இல்லாதவர்களாய் இடர்ப்படுகின்றனர். காரணம் என்ன? துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, தம்கடமையைத் தவமாகச் செய்வார் சிலர், அங்ஙனம் தாங்கிக்கொள்ளாதவர்களே பலர் ஆவர். அதனால் தான் பலர் வறுமையில் வாடுகின்றனர். (தமிழண்ணல்,திருக்குறள் நுண்பொருளுரை, ப.129.)

இலர் பலராதல் என்பதற்கு மட்டும் பலர் மாற்றுரை கண்டுள்ளனர். அவை பின்வருமாறு.

மு. வரதராசன்.

ஆற்றல் இல்லாதவர் பலராக உலகில் இருப்பதற்குக் காரணம்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

(அப்படிக் கூற்றம் குதித்தவர்கள்) பலபேர் இல்லாதிருப்பதற்குக் காரணம்

திருச்சி. கோ. வரதராசனார்

அறிவும், ஆற்றலும், இன்பமும் இல்லாதவர் பலராகவும், இவை உடையார் சிலராகவும் இருப்பதற்குக் காரணம்

<u>நாகை. செ. தண்டபாணியார்</u>

உலகத்தில் ஞானிகள் சிலராக, ஞானமில்லாதவர் பலராயிருத்தற்குக் காரணம்

<u>முத்து</u>

இலர் வாழ்க்கையில் பெற வேண்டிய சிறந்த பேறுகளைப் பெறாதவர் பலராதற்குக் காரணம்

<u>சாரங்கபாணி.</u>

இலர், பலர் என்பதில் இன்மைபொதுவாகக் கூறப்பட்டிருத்தலின் உரையாசிரியர்கள் பல வேறுபட்ட இன்மைகளைக் குறித்துள்ளனர். இலர் என்பதற்குப் பேரிடர் நீங்கிப் பெரும்பயன் உறாதார், ஆற்றலில்லாதவர் , அறிவும் ஆற்றலும் இன்பமும் இல்லாதார் , வாழ்க்கையில் சிறந்த பேறுகளைப் பெறாதார் எனப் பலவாறு உரைகண்டுள்ளனர். இன்மை என்பது மரபாக வறுமையைக் குறித்தலினாலும் சிறப்பாக அறிவின்மை இன்மையுள் இன்மை (841) என ஆசிரியர் கூறியிருத்தலினாலும், இவ்விரண்டு இன்மைகளையும் குறித்து எழுதிய உரைகள் சிறப்புடையன. (இரா.சாரங்கபாணி, மேலது)

இவ்வாறு இலர் பலராதல் என்ற தொடருக்குப் பழைய உரையா சிரியர்கள் முதல் இக்கால உரையாசிரியர்கள் வரை பலவகையில் பொருள் கண்டுள்ளனர். இவற்றை ஒப்புநோக்கி ஆராய்கையில் செல்வம் இல்லாமை, அறிவு இல்லாமை, ஞானம் இல்லாமை, ஆற்றல் இல்லாமை, புண்ணியம் இல்லாமை, காலனை வெல்லாமை, இன்பம் இல்லாமைஆகிய இல்லாமை களை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியிருப்பது தெரியவருகின்றது. இவற்றுள் எது சிறப்பு என்பது இனி ஆராயத்தக்கது.

<u>செல்வம் இல்லாமை</u>

செல்வம் இல்லாமையே பல உரையாசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளது. இதனை ஏற்கும் உரையாசிரியர்கள் பின்வருமாறு. பரிமேலழகர், மணக்குடவர், கு.ச. ஆனந்தன், ச. வே. சுப்பிரமணியன், தமிழண்ணல், சாலமன் பாப்பையா, சாரங்கபாணி ஆகியோர். இவர்கள் இன்மை என்பது வறுமையைக் குறித்து வருவது மரபு என்பதால் செல்வ இன்மையைக் கருதினர். மேலும் உரையாசிரியர்களுள் முதன்மையானவரான பரிமேலழகர் நல்குரவைக் (வறுமையைக்) கூறினமையான் அதனைத் தொடர்ந்து வந்த உரையாசிரியர்கள் பின்பற்றியுள்ளனர்.

மேற்கண்டவர்களின் உரைகளைக் காணுகையில், தவம் செய்வார்க்குச் செல்வம் தேவையா, தேவையில்லையா, செல்வத்தைத் துறக்கவேண்டுமா, வேண்டாமா என்பன தவ அதிகாரத்தின் ஒன்பது குறட்பாக்களில் சுட்டப்படாத நிலையில் வள்ளுவர் இலர் என்பதற்கு செல்வம் இல்லாமையைக் கருதியிருப் பாரா? என்ற ஐயம் எழுகின்றது. மேலும் அறத்துப்பாலில் செல்வம் இடம்பெறத் தேவையுமில்லை.

இன்மைஎன்பதற்கு வறுமை, நல்குரவு என்பது மரபின் வந்த பொருளாகலாம். ஆனால் இலர் என்பதற்கு வறுமையாளர் எனக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவ்வடிப்படையில் இலர் என்பதற்கு செல்வம் இல்லாதார் என்பது பொருந்தாததாகின்றது.

<u>**பிறஇன்மைகள்**</u>

இலர் என்பதற்கு அறிவின்மைஎன்பதாகப் பரிமேலழகரும், திருச்சி கோ. வரதராசனும், சாரங்கபாணியும்,

புண்ணியமின்மை(பாக்கியமின்மை) என்பதாகப் பருதியாரும்,

ஞானமின்மை என்பதாக காளிங்கரும், நாகை. செ. தண்டபாணியும்,

ஆற்றல் இன்மை என்பதாக மு. வரதாரசனும், திருச்சி. கோ. வரதராசனும்,

பேறு, இன்பம் இன்மை என்பதாக முத்துவும், திருச்சி. கோ. வரதராசனும்,

காலனை வெல்ல இயலாதமையாக (இதற்கு முன் குறளை ஒட்டிய பொருளாக) நாமக்கல் கவிஞரும் பொருள் கண்டுள்ளனர்.

இப்படிப் பல சிந்தனைகள் விளைகின்றபோது அவரவர் கருத்து அவரவர்க்கு சிறப்பளிப்பதாகத் தோன்றும். இவ்வாறு பல இன்மைகளை உரையாசிரியர்கள் கூறும்போதே, எந்த இன்மையும் இன்மையாகிவிடுகின்றது.

வள்ளுவரின் குறள் எவ்வித அடையும் இல்லாமல், இலரை இலராகவே காட்டுகின்றது. அதுவே இவ்வுரைமாறுபாட்டிற்கு பதில் ஆகும். இன்மைஎன்பது எவ்வின்மையும் இன்மைதான். மேற்சொன்ன எல்லா இன்மைகளையும் பொது வாக இன்மை என்றே சுட்டிவிட்டால் எல்லா உரையாசிரியர் கருத்தும் ஏற்கப்பட்ட தாகவும் ஆகிவிடும். குறளின் மூலத்திற்கும் எவ்வித இணைப்பும் இல்லாமல் இயல்பானதாகிவிடும்.

இவ்வின்மைகளைப் போக்கத் தவம் செய்ய வேண்டும். தவம் செய்தால் எவ்வின்மையும் இல்லாமல் ஆகிவிடும். ஆனால் இவ்வின்மையைப் போக்கும் தவத்தை எவரும் விரும்பிச் செய்வதில்லை. அதனால் அவர்களின் இன்மை இறுதிவரை இன்மையாகவே தங்கிவிடுகின்றது.

பணிமூப்பு காரணமாகச் சிலருக்கு எதிர்பாராமல் பதவி உயர்வு வந்துவிடுகின்றது. அத்தகுதியான இடத்திற்கு வந்ததும் அவர்கள் அத்தகுதிக்கு ஏற்பத் தம்மை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அப்படித் தகுதிப்படுத்திக் கொள்ள இயலாதவர்கள் தாழ்கின்றனர். தகுதிப்படுத்திக் கொள்ள முனை கின்றவர்கள் நோற்கின்றனர். இதுவே இக்குறளில் ஒளிந்திருக்கும் உண்மைப் பொருளாகும்.

தவம் என்பதை தம் கருமம் எனக் கொண்டால் அவரவர்க்கு அவரவர் கருமம், அவரவர் விரும்பிய கருமம் தவமாகிறது. தம் கருமத்தில் வெற்றி பெற தவம் அவசியமாகிறது. அத்தவத்தைப் பெற்றவர்கள் பலராக மாற இக்குறள் சிறந்த தூண்டுகோல்.

11

சுற்றம் சூழ வாழும் வள்ளுவ நெறி

மனிதன் சமுதாயச் சார்புடையவன். ஒவ்வொரு மனிதனும் சமுதாயத் தைச் சார்ந்தே வாழ வேண்டிய கட்டமைப்பில் உள்ளான். அவனின் தனி முயற்சி ஒரு புறம் அவனை உயர்த்தினாலும் அவன் சமூகத்தின் ஒரு அங்கமாக அந்தச் சமுகத்தின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவனாக வாழ்ந்தால் மட்டுமே அனைவராலும் போற்றப் படுகிற உயர் நிலைக்கு உயரமுடியும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (140)

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு (425)

மேற்சுட்டிய குறட்பாக்களும் மனிதன் சமூகச் சார்புடையவன் என்பதை உணர்த்துவனவாகும். உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பே மனிதர்க்குத் தேவையான அடிப்படை பண்பாகும். இப்பண்பினை ஒரு மனிதன் பெற வேண்டு மானால் சமூகத்தில் உள்ள அனைத்து மக்களோடும் இடையீடு இன்றிப் பழக வேண்டும். அனைவரும் மாசற்ற அன்பு கொள்ள வேண்டும். சண்டை சச்சரவு அற்ற ஒப்பற்ற உலகாக இவ்வுலகு உயர்வதற்கு இதுவே சரியான வழி. அந்த உன்னத வழியை உலகம் அடைவதற்காகவே இலக்கியங்கள், தத்துவங்கள் போன்றன நாடுகள் தோறும் தோன்றின. தோன்றிக் கொண்டு இருக்கின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் புலவன் இன் சொல் இவ்வுலகம் முழுமைக்கும் ஏற்கப்பட்டிருப்பதன் நோக்கமும் இதுவே ஆகும்.

சமுதாயக் கூட்டத்தில் மக்கள் அனைவரும் சரிசமம் என்ற போதிலும் அவர்களுடன் பழகுகின்ற போது, அன்பைப் பகிர்ந்து கொள்கின்றபோது அவரவர் குணம், பண்பு பார்த்தே பழகவேண்டி இருக்கிறது. மனிதர்களின் குணம், பண்பு போன்றன வெளிப்பட தெரிவதில்லை. அவை உடலுக்குள், உணர்வுக்குள், மனதிற்குள் புதைந்து கிடக்கின்றன. புதைந்து கிடக்கும் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இக்குணம் பண்பு போன்றவற்றிற்கான நிலையில் மனிதர்களைப் பிரித்து அறிந்து கொள்வது மிக்கடினம். இந்த கடின நிலையை எளிதாக்கிட வள்ளுவர் சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைகோடல், பெரியாரைப் பிழையாமை, சுற்றந்தழால் போன்ற பல அதிகாரங்களில் மனிதர்களை இனம் பிரிந்து அறிந்து கொள்ள ஏற்ற வழிகளை எடுத்துச் சொல்லியுள்ளார்.

மனிதன் சார்ந்து வாழ வேண்டிய சமுதாய அமைப்பு என்பது சுற்றத்தார், நண்பர்கள் போன்றோரை உள்ளடக்கியதாகும். நண்பர்களைப் பற்றி அறிந்து கொண்டு அவர்களிடம் நட்பு பாராட்ட நட்பு, தீநட்பு, கூடா நட்பு, நட்பாராய்தல் போன்ற பல அதிகாரங்கள் வழிகாட்டுகின்றன. சுற்றத்தார் குறித்த செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பாகக் கிடைத்தது சுற்றந்தழால் என்ற ஒரே ஓர் அதிகாரம் ஆகும்.

சுற்றந்தழால் என்ற அதிகாரம் பொருட்பாலில் அரசனுக்கு கூறப்படுகிற அரசியல் சார்புடைய கருத்துக்கள் கொண்ட பகுதியில் வைக்கப் பெற்றுள்ளது. அரசன் சுற்றத்தாரைக் காத்து அவர்களுக்கு நன்மைசெய்து, தானும் நன்மை பெற்று வாழ வேண்டும் என்ற நிலையில் இது வள்ளுவரால் படைக்கப் பெற்றுள்ளது. என்றாலும் இக்காலத்தில் சுற்றந்தழால் என்ற பண்பு ஆள்பவருக்கு உரிய பண்பா என்ற கேள்வி சில அறிஞர்களால் எழுப்பப்படுகிறது. இது குடியாட்சி நிலையில் ஆள்பவருக்கு உரிய பண்பு ஆகாது என்று கருதுகிறார் க. ப. அறவாணன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சார்பாளர்களைக் கொண்டு ஆளப்பெறும் குடியரசு அமைப்பில் ஆளுவோர் தம் உறவினரைத் தழுவி இருத்தலும், பதவி அளித்தலும் குடியரசு முறைக்கு ஏற்பானவை அல்ல (க. ப. அறவாணன்., திருக்குறள் சிறப்புரை, ப. 209) என்ற க. ப. அறவாணனின் கருத்து சிந்தனைக்குரியது.

இருப்பினும் ஆள்பவர் மன்னராக இருப்பினும், தேர்ந்தெடுக்கப் பெற்ற மனிதராக இருப்பினும் அவர் தனித்து இயங்கமுடியாதவரே ஆவார். அவர் சுற்றத்தால், மற்ற அதிகாரிகளால், நண்பர்களால் ஆன கூட்டத்தால்தான்

நன்மையோடு இயங்கமுடியும். இச்சூழலில் சுற்றந்தழால் என்ற அதிகாரம் உணர்த்தும் சமுதாய நெறி அனைத்து மனிதர்க்கும் உரிய நெறியாகின்றது.

இக்கருத்திற்கு அரண் செய்வதாக சமுதாய மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் பின்வருமாறு இவ்வதிகாரத் தேவையை எடுத்துரைக்கின்றார்.

"சுற்றம் ஆக்கம் தரும். பாதுகாப்பு தரும். சுற்றம் சூழ வாழ்தல் ஒருகலை. சுற்றம் பேணி வாழ்தலுக்கு இடையறாத அன்பு, நினைவில் வைத்துப் பாராட்டுதல், அன்பு காட்டுதல், ஒத்துப் போதல், குற்றம் பாராட்டாது இருத்தல் ஆகியன தேவையானது. நாடாள்வோருக்கும் சரி, தனி ஒருவராய் வெற்றி பொருந்திய வாழ்க்கை நடத்த விரும்புவோருக்கும்சரி சுற்றம் தேவை" (குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப. 158) என்ற அடிகாள் அவர்களின் கருத்து மனிதருக்கான சுற்றத்தின் இன்றியமையாமையை எடுத்துரைப்பதாக உள்ளது.

சுற்றந்தழால் என்ற அதிகாரத்தில் சுற்றத்தார் இயல்பும், சுற்றத்தால் ஏற்படும் நன்மை, சுற்றத்தினைப் பேணிக்காக்க வேண்டிய முறைமை, பிரிந்த சுற்றத்தை ஏற்றுக் கொள்ளுகிற முறைமை முதலியன வள்ளுவரால் எடுத்துரைக்கப்படுகின்றன.

சுற்றத்தார் இயல்பு

சுற்றத்தோடு தொடர்பற்று, பற்றற்றுச் சிலர் வாழ்ந்த போதிலும் அவர் களை ஒதுக்கிவிடாது தேவையான நேரத்தில் வந்து இருந்து உதவி செய்து பழமை பாராட்டும் பேரியல்பு சுற்றத்தாருக்கு மட்டுமே உண்டு என்ற அனுபவப் பாடத்தை இவ்வதிகாரத்தின் தலைக்குறள் எடுத்துரைக்கின்றது.

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள (521)

பழமைபாராட்டும் இப்பண்பு சுற்றத்தாரின் தனிச்சிறப்பாகும். மாதவி கண்ணகியின் உறவை ஏற்றிப் போற்றும் பாங்கு இக்குறளுக்கு இலக்கியமாகும்.

மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என உரிமைப்படுத்துகிறாள் மாதவி. மாதவிக்கும் கண்ணகிக்கும் இடையே நிலவிய முரண்பாடு மாதவியின் மகளான மணிமேகலையின் தொடர்வால் உறவாக மாறும் தன்மையைப் பெற்றது.

கண்ணகியும் கோவலனும் ஒருங்கிருக்கும்போது மாடலன் கூறும் மொழிகள் வழியாகக் கண்ணகி மணிமேகலையின் பிறப்பை அறிந்து மௌன மாகவே ஏற்றுக்கொள்ளுகிறாள். மேலும் வஞ்சிக்காண்டத்தில் மாதவி மற்றும் மணிமே கலையின் துறவினை எடுத்தியம்பும் அடித்தோழி வாயிலாகவும் இந்தச் சொந்தம் வலுவான நிலையைப் பெறுகிறது.

கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற்றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரியூட்டிய
மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

(மணிமேகலை 51-56)

என்ற அடிகளில் உள்ள உறவின் தொடர்பு மேற்குறளுக்கு இலக்கியம் என்பதில் ஐயமில்லை.

இதற்கு அடுத்த நிலையில் சுற்றத்தாரால் ஏற்படும் நன்மைகள் வள்ளுவரால் எடுத்துரைக்கப்படுகின்றன.

<u>சுற்றத்தாரால் ஏற்படும் நன்மைகள்</u>

அன்பு மாறாத சுற்றம் ஒருவனுக்கு அமைந்தால் அது அவருக்கு குன்றாத செல்வம் பலவும் தரும். (522) கரையில்லாத குளத்தில் நீர் தங்காதைப் போல சுற்றத்தார் துணையில்லாதவனின் வாழ்க்கையும் பயனற்றுப் போய்விடும். (523) இதனோடு தொடர்புடையதாக பின்வரும் நாலாடியார் பாடல் அமை கின்றது.

வயாவும் வருத்தமும் ஈன்றக்கால்
கவாஅன் மகற்கண்டு தாய் மறந்தாங்கு
அசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தான்
கேளிரைக் கானக் கெடும் (211)

கரு சுமந்தபோதும், ஈன்றபோதும் ஏற்பட்ட வருத்தங்கள் குழந்தையைப் பெற்றபின் அக்குழந்தையைப் பார்த்தபின் தீருவதுபோல வருத்தம் உற்றவர்கள் தம் சுற்றத்தாரைப் பார்த்தால் அவ்வருத்தம் தீர்வார்கள் என்ற பொருளுடையதாக இப்பாடல் அமைகின்றது.

உறவினர்களின் துணை மனிதத் துயரத்தை ஓட்டும் பயனுடையதாக உள்ளது என்பதை இவற்றின்வழி உணரமுடிகின்றது.

சுற்றத்தாரைப் பேணும் முறை

ஒருவன் செல்வந்தனாக இருக்கிறான் என்றால் அவன் அச்செல்வத் தால் பெறும் பயன் சுற்றத்தைக் காக்க வேண்டுவதே ஆகும்.(524) இனிய சொற்கள், கொடைத்தன்மைஉடையவனிடத்தில் அடுக்கடுக்காகச் சுற்றம் சூழ்ந்து நிற்கும்.(525) பெருங்கொடை கொடுப்பவனிடத்திலும், கோபப்படாதவன் இடத் திலும் சுற்றத்தார் சூழ்ந்து நிற்பர். (526) காக்கை தன் இனத்தைக் கூட்டி உண்ணுவது போல சுற்றத்தாரை அழைத்து அரவணைத்துக் கொள்ளவேண்டும் (527). இக்குறள்கள் தரும் இலக்கணத்தின்படி பல இலக்கியங்கள் அமைந்-துள்ளன.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்முழை அன்பின்வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல் அருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை
(கம்பராமாயணம். இலங்கைக்கேள்விப்படலம், 143)

தயரத மன்னன் இராமனால் ஏற்கப் பெற்ற சுற்றங்கள் அனைவருக்கும் தந்தையாக மாறிப் பொலிவுற்றான் என்ற கம்பனின் அடிகள் மேற்குறள்களின் பாற்பட்டதே. வேறு உள குழுவை எல்லாம் மானுடம் வென்றதற்குக் காரணம் சுற்றம் தான் என்பதைக் கூறவும் வேண்டுவதில்லை.

வேந்தனும் சுற்றமும்

இவ்வதிகாரத்தின் நிறைவில் இடம்பெறும் மூன்று குறட்பாக்கள் வேந்தர்கள் சுற்றத்தோடு கொள்ளவேண்டிய உறவுநிலையை எடுத்துரைக் கின்றன.

வேந்தன் சுற்றத்தாரின் தரமறிந்து அவர்களின் பெருமைக்கேற்ப செல்வ வரிசைகளை அளித்து அவர்களின் உறவைப் போற்றிக் கொள்ள வேண்டும். (528) காரணம் கருதியோ, காரணம் இன்றியோ பிரிந்து சென்ற சுற்றத்தார்கள் மீண்டும் இணைவது இயல்பு. இதற்குக் காரணம் கருதத் தேவையில்லை(529) அவ்வாறு வரும் சுற்றத்தாரைத் தேர்ந்தே தமராக்கிக் கொள்ள வேண்டும் (530).

இக்குறட்பாக்கள் வேந்தருக்கு மட்டுமல்லாது சாதாரண மனிதர்களுக்கும் உரிய முறைமையே ஆகும். சுற்றத்தாருக்குள் ஏற்படும் மனக்கசப்புகளுக்குக் காரணம் இருக்கலாம்,இல்லாமலும் இருக்கலாம் என்ற நிலை எல்லா தரப்பினருக்கும் உரியதே.

வீடணன் வருகை புரிந்தபோது அவனைத் தமராக்கிக் கொள்ள இராமன் யோசித்தே முடிவு செய்கிறான். இந்தப்பகுதி மேற்குறள்களுக்கு இலக்கியமாகலாம்.

எனவே வள்ளுவர் வாய்மொழிகள் எக்காலத்திற்கும், எத்தரப்பினர்க்கும் இயல்பான நல்லறங்களைக் கூறக் கூடிய தன்மையது என்பதை மீண்டும் இக்குறள்கள் வாயிலாக நிலைநிறுத்துக் கொள்ள முடிகின்றது.மேலும் சுற்றத்தார்கள் ஒரு மனிதனின் உயர்விற்கு மிக முக்கியமான காரணமாக அமைகின்றனர். அவர்களைப் பேணிக்காக்க கோபமின்மையும் கொடைத் தன்மையுமே தேவை என்ற அடிக்கருத்தை மனித குலம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

12

நுகர்வு கலாச்சாரமும், அதற்கு வள்ளுவர் தரும் மாற்றும்

தற்கால உலகிற்குப் பல பெயர்களை முன்மொழியலாம். அவசர உலகம், இயற்கையைப் பாழாக்கும் உலகம், மரபுகளைப் புறந்தள்ளும் உலகம், நுகர்வு உலகம் இப்படிப் பல பெயர்களை அதற்கு வழங்க இயலும். குறிப்பாக நுகர்வு கலாச்சாரம் என்ற பெரும் சிக்கல் இன்று இந்த உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. உலகிலும், உலக மக்களிடத்திலும் நுகர்வுத் தன்மை அதிக மாகி வளர்ந்து வருகிறது.

பல பொருட்கள் சந்தைக்கு வருகின்றன. அவை பல நாட்டின் தயாரிப்பு களாக நம் நாட்டிற்குள் அடியெடுத்து வைக்கின்றன. அவற்றை நண்பர்கள், சுற்றியிருக்கிற சொந்தங்கள், அருகிருக்கின்ற வீட்டார் வாங்குகின்றனர். இதன் காரணமாக இந்த வசதியை நாமும் பெற விழைகிறோம். நமக்குத் தேவை யில்லாதவற்றைக் கூட நாம் வாங்கிடப் பொருள் செலவு செய்கிறோம். வாங்கிய பின் அதனைப் பயன்படுத்தக் கூட நேரமில்லா சூழலில் நம் வீட்டிலும் அப்பொருள் இருக்கிறது என்ற நினைவு முழுமையைக் கொண்டுவருகிறது. இருந்தாலும் இந்த முழுமைவந்து சேர்ந்து சுவடு முடிவதற்குமுன்பே அதாவது இரண்டு வார, அல்லது இரண்டு மாத காலத்திற்குள் அதே வசதியை மேம்படுத்தித் தருகிற மற்றொரு படைப்பு சந்தைக்கு வந்துவிடுகிறது. நீங்கள் இன்னும் இதற்கு மாற வில்லையா என்ற விளம்பரம் நம்மைஅடுத்த கட்டத்திற்கு நகரச் செய்கிறது.

ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்னதாக ஒரு பொருள் கெட்டுப் போனால் அதனைச் சீர் செய்யவே முதலில் எண்ணுவோம். சீர் செய்ய ஆளும் இருந்தார்கள். பல முறை சீர் செய்யப்பட்ட வானொலியில் பாடல் கேட்கும் காலம்

அந்தக் காலம். பலமுறை சீர் செய்யப்பட்ட கடிகாரத்தில் மணி பார்க்கும் காலம் அந்தக் காலம். ஆனால் இப்போது சீர்கெட்டுப்போன பொருட்களைத் தூக்கி எறிந்து விடுகிற நிலமை வந்தாகிவிட்டது.

வணிகர்கள் வணிகம் பெருகிட பழைய பொருளைத் தந்துவிட்டு புதிய பொருள்களை மாற்றித்தருகிறார்கள். வாங்கும் சக்தியைப் பெருக்க சந்தையில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம் இது. கெட்டுப்போன எந்தப் பொருளையும் சீர் செய்ய ஆளும் கிடைப்பதில்லை. மேலும் சீர் செய்யப் போகையிலேயே புதிதாக வாங்கிக் கொள்ளுங்கள் என்ற அறிவுரையையும் சொல்லத் தயாராகி விட்டார்கள்.

மெல்ல மெல்ல மாதம் தோறும் செலவுகளைப் பெருக்கி, வசதிகளைப் பெருக்குவதான இந்த மாயையில் தற்கால உலகம் தவித்துக் கொண்டு இருக்கிறது. இதுவே நுகர்வுக் கலாச்சாரத்ல் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டு ஆகும்.

இதனடிப்படையில் நோய்வந்து நலிந்து போன குழந்தை, மனைவி, தாய், தந்தை, பாட்டி எல்லோரையும் ஓரங்கட்டிவிடவே எண்ணம் தோன்றும். பொருள்களுக்கு ஏற்பட்ட நிலையே மனிதர்களுக்கும்.

பயன் உண்டோ இல்லையோ வாங்கும் திறனை அதிகரிக்கச் செய்யும் மாய வலைக்குள் இப்போது உலகம் சிக்கிக் கொண்டிருக்கிறது. பயன் ஒன்றை மட்டுமே கருதி இந்த உலகம் வேகமாக முன்னேறிவருகிறது. பயனற்றவர்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அல்லது அவர்களை ஒதுக்கியாக வேண்டிய கட்டாயம் வந்தாகிவிட்டது.

மேற்காட்டிய செய்திகளை மனிதருக்கும் பொருளுக்குமான தொடர்புகள் என்று வகை பிரித்துக் கொள்ளலாம். மனிதருக்கும் மனிதருக்குமான உறவுகளும் இவ்வாறே இருக்கின்றன. மனிதர்கள் சிரிக்க, பேச, மகிழ மறந்து போய் ஓடுகிறார்கள். ஏன் இந்த ஓட்டம். எந்த வேலையை முடிக்க... எந்த வேலையும் முடிவடையப் போவதில்லை. இருந்தாலும் இந்த ஓட்டம் எதற்காக.

கொஞ்ச நேரம் கிடைத்து யாரிடமாவது பேச முனைந்து விட்டால் அவர் நம்மிடத்தில் இருந்து என்ன கிடைக்கும், இவரோடு பேசுவதால் எதாவது பணம் வருமா என்ற நோக்கத்திலேயே பேசுகிறார், பழகுகிறார், சிரிக்கிறார். அப்படி எதுவும் பணம் கிடைக்காது என்று தெரிந்துவிட்டால் எதாவது தகவல் கிடைக்குமா.. அதை எதையாவது திரித்து, மாற்றிக் காட்டி யாரையாவது பழிவாங்க இயலுமா அல்லது யாரையாவது குற்றம் கூற முடியுமா என்ற நோக்கம்தான் இப்போதைய மனித பழக்கத்தில் மிஞ்சிக்கிடக்கிறது. கடை முதலாளி கடைக்கு வருபவரிடம்

பேசுகின்ற பேச்செல்லாம் வியாபார நோக்கமுடையதாக இருப்பதைப்போல இந்த நுகர்வு உலகத்தில் ஒவ்வொருவரும் வியாபார ரீதியாக பரிமாற்றங்களைப் பரிமாறிக்கொள்ளவே விரும்புகின்றனர்.

ஒரு நிகழ்வுக்கு ஒருவரை அழைத்தால் அழைத்த அந்த ஒருவர் பின்னால் நடக்கப் போகும் ஒரு நிகழ்விற்கு இவரை அழைத்தாக வேண்டும். ஒரு நிகழ்விற்கு வந்து மொய் வைத்துவிட்டுப்போய்விட்டால் அடுத்து அவரின் வீட்டிற்கு இவர் மொய் எழுதினால்தான் கணக்குச் சரியாகும். ஒருவருக்கு ஒருவர் பாராட்டு விழா நடத்திவிட்டால் பின்னாளில் பாராட்டுப் பெற்ற மனிதர், பாராட்ட முன்வந்தவரைப் பாராட்ட வேண்டிய கடப்பாட்டிற்கு ஆளாகியே ஆகவேண்டும். ஒருவரின் பெருமைகூறும் எழுத்துச்சீலைகளைப் பொது இடங்களில் வைத்துவிட்டால் அதற்கு அவர் பின்னாளில் தக்க நிலையில் சமம் செய்தே ஆகவேண்டும். கொள்வதும், கொடுப்பதுமான உலகத் தொடர்பு இதுவாகிவிட்டது.

தரப்படும் பரிசுகள், பாராட்டுகள் முதலியனவற்றின் நிலை இன்னமும் மோசம். பரிசுகள், பாராட்டுக்கள் தேவைப்படுபவர்க்கு விற்கப்படுகின்றன. அல்லது வாங்கப்படுகின்றன. இதுபோலவே அனைத்துத் தரப்பு மக்களும் பழகி விட்டார்கள். இவ்வாறு மெல்ல மெல்ல அனைத்துத் தரப்பாரிடமும் எதிர்பார்ப்புகள் அதிகமாகிவிட்டன. அவ்வெதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது ஏமாற்றமே மிஞ்சு கின்றன. ஏமாற்றத்தின் உச்சத்தில் வாழ்க்கையில் வெறுமை புலப்படும்.

இனி தந்தை, தாய், மகன், மகள் உறவுகள் கூட கைமாறு கருதியே வாழ்க் கையை வாழவேண்டி வந்துவிடும். இச்சூழலில் உண்மையான நட்பு, தோழமை எப்படி வளர்ப்பது, இனம் காண்பது என்ற கேள்விக்குப் பதில் தேட வேண்டியிருக் கிறது.

பாரதி கண்ணனைத் தோழனாகக் கொண்டதன் நோக்கம் தனக்கு இணையான ஒரு தோழன் நடப்பு வாழ்க்கையில் கிடைக்காமல் போனதன் ஏக்கம் தான் என்றால் அது மிகையில்லை. இதுபோல ஒரு கனவுத் தோழனை, கற்பனை நண்பனை மட்டுமேநாம் தரிசிக்க முடியுமோ. . உண்மை நண்பனைக் காட்டும், கொண்டு தருகிற வழி எது என்றுச் சிந்தித்தால் வள்ளுவப் பெருந்தகை வழிகாட்டு கிறார்.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். (குறள் 813)

இந்தக் குறளில் மூவர் ஒரே நேர்நிலையில் வைத்துப்பார்க்கப் படு கின்றனர்.

கள்வர், பெறுவது கொள்வார், உறுவது சீர்தூக்கும் நட்பினர் என்ற மூவரும் தீ நட்பிற்குச் சான்றுகள் என்கிறார் வள்ளுவர். கள்வருடன் விரும்பி நட்புக் கொள்ளக் கூடியவர்கள் எவருமில்லை. கொடுக்கின்ற பொருளை எண்ணியே நம்மிடம் வருகின்ற நண்பர்கள், இவரோடு பழகினால் என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்தே வருகின்ற நண்பர்கள் ஆகியோரும் கள்வருடன் வள்ளுவரால் ஒப்பு வைக்கப்படுகின்றனர்.

தானே உழைக்காது பிறர் உழைப்பை, பிறர் செல்வத்தை எடுத்துக் கொண்டு வாழ்பவர்கள் கள்வர்கள். அவர்கள் போலவே பயன்கருதி நட்பு பாராட்டும் நண்பர்களும் தன் உழைப்பில் வாழாது பிறரைச் சார்ந்து, பிறர் செல்வத்தை விரும்பி வாழ்கின்றனர். எனவே அவர்கள் கள்வருக்கு நேராக வைக்கத் தக்கவர்கள்.

நண்பர்களின் நோக்கத்தை அறிந்து கொண்டு அவர்களைத் தோழமை பாராட்டிக் கொள்ளவேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வழிகாட்டு தலாகும்.

<u>குறிப்பாக :</u> பெறுவது கொள்வார் என்பதற்கு விலைமகளிரை விளக்கமாக அனைத்து உரையாசிரியர்களும் கொள்ளுகின்றனர். இதனை உற்று நோக்கினால் கொடுப்பது கொள்வார் ஆடவரில் இருப்பது இல்லையா? என்ற கேள்வி எழும். எனவே இத்தொடருக்கு மனிதர்கள் எனப் பொதுவாகக் கொள்வதே பொருத்தம்.

வாழ்கின்ற வாழ்க்கையில் கிடைப்பதை எண்ணியே வரும் காக்கைக் கூட்டத்தை கடிந்து ஒதுக்கி, நல்ல நண்பர்களைப் பெற்றால் இந்த வணிக உலகை, நுகர்வு உலகை நிமிர்த்த இயலும். இதற்கு வள்ளவமும் வழிகாட்டுகிறது. தகவல் திரிப்பையும், தேவையற்ற பொருள்களை வாங்குவதைத் தவிர்த்தலும் இன்றைய இக்கட்டுகளில் இருந்து மக்களை விடுவிக்கும். நுகர்வின் ஆதிக்கத்தைக் குறைத்து இயல்பை, மனிதப் பண்பை மிகுவிக்க உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

அப்பாவைப் பற்றி எழுதி இருக்கிறேன்



எனக்கு அப்பாவும் அம்மாவும் மிக பிடிக்கும். எனக்கு அப்பா உதவி செய்வார்கள். அப்பா தினமும் கல்லூரி செல்வார்கள். காலையில் அப்பா படிப்பார்கள். அப்பா கம்ப்யூட்டர் வேலை பார்ப்பார்கள். அப்பாவிற்கு நான்தான் செல்லக் குழந்தை. அப்பா காரைக்குடி மண்டபத்தில் பேசுவார்கள். அப்பா ராஜாஸ் கல்லூரியில் வேலை பார்க்கிறார்கள். அப்பா நான் கேட்டதை வாங்கித் தருவார்கள்



அன்பு மகள்

பழ. அழகம்மை,

இரண்டாம் வகுப்பு ஆ. பிரிவு.

வயிரம் பள்ளி.

புதுக்கோட்டை.



முனைவர் மு. பழனியப்பன்

ஆய்வாளர், பேச்சாளர்,
எழுத்தாளர், கவிஞர்,
பேராசிரியர், நூல்களின் ஆசிரியர்,
கணினித் தமிழ் ஆர்வலர்

பெரியபுராணத்தில்
பெண்கள் ஓர் ஆய்வு,

சி. கே. சுப்பிரமணிய முதலியாரின்
பெரியபுராண உரைத்திறன்,

விடுதலைக்கு முந்தைய
பெண்களின் நாவல்கள்,

பெண்ணிய வாசிப்பு,
மகாராணியின் அலுவலக வழி,
போன்றன
இவரின்
தமிழிலக்கியக் கொடைகள்.

கணினியும் தமிழும்,

இணைய உலகம்,

நேர்/நிரை = 1/2

போன்றன
இவரின்
கணினித் துறை சார்ந்த நூல்கள்.

SURYA SVK 04562 223315

மீனாட்சி நூலகம்

புதுக்கோட்டை.